# உதயன்

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 304 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை (25/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

www.onlineuthayan.com



பங்களாதேஷ்
பாகிஸ்தான்
பல்லேகல
இரவு 7.30
உதயனின்
தினம் ஒரு பரிசு
பக்கம் 27


# மரநிழலில் மந்தைகள் போல் கேப்பாபிலவு மக்கள் அவலம்

## அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாததால் பெண்கள், சிறுவர்கள் கண்ணீர்

வவுனியா,செப்ரெம்பர்25

பலத்த எதிப்புக்கும் மத்தியில் செட்டிகுளம் நலன்புரி முகாமில் தங்கியிருந்த கேப்பாபிலவு, மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த 361 குடும்பங்களும் நேற்றுத் திங்கட்கிழமை இராணுவத்தினரால் பலத்த பாதுகாப்புடன் வற்றாப்பளைக்கு கொண்டுவரப்பட்டன. பலவந்தமாக இந்தக் குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கைவேலி மற்றும் வற்றாப்பளை மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் எந்த வித அடிப்படை வசதிகளும் இன்றித் தங்கவைக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமையால் தாம் அங்கு பெரும் அவலப்பட்டுக் கொண்டிருந்ததாக அந்த மக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை செட்டிகுளம் நலன்புரி நிலையத்துக்குச் சென்ற இராணுவத்தினரும் அரச அதிகாரிகளும் அங்கிருந்த மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அங்கிருந்த மக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டார்கள். அவர்களுடைய பொருள்கள் அனைத்தும் லொறிகளில் ஏற்றப்பட்டன.

முதலில் மந்துவில் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்கள் அங்கிருந்து பிற்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு நோக்கிக் கொண்டு செல்லப்பட்டன. இந்தக் குடும்பங்கள் புதுக்குடியிருப்பு கைவேலி என்ற இடத்தில் மர நிழல்களின் கீழ் நேற்று மாலை 5 மணியளவில் இறக்கிவிடப்பட்டன.

பார்க்க பக்கம் 4

### "எங்கே செல்கிறோம்? எமக்கே தெரியாது"

முல்லைத்தீவு, செப்.25

செட்டிகுளம் நலன்புரி முகாமில் இருந்து நேற்று அழைத்து வரப்பட்ட கேப்பாபிலவு, மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தம்மை எங்கு கொண்டு செல்கிறார் கள் என்பது கூடத் தெரியாமல் திண்டாடினார்கள்.

'' நாம் அவர்களுடன் பேசிய போது அவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார் கள்? எங்கே குடியமர்வு செய்யப்பட உள் ளார்கள்? என்பது குறித்த எந்தத் தகவலும் அவர்களுக்குப் முழுதுமாகத் தெரிவிக்கப்படவில்லை. இதனால் பலர் தாம் எங்கே கொண்டு செல்லப்படுகிறோம் என்பது தெரி யாமல் கண்ணீர் விட்டவாறு இருந்தனர் என்று எமது செய்தியாளர் அங்கிருந்து தெரிவித்திருந்தனர்.

''எங்க கொண்டு போறாங்

பார்க்க பக்கம் 4

### "தொலைபேசி இலக்கம் என்ன?" மிரட்டிய சீருடையற்ற நபர்கள்

முல்லைத்தீவு, செப் 25

செட்டிகுளம் அகதி முகாமில் இருந்து மீள்குடியமர்வுக்காக அழைத்துச் செல்லப்பட்ட மக்களிடம் சீருடையற்ற நபர்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் மக்களின் தொலைபேசி இலக்கங்களையும் அவர்கள் மிரட்டிப் பெற்றுக் கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித் தன.

மர நிழல்களின் கீழும், வற்றாப் பளை மகா வித்தியாலயக் கட்டடத்திற்கும் இருந்த மக்களிடம் சென்ற இந்த சீருடையற்ற நபர்கள் அரை குறைத் தமிழில் உரையாடி அந்த மக்கள் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசிகளின் இலக்கங்

பார்க்க பக்கம் 4

### நீதிமன்ற தாக்குதல்: சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

மன்னார்,செப் 25

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதான 43 பேரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் மற்றும் மன்னார் நீதிவானுக்கு தொலை

பார்க்க பக்கம் 4

### முள்ளிவாய்க்காலில் தளம் இன்று திறக்கிறார் ஜனாதிபதி

கிளிநொச்சி, செப்.25

வன்னிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதுடன் முள்ளிவாய்க்காலுக்கும் சென்று அங்கு படைமுகாம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இன்று காலை கிளிநொச்சிக்கு வரும் ஜனாதிபதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்

பார்க்க பக்கம் 4

### சர்வதேச மீள்குடியமர்வு நியமத்தை மீறியது அரசு

#### கேப்பாபிலவு மக்கள் வெளியேற்றப்பட்டமை குறித்து உலக நாடுகளிடம் முறையிடுவோம் என்கிறார் மனோ

கொழும்பு,செப் 25

'இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டும் என்பதுவே சர்வதேசச் சட்டம். இதை ஐ.நாவின் மீள்குடியேற்ற ஒழுங்கும் அங்கீகரித்துள்ளது. இலங்கையில் போரினால், இடம் பெயர்ந்து முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களில் பெருந்தொகையானோர், தமது சொந்த கிராமங்களில் குடியேற்றப்படவில்லை. அந்த வகையில் அரசு, மீள்குடியேற்றம் தொடர்பான சர்வதேசச் சட்டங்களை

பார்க்க பக்கம் 4

### கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கிழக்கில் 28 இல் பதவியேற்பர்

திருகோணமலை,செப் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமலையில் நடைபெறவுள்ளது.

கடந்த 08ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று மாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 11 உறுப்பினர்களும் 28ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாகக் கிழக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பார்க்க பக்கம் 4

### இலங்கைச் சிறையில் தமிழக மீனவர் சாவு

கொழும்பு,செப் 25

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத்

பார்க்க பக்கம் 4

### அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டப் பேரணிகள்

கொழும்பு,செப் 25

இலவசக் கல்வி மற்றும் அரச பல்கலைக்கழகத் திட்டத்தைப் பாதுகாக்குமாறு கோரி பல்கலைக்கழக ஆசிரியர்களினாலும் பல்கலைக் கழக மாணவர்களினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிகள் கண்டியிலிருந்தும் காலியிலிருந்தும் நேற்று ஆரம்பமாகின.

காலித் துறைமுகத்திலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் ஆர்ப்பாட்டப் பேரணியும் பேராதனைப் பல்கலைக்

பார்க்க பக்கம் 4

### மாகாண சபைகளுக்கு அமைச்சர்கள்; ஜனாதிபதி முன்னால் பதவியேற்பு

#### கிழக்கு மாகாண அமைச்சரவையில் தமிழர்களுக்கு இடமில்லை

கொழும்பு,செப் 25

வடமத்தி, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டனர்.

அத்துடன், மேற்படி மூன்று மாகாண சபைகளுக்குமான அமைச்சர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மு.கா. சார்பாக ஹாபிஸ் நஸீர் அஹமட்டும், எம்.எம். மன்சூரும் முறையே விவசாயத்துறை மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர்களாக சத்தி

பார்க்க பக்கம் 4

### தனித் தமிழீழம் அமைவதை யாராலும் தடுக்க முடியாது

#### அப்துல் கலாமின் ஆலோசகர்

புதுடில்லி,செப் 25

இந்தியா,அமெரிக்காவில் உள்ளது போல் ஜனநாயக முறையை இலங்கை கொண்டுவரவில்லை என்றால், தனித் தமிழ் ஈழம் அமைவதை எவராலும் தடுக்க முடியாது என்று இந்தியாவின் முன்னாள் ஜனா

பார்க்க பக்கம் 4

**8** ஜார்க்கண்டில் ஆசிரம பிரார்த்தனைக் கூட்டத்தின் போது ஏற்பட்ட திடீர் சனநெரிசலில் சிக்கி 12 பேர் சாவு, 20 இற்கும் மேற்பட்டோர் காயம்.

**9** ஆப்கானிஸ்தானில் இருந்து 2014 ஆம் ஆண்டு நேட்டோப் படைகள் முழுமையாக வெளியேறவுள்ளன. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் சீனாவுடன் இணைந்துள்ளது.

**10** அமெரிக்காவுடன் போட்டி போடும் அளவுக்கு இராணுவ பலத்தை அதிகரித்து வரும் சீனா இப்போது முதன் முதலாக இராணுவத்தில் விமானந்தாங்கிக் கப்பலைச் சேர்த்துள்ளது.

**22** பாடசாலை அணிகளுக் கிடையிலான தேசிய மட்ட மகளிர் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது சுழிபுரம் விக்ரோறியா அணி.

### புலமைப்பரிசில் பெறுபேறு நேற்றிரவு வெளியானது

தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு 12.20 இற்கு வெளியாகியது. நாடெங்கும் உள்ள பரீட்சார்த்திகள், பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நேற்று நள்ளிரவு முதல் பெறுபேறுகளை அறிய முடிந்தது.

### வண்ணை பெருமாளுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம், வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய வருடாந்த தேர் உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று வரதராஜப் பெருமாள் காலை 9.30 மணியளவில் தேரில் ஆரோகணிப்பார். (ந)

### வடமத்திய முதலமைச்சராக எஸ்.எம்.ரஞ்சித்

கொழும்பு,செப் 25

வடமத்திய மாகாண முதலமைச்சராக எஸ்.எம். ரஞ்சித்தும், சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக மஹிபால ஹேரத்தும் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ முன்னிலையில் சத்தி யப்பிரமா

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மு.கா. உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, செப். 25

மு.கா.தலைமைத்துவத்தால் அமைச்சர் பதவி வழங்கப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த நிலையில், அவ்வாக்குறுதி மீறப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து மு.கா. கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் நேற்று இடம்பெற்ற சத்தியப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளாது பகிஷ்கரித்தனர்.

கிழக்கு மாகாண சபைக்கு வெற்றியீட்டிய அம்பாறை மாவட்ட மு.கா. உறுப்பினர் எம்.எம். ஜெமீல் மற்றும் திருமலை மாவட்ட உறுப்பினர் முஹம்மட் அன்வர் ஆகியோரே நேற்றைய சத்தியப் பிரமாண வைபவத்தைப் பகிஷ்கரித்தவர்களாவர். கிழக்கு மாகாண அமைச்சரவையில் மு.காவுக்கு அரசால் இரு இடங்கள் வழங்கப்பட்டன.

இதற்கு எவரை நியமிப்பது என்பது குறித்து மு.கா. உயர்பீடம் நேற்று முன்தினம் இரவு கூடி ஆராய்ந்தது. இதன் பின்னர் நேற்றுக்காலை 9 மணிக்கு மீண்டும் கூடிய மு.கா.உயர்பீடம் மாகாணசபை உறுப்பினர்களான மன்சூர் மற்றும் நசீர் அஹமட் ஆகியோரின் பெயர்களை அமைச்சுப் பதவிகளுக்காக அரசிடம் சிபாரிசு செய்தது.

இதனையடுத்து மாகாண சபை உறுப்பினர் ஜெமீல், கட்சித் தலைமையுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இவருடன் அன்வரும் இணைந்துகொண்டு தனது அதிருப்தியையும் வெளிப்படுத்தினார்.

மு.கா. தலைமையகத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பெரும் குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து கூட்டத்திலிருந்து ஜெமீலும், அன்வரும் வெளிநடப்புச் செய்தனர்.தமது தொலைபேசிகளைச் செயலிழக்கச் செய்த குறித்த் இருவரும், கொழும்பில் தலைமறைவாகினர். இருவரையும் சமாதானப்படுத்தி பதவிப் பிரமாணம் செய்வதற்கு அழைத்துச் செல்ல மு.கா. முக்கியஸ்தர்கள் பலரும் முயற்சித்த போதிலும் அது கைகூடாத நிலையில், ஏனைய 5 மாகாண சபை உறுப்பினர்கள் மாத்திரமே பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### இலங்கையிலிருந்து ஆஸி. சென்று

# தஞ்சம் கோருவோருக்கு தற்காலிக அனுமதி

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கான்பரா,செப் 25

புகலிடம் கோரி வருபவர்களுக்கு நிரந்தரக் குடியேற்ற அனுமதி வழங்காமல் சொந்த நாட்டில் ஆபத்து நீங்கும் வரை ஆஸ்திரேலியாவில் தங்கியிருப்பதை அனுமதிக்கும் தற்காலிக அனுமதியை அரசு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ஜூலி பிஷப் கோரிக்கை விடுத்துள்ளார்.



கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்த இலங்கையின் 18 புகலிடக் கோரிக்கையாளர்களை மேலதிக பரிசீலனைக்காக பசுபிக் தீவான நௌறுவுக்கு கொண்டு செல்ல ஆஸ்திரேலிய அதிகாரிகள் முற்பட்டபோது தாம் இலங்கை திரும்புவதற்கு விரும்புவதாக அவர்கள் கூறியிருந்தனர். இந்நிலையில் கிறிஸ்மஸ் தீவில் இருந்து அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

இதனிடையே ஆஸ்திரேலியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டு எதிர்கட்சித் தலைவர் ஜூலி பிஷப், கடந்த மூன்று வருடங்களாக ஆஸ்திரேலியா அரசு புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பத்தை பரிசீலித்த நடைமுறை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நௌறு தீவுக்குச் சென்றால் தண்டனையில் இருந்தும் உயிராபத்தில் இருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும் என்பதை அறிந்தும் அவர்கள் இலங்கை திரும்ப இணக்கம் தெரிவித்தமை பல கேள்விகளை எழுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஆபத்து ஏற்படாது என உறுதி செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் ஆஸ்திரேலியா நோக்கி வரும் படகுகளைத் திருப்பி அனுப்பும் கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த இலங்கையர்கள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்தமை சட்டவிரோத குடியேற்றத்தில் ஈடுபடும் குற்றக் கும்பல்களை ஒடுக்குவதில் ஏற்பட்டுள்ள சிறந்த முன்னேற்றம் என ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் கூறியிருந்தார்.(த)



'சுதந்திரக் கல்வியை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக அணிதிரள்வோம்' எனும் தொனிப் பொருளில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களினால் பேரணி ஒன்று நேற்று நடத்தப்பட்டது. மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பு நிறைவுக்கு கொண்டுவரப்படவில்லை. இந்நிலையில் தமது கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்களால் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டது. (த)

## கடந்த ஆண்டு 262,960 பேருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

கொழும்பு,செப் 25

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2011 ஆம் ஆண்டு புள்ளி விவர அறிக்கையின்படி கடந்த வருடம் 2 லட்சத்து 62 ஆயிரத்து 960 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்களுள் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 290 பேர் பெண்களாவர். ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 670 பேர் ஆண்களாவர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விற்பனை மற்றும் ஆள்சேர்ப்புப் பிரதி முகாமையாளர் ஏ.கே.யூ.ரோஹன தெரிவித்தார்.

சவூதி அரேபியா, குவைத், கட்டார், லெபனான், ஓமான், பஹ்ரைன், சைப்ரஸ்,தென் கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு ராச்சியம் ஆகிய நாடுகளுக்கே இலங்கையர் இவ்வாறு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர்.

தொழில்சார் துறையைப் பொறுத்த வரையில் கணக்காளர், பொறியியலாளர், கடற்படைப் பொறியியலாளர், தகவல் தொழில்நுட்பம் போன்ற உயர் மட்டத்துறையிலும் மின்சாரத் திருத்த வேலைகள், தாதிமார் மற்றும் உதவியாளர் போன்ற மத்திய தர வேலைகளுக்கும் குறித்த நாடுகளில் போதிய வேலைவாய்ப்புகள் இருப்பதாக பிரதி முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (த)

## நாவற்குழி வரை வந்தது லக்ஷபானா மின்சாரம்

### நல்லூர் ஆலயத்துக்கும் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.25

ஏ-9 வீதியூடாக நாவற்குழி வரைக்கும் லக்ஷபானா மின்சாரம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பரீட்சார்த்தமாகக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று கிளிநொச்சியில் ஜனாபதியினால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்த லக்ஷபான மின் விநியோகத்திட்டதில் இருந்து 10 மெகா வாற்ஸ் மின்சாரம் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்த மின்சாரம் தென்மராட்சி மற்றும் வடமராட்சி பிரதேசங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு நாவற்குழி வரை கொண்டுவரப்பட்ட இந்த மின்சாரம் அங்கு பரீட்சார்த்தமாக விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதியால் இன்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்படும் லக்ஷபானா மின்சாரத்தை சுப நேரத்தில் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## கடற்படைத் தளபதி அட்மிரலாக தரமுயர்வு

கொழும்பு,செப் 25

கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அட்மிரலாக தரமுயர்த்தப்பட்டுள்ளார். இது வரை அவர் வைஸ் அட்மிரல் தர அதிகாரியாக இருந்தார்.

கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்க, அட்மிரலாக தரமுயர்த்தப்பட்டபின் கடற்படைத் தலைமையகத்துக்கு வந்தபோது 48 கடற்படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பு இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜனவரி 15 ஆம் திகதி இவர் கடற்படைத் தளபதியாக பதவியேற்றார்.

அட்மிரல் திஸாநாயக்க நாளை கடற்படைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். புதிய தளபதியாக ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தான் பெற்ற பிள்ளைகளை கொலை செய்தமைக்காக 18 வருட கடூழியச் சிறை

### நான்கு வருடங்களின் பின்னர் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றம் குறைக்கப்பட்டு தீர்ப்பு

அம்பாறை, செப்.25

கணவனின் நடத்தை காரணமாக குடும்ப வாழ்வில் வெறுப்படைந்து, விரக்தி கொண்ட நான்கு பிள்ளைகளின் தாய் உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்குக் வந்தாள்.

தானில்லா விட்டால் தன் பிள்ளைகள் கஷ்டப்படுமே என்ற கவலைகொண்ட அத்தாய் தன் நான்கு பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளி உயிரை மாய்த்துக்கொள்ளச் செய்யவும் முனைந்தாள்.

கிணற்றினுள் தாயால் தள்ளிவிடப்பட்ட இருபிள்ளைகள் உயிரிழந்த நிலையில் மற்றைய இரு பிள்ளைகளில் ஒரு பையன் தப்பியோடி தகவல் கொடுத்ததன் பேரில் அந்த இரு பிள்ளைகளும் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

வவுனியா சின்னசிட்டிகுளம், நேரியகுளம் எனுமிடத்தைச் சேர்ந்த றிஸ்வான் நபீசா எனும் மேற்படி நான்கு பிள்ளைகளின் தாய் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டவழக்கில் மொத்தமாக 18 வருட கடூழிய சிறைத்தண்டனையும், 70 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

குறித்த தாயான றிஸ்வான் நபீசா தனது பிள்ளைகளான றிஸ்வான் அனீஸா (வயது -6), றிஸ்வான் பாத்திமா நலீலா (11 மாதங்கள்) ஆகியோரை கொலை செய்ததாக இரு கொலைக் குற்றச்சாட்டுகளுக்கும்,

ஏனை இரு பிள்ளைகளான ஆசிக்முஹம்மட் (வயது -10), ஆசிக்கா (வயது -14) ஆகியோரை கொலை செய்ய முயற்சித்ததாக இரு குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழங்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

கடந்த 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் எதிரியான றிஸ்வான் நபீசா, தான்கணவனின்நடத்தையால் மனமுடைந்து மன விரக்தியில் இவ்வாறு நடந்து கொண்டதாகவும், குற்றத்தைக் குறைத்துத் தரும் பட்சத்தில் அதனை ஒப்புக் கொள்ளத் தயாரெனவும் சட்டமா அதிபருக்கு கருணை மனு ஒன்றைச் செய்திருந்தார்.

இதன்படி கொலைக் குற்றச்சாட்டுக்குப் பதிலாக, கொலையாகாத மரணத்தை உண்டுபண்ணிய குற்றமாக சட்டமா அதிபரால் திருத்திய குற்றச்சாட்டுப் பத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமது கருணை மனுவின் பிரகாரம் குறைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை (நான்கு குற்றச்சாட்டுக்கள்) றிஸ்வான் நபீசா மேல் நீதிமன்றத்தில் ஏற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மரணமான இரு பிள்ளைகள் தொடர்பில் கொலையாகாத மரணத்தை ஏற்படுத்திய இரு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 7 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் ரூபா தண்டமும், தண்டப் பணம் கட்டத் தவறினால் மேலும் இரு வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

அத்துடன் ஏனைய இரு கொலை முயற்சி குற்றச்சாட்டுகளுக்கும் தலா இரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டதோடு தண்டப் பணம் செலுத்தத் தவறினால் ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனை மேலதிகமா அனுபவிக்க வேண்டுமெனவும் அவர் தீர்ப்பு வழங்கினார்.

குறித்த கடூழியச் சிறைத் தண்டனைகளை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

வழக்கின் சாட்சிகளாக குறித்த பெண்ணின் கணவனும், மகன்,மகளுமே முன்னிலையாகியமையும் குறிப்பிடத்தக்கது. (10-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீடமைப்பு பணி ஒக்.2 ஆரம்பம்

*யாழ்ப்பாணம், செப்.25*

*இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டப் பணிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இந்திய அரசின் நிதியுதவியில் இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் ஒப்பந்தம் 2012 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது.*

இதனடிப்படையில் முன்னோடித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 150 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பயனாளிகளிடமே பணத்தைக் கொடுத்து வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகளில் முதல் கட்டம் தெல்லிப்பழை, மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளன.

இதற்காக 500 பயனாளிகள் வரையில் இந்திய வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடமைப்புக்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் கட்டம் கட்டமாக அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படும்.

இந்திய வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக காட்சிப்படுத்தப்பட்டு அதில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கமையவே இறுதிப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகளை மேற்பார்வை செய்யும் முகவர் நிறுவனம் யார் என்பது குறித்து விவரம் விரைவில் தெரியவரும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி எழுதுமட்டுவாழில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

குடும்பஸ்தரை ஏமாற்றிய சிறுவர்கள்

## மதுவைக் குடித்து மயங்கி பறிகொடுத்தார் உடைமைகளை

*தென்மராட்சி, செப்.25*

*மறைவிடம் ஒன்றில் நின்று மதுபானம் வாங்கித் தருமாறு சிறுவர்கள் கோரிய நிலையில் அவற்றை வாங்கிக் கொடுத்தவர் உடைமைகளை இழந்தார்.*

*இந்தச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது. வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவரிடம் மறைவிடம் ஒன்றில் நின்ற சிறுவர்கள் தமக்கு மதுபானம் வாங்கித் தருமாறு கேட்டுள்ளனர்.*

*அவர்களிடம் பணம் பெற்று மதுபானம் வாங்கிக் கொடுத்தபோது தம்முடன் குடிக்க வருமாறு சிறுவர்கள் கோரியுள்ளனர். இவர்களின் 'அன்புத் தொல்லையை' மீறமுடியாமல் அவர்கள் கொடுத்த மதுவை அருந்திய சில நிமிட நேரத்தில் குறித்த நபர் மயக்கமானார்.*

*மறுநாள் காலையில் அவ்வழியே சென்ற ஒருவர் அவரைத் தட்டி எழுப்பியபோதுதான் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மோதிரம், கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் ஆகியவை திருடப்பட்டமை தெரியவந்தது.*

*மதுவின் தாக்கத்தால் பல மணிநேரம் கண்விழிக்க முடியாத நிலை ஏற்பட்டது.*

*சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கே இந்த நிலைமை ஏற்பட்டது. (ம-9)*

## கல்லூரிக் கட்டடத்துக்கு ஒயில் ஊற்றிய சந்தேகத்தில் இரு மாணவர்கள் கைது

புதிதாக வர்ணம் தீட்டப்பட்ட கல்லூரிக் கட்டடத்துக்கு கழிவு ஒயில் ஊற்றியும், குப்பைத் தொட்டிக்கு நெருப்பும் வைத்துவிட்டும் சென்ற இரு மாணவர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு கரவெட்டியில் உள்ள கல்லூரி ஒன்றில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

கல்லூரியில் இரவு வேளையில் காவலாளி இருக்கையில் உட்புகுந்த அதே கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் இருவரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர். (ம-8)

## தீவகத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், செப்.25

தீவக வலய கல்விப் பணிப் பாளராக திருஞானம் ஜோண் குயின்ரஸ் நேற்று திங்கட் கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.சத்தியசீலன் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

நேற்றைய தினமே புதிய கல் விப்பணிப்பாளர் பதவியேற்றுக் கொண்டார். வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய வி.இராதாகிருஷ்ணன் ஓய்வு பெற்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டது. (ம-7)

## குழிக்குள் கொட்டப்படும் கழிவுகள் நாவற்குழி ஏ–9 வீதியில் துர்நாற்றம்



கைதடி, செப்.25

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் உள்ள பெரிய குழியிலிருந்து வரும் துர்நாற்றத்தால் இந்த வீதியால் செல்வோர் பல அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த வீதியால் செல்வோர் தமது வீட்டுக் கழிவுகள் மற்றும் மிருகக் கழிவுகளை இங்கு போடுவதாகவும் இதனால் இந்தப் பிரதேசம் எங்கும் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு தேங்கி நிற்கும் நீரால் நுளம்பு பெருகும் நிலையும் காணப்படுகின்றது.

இதேவேளை அரச உணவுக் களஞ்சியத்தில் இரவு வேளைகளில் தங்கும் தென்பகுதி சுற்றுலாப் பயணிகளும் கழிவுகளை இங்கு போட்டுவிட்டுச் செல்கின்றனர்.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த வீதியால் செல்வோர் கூறுகின்றனர். (ம-288)

## கடை உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடையைப் பூட்டிவிட்டு இரவு சென்று காலையில் வந்து கடையைத் திறந்து பார்த்த போது கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கடை உரிமையாளர் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## அபிவிருத்தியிலிருந்து நயினாதீவை புறக்கணியாதீர்

யாழ்ப்பாணம், செப். 25

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழான நயினாதீவு மின்சார அபிவிருத்தியில் ஏன் புறக்கணிக்கப்பட்டது.இதற்கான பதிலை வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு கேள்வி எழுப்பினார் நயினாதீவு பிரதேச சபை உப அலுவலக பொறுப் பதிகாரி ந.மோகனரூபன்.

யாழ். செயலகத்தில் தீவக அபிவிருத்தி கூட்டத்திலேயே பொறுப்பதிகாரி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நயினாதீவில் உள்ள ஏழை மக்கள் தமது நகைகளை அடைவுவைத்தே தங்கள் பகுதி வீடுகளுக்கு மின்சாரத்தினைப் பெறுகின்றனர்.

ஆனால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை நயினாதீவில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறித்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கி எமது மக்களுக்கும் மின்சாரத்தை வழங்க வேண்டும் - என்றார். (50)

## கிணற்றில் இல்லை தண்ணீர் அரச அலுவலர்கள் பாதிப்பு

தென்மராட்சி, செப்.25

தென்மராட்சி கல்வி வலயத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கிணற்றில் தண்ணீர் இல்லை.

வலய அலுவலகத்தில் பணிபுரிவோருக்கு வெளி இடங்களிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வந்து வழங்கப்படுகிறது.

அத்துடன் அத்தியாவசிய தேவைகளுக்கு அருகில் உள்ள குடியிருப்புகளிலிருந்து தண்ணீர் எடுத்து வரப்படுகிறது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக பல குடியிருப்புக்களில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

இதனால் குடியிருப்பாளர் குடிதண்ணீருக்கு நன்னீர் கிணறுகளைத் தேடி அலைகின்றனர். (ம-9)

## நயினாதீவுக்கான குடிதண்ணீர் சேவையை இலகுபடுத்துவதற்கு 'பாஜ்' பெற்றுத் தரப்படும்

### யாழ். அரச அதிபர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

குறிகாட்டுவனில் இருந்து நயினாதீவுக்கான குடிதண்ணீர் சேவையை இலகுபடுத்துவதற்கு வசதியாக 'பாதை'யை (பாஜ்) வடக்கு கடற்படை அதிகாரியிடம் இருந்து பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுவரை படகுகள் மூலம் நயினாதீவுக்கான சேவையை வழமைபோல் நடத்தப் பிரதேச சபை முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

தீவகத்தின் குடிதண்ணீர் மற்றும் கஷ்டங்கள் குறித்து ஆராய்வதற்கான அவசர கூட்டம் வேலணை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றது.

வேலணை பிரதேச செய [illegible] சதீஷன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தீவகம் 30 கிராம அலுவலர்பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். இந்தப் பிரதேசத்துக்கு வறட்சி கால குடிதண்ணீர் விநியோகத்துக்காக வருடாந்தம் நிதி ஒதுக்கப்படுகிறது.

தீவக குடிதண்ணீர் சேவையில் வேலணைப் பிரதேச சபை, புங்குடுதீவு சர்வோதயம், புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கம் மற்றும் புங்குடுதீவு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன முழுமையாக ஈடுபடுகின்றன.

இதில் வேலணை பிரதேச சபை சமூக நல நோக்கோடு மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவுக்கான குடிதண்ணீர் சேவையை வழங்கி வருகின்றது.

எனினும் இந்தச் சேவை மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளது.

விரைவில் குறிகாட்டுவான் - நயினாதீவு படகு சேவைக்குப் பதிலாகப் 'பாஜ்' பாதைச்சேவையைப் பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

இந்த நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, செயலாளர் செ.ரமேஷ், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஐ.குருச்சந்திரநாதன், புங்குடுதீவு சர்வோதய தலைவி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-41)

## கடையில் இருந்த நகைகள் திருட்டு; சந்தேகத்தில் இருவருக்கு மறியல்

வலி வடக்கு, செப். 25

கடையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டின் பெயரில் சந்தேகத்தில் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் பகுதயில் இடம்பெற்ற பதினொரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுச் சம்பந்தமாக இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பெண் ஒருவரும் அடங்குவார்.

கடந்த 04 ஆம் திகதி ஒரு கடையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த சுமார் 27 பவுண் நிறையடைய தங்க நகைகள் மர்மமான முறையில் திருட்டுப் போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளர் முறையிட்டிருந்தார். (ம-86)

## தென்மராட்சிக்கு எங்கும் லக்ஸபான

தென்மராட்சிப்பிரதேசத்துக்கு லக்ஸபான மின்சாரம் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் வழங்கப்படுகிறது.

தேசிய மின் விநியோகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் பரீட்சார்த்தமாகத் தென்மராட்சிப் பிரதேசம் முழுவதுக்குமான செம்மணி மின்மாற்றி மூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

லக்ஸபான மின்சாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்கனவே மீசாலை வரை விநியோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பாம்பு தீண்டியது

காணி துப்புரவுப் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தர் சுருட்டைப் பாம்பால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கொடிகாமம் மருதடி வீதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ப.நேத்திராஜா (வயது-43) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பேசியூடாக மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரனை நேற்று திங்கட்கிழமை மேலதிக நீதவான் ஆர்.திஸாநாயக்க முன்னிலையில் மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 43 சந்தேக நபர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது 43 சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் ஆர்.திஸாநாயக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, மன்னார் நீதிவானுக்கு தொலைபேசியூடாக மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பான வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அமைச்சர் ரிசாத் பதீயுதின் மன்றுக்குச் சமுகமளிக்கவில்லை. இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை அவதானிக்கும் பொருட்டு ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் தனது பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த 12)

## "தொலை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களைப்பெறுவதில் குறியாக இருந்தனர். அப்படி இலக்கங்களை வழங்க மறுத்தவர்களை அவர்கள் கடுமையாக மிரட்டியதாகவும் தெரியவந்தது. (த-410)

## அரசுக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கழகத்திலிருந்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனத்தின் ஆர்ப்பாட்டப் பேரணியும் ஆரம்பமாகின. இவ்விரு ஆர்ப்பாட்டப் பேரணிகளும் எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளன.

பெரதெனியாவில்

இலவசக் கல்வியையும் கல்விச் சுதந்திரத்தையும் வெற்றிக்கொள்வதற்கு அணிதிரள்வோம் எனும் தொனிப்பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட் டப் பேரணி பெரதெனியா பல்கலைக் கழகத்தில் நேற்றுக்காலை ஆரம்பமாகியது.

'தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்காதே', 'உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கு' போன்ற கோரிக்கைகளை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டுள்ளனர்.

## சர்வதேச...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மீறி நடந்துகொள்கிறது' என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் தங்களது சொந்த கிராமங்களில் குடியேற முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர். அவர்களது நிலங்களை அரசு, இராணுவம் என்பன பல்வேறு தேவைகளுக்காகப் பிடித்து வைத்துள்ளன. இந்த நடவடிக்கைகள் அரசின் உண்மையான மீளக்குடியேற்ற கொள்கையைப் படம் பிடித்து காட்டுகின்றன.

இந்த நிலையில், தமது சொந்த இடங்களில் குடியேறுகின்ற தமிழ் மக்களின் உரிமையைப் பச்சையாக மீறிவிட்டு இந்த அரசு மீள்குடியேற்ற பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்டதாகக் கூறக்கூடாது. இதுபற்றி உண்மைகளை அறிந்துகொள்ளாமல், அவசர, அவசரமாக இலங்கை வந்து செல்லும், ஐ.நா, அமெரிக்க, இந்தியப் பிரதிநிதிகள் இலங்கை அரசுக்கு நற்சான்றிதழ் வழங்கவும் கூடாது.

சொந்த கிராமங்களுக்குப் போக விடுங்கள் என்று உரிமையுடன் கோரிக்கை விடுக்கும் மக்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். அவர்களை வேறு நிலங்களுக்கு அனுப்புவதற்கு அரசு முயற்சி செய்கிறது. ஒருதொகையினர் இப்படி அரசின் பயமுறுத்தல் காரணமாக மாற்று இடங்களை நாடி உள்ளார்கள். இவை உலகுக்கு தெரியாமல் நடத்தப்பட்டுள்ளன.

திருமுருகண்டி, கேப்பாபிலவு ஆகிய கிராம மக்களின் பரிதாப நிலைமைகள் சமீபத்தில் நடைபெற்ற தமிழ் கட்சிகளின் மக்கள் போராட்டங்களின் மூலமாக வெளி உலகுக்கு தெரிய வந்துள்ளன.

அதேபோல் பரவிபாஞ்ஞான், இரணைதீவு, முகமாலை ஆகிய கிராமங்களிலும் மக்களை குடியேற விடாமல் இராணுவம் தடுக்கின்றது. 30 வருடங்களுக்கு முன்னர் மலையகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டதால், கிளிநொச்சி மாவட்டத்தின் மருதநகர் கிராமத்தில் குடியேறி, அந்தப் பூமியை வளப்படுத்தி விவசாயம் செய்து வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தமது கிராமங்களில் குடியேறுவதையும், இராணுவம் இன்று தடுக்கிறது- என்றுள்ளது. (த)

## வடமத்திய...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் சுபநேரத் தில் இந்த சத்தியப்பிர மாணம் நடைபெற்றது. முன்ன தாக வடமத்திய மாகாண சபையில் முதலமைச்சராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இந்த சர்ச்சை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சி னைகளை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களை அழைத்துப் பேச்சு நடத்திய ஜனாதிபதி ராஜபக்ஷ, வடம த்திய முதலமைச்சர் பதவியைக் கடந்த தேர்தலில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்ற எஸ்.எம்.ரஞ்சித்துக்கு வழங்குவதெனத் தீர்மானித்தார்.

முதலமைச்சர் பதவியைத் தமக்குத் தராவிட்டால் வடமத்திய மாகாணசபையின் சுமார் 120 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தம்முடன் இணைந்து எதிர்ப்பைத் தெரிவிக்கத் தயாராக இருப்பதாக முன்னாள் முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்திருந்தபோதிலும், இறுதி நேரத்தில் அந்த முயற்சியையும் அவர் கைவிட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## முள்ளிவாய்க்காலில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தில் நடைபெறும் வடக்கு அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் பங்கேற்பார். இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச அதிபர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன் பின்னர் நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான 'லக்ஷபான' மின் விநியோகத்தை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கிறார்.

அவர் கிளிநொச்சி மத்திய சந்தையையும், பிற்பகல் 3 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தையும் திறந்து வைப்பார்.

தனது வன்னிப் பயணத்தின் முடிவில் அவர் முள்ளிவாய்க்காலுக்கும் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிடுவார். (த-400-426)

## "எங்கே...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களோ எங்களுக்குத் தெரியாது. பஸ்ஸில ஏத்தினாங்கள். இஞ்ச கொண்டு வந்து விட்டிருக்கிறாங்கள். இனி எங்க கொண்டு போயினமோ தெரியேல. இந்த நிலமேல நீங்கள் எங்கள வந்து கேக்கிறியள் எங்க போறியள் எண்டு." - என்று எமது செய்தியாளரிடம் தனது கவலையைக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார் குடும்பப் பெண் ஒருவர். (த-410)

## கூட்டமைப்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

திருகோணமலை நகரசபை மண்டபத்தில், கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். ஆயினும் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது இதுவரை முடிவாகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தெரியவருகிறது. இவர் கடந்த 8 ஆண்டுகளாக கொழும்புக்கு அருகே உள்ள வெலிக்கடைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு மண்டபம் கடற்பகுதியில் இருந்து இலங்கைக்கு நாட்டுப் படகில் போதைப் பொருள்களை கடத்தியதாக இராமநாதபுரத்தைச் சேர்ந்த 2 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

இவர்களில் 62 வயதான தங்கராஜ் என்பவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இவரது இறப்புக்கு காரணம், மாரடைப்பு என்று கூறப்பட்டுள்ளது.

அவரது உடலைக் கொண்டு வரும்படி, தங்கராசுவின் உறவினர்கள் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து அவரது உடலை தமிழகம் கொண்டு செல்ல கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது எனத் தெரியவருகிறது.

## மரநிழலில்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அந்தக் குடும்பங்கள் தொடர்ந்து நேற்று இரவு முழுவதும் மர நிழல்களிலேயே தமது பொழுதைக் கழித்தன. இந்த மக்களுக்கான உணவு வசதிகளை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஏனைய அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாமையால் அந்தக் குடும்பங்கள் பெரும் நிர்க்கதியான நிலையில் அவலப்பட்டுக் கொண்டிருந்தன.

இதன்பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த 110 குடும்பங்கள் செட்டிகுளம் முகாமில் இருந்து ஏற்றிவரப்பட்டன. இந்த மக்கள் வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கும் உணவு வசதி மாத்திரமே ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய அடிப்படை வசதிகள் இல்லாமையால் அங்கு பெண்களும், சிறுவர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

தம்மை சொந்த இடங்களான கேப்பாபுலவு, மந்துவில் பகுதிகளில் இன்று குடியமர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினர் தம்மிடம் கூறினர் என்று அந்த மக்களில் சிலர் தெரிவித்தனர். ஆனால் செயலக அதிகாரிகள் வாய் திறக்க மறுத்துவிட்டனர். மாவட்ட அரச அதிபரை நேற்றிரவு வரை, இது குறித்து தொடர்புகொள்ள 'உதயன்' முயன்றபோதும் முடியவில்லை.

செட்டிகுளம் அகதி முகாமில் இருந்து மக்களை வெளியேற்றிய பின்னர் அங்கிருந்த அனைத்துக் கட்டடங்களையும் படையினர் தகர்த்து நிர்மூலமாக்கி விட்டனர் என்று மக்கள் தெரிவித்தனர். (த-400)

## தனித் தமிழீழம்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

திபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் ஆலோசகர் வி.பொன்ராஜ் தெரிவித்துள்ளார். அத்துடன், அந்த தனித் தமிழ் ஈழநாடு இந்தியாவின் உண்மையான நட்பு நாடாக திகழும் என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பொன்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:

மத்திய பிரதேசம் மாநிலத்தில், புத்தமத பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நட வந்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குக் கறுப்பு கொடி காட்டுவதற்கு தமிழகத்தில் இருந்து வைகோ தலைமையில் பலர் சென்று அங்கு கைதாகியுள்ளனர். இதுபோன்ற ஒரு போராட்டம் உலக வரலாற்றில் இதுவரை நடந்தது இல்லை.

இந்த போராட்டத்தினால், இலங்கையில் தமிழர்களின் நியாயமான போராட்டத்தைப் பிற மாநிலத்தவர்கள் உணர்ந்துள்ளனர். முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் காலம் முதல், இலங்கைத் தமிழர்களின் அகிம்சை வழி மற்றும் ஆயுதம் ஏந்திய போராட்டங்களின் வரலாற்றை உயர் அதிகாரிகள் திரித்துக் கூறிவருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு மிகப்பெரிய தேசிய தலைவரை காண்பது அரிதாக உள்ளது. எனவே தமிழக அரசியல் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, ஆலோசனை நடத்தி, இந்திராகாந்திக்கு பின் இந்திய அரசு மேற்கொண்டு வரும் வெளி விவகார கொள்கையை மாற்றியமைக்க செய்யவேண்டும். இந்தியா மற்றும் அமெரிக்காவில் உள்ள ஜனநாயக முறையை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும். இது ஒன்றே இலங்கை தமிழர்களுக்கு நம்மால் வழங்கக்கூடிய உடனடித் தீர்வாகும்.

இதன் பின்னரும், இந்த ஜனநாயக முறையை இலங்கை அரசு ஏற்கவில்லை என்றால், தனித்தமிழ் ஈழம் அமைவதை பூமியில் உள்ள எவராலும் தடுக்க முடியாது- என்றார்.(த)

## மாகாண...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யப்பிரமாணம் செய்து கொண்டனர்.

தேசிய காங்கிரஸ் சார்பாகஎம்.எஸ். உதுமாலெப்பை அமைச்சராகப் பதவியேற்றார். முன்னர் அவர் வகித்த அதே அமைச்சுப் பதவியே மீண்டும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தே.காவுக்கு அமைச்சுப் பதவி கிடைக்க இடமளிக்கமாட்டோம்; கொடுத்தால் பார்ப்போம் என்று மு.கா. செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸனலி பகிரங்க அறிவிப்புச் செய்து 24 மணி நேரத்துக்குள் எம்.எஸ்.உதுமாலெப்பை ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சு.க. சார்பாக விமலவீர திஸாநாயக்க கல்வியமைச்சராக மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாணசபையின் தவிசாளராக ஆரியவதி கலப்பதி நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இவர் பிரதித் தவிசாளராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. பிரதித் தவிசாளராக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ். சுபைர் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இவர் கடந்த மாகாணசபையில் கடமையாற்றியிருந்தார்.

அ.இ.மு.கா. சார்பில் தெரிவான முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எல். அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு பிரதியமைச்சர் பதவியும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதையடுத்து மாகாணசபையில் அமைச்சுப் பதவியைப் பெறுவதில்லையென அ.இ.மு.கா. தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண சபையின் முதல்வர் தவிர்ந்த ஏனைய 4 மாகாண அமைச்சுகளில் மூன்று முக்கிய அமைச்சுகள் அம்பாறை மாவட்டத்துக்கு கிடைத்துள்ளன.

இதேவேளை, தே.கா. உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பைக்கு தற்போது கிடைத்துள்ள வீதி அபிவிருத்தி அமைச்சை மு.காவுக்கு கோருமாறு கட்சித் தலைவரிடம் முக்கிய உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்தபோதிலும், எந்த அமைச்சு என்றாலும் பரவாயில்லை அதனை எடுங்கள் எனப் பெரும்பாலான மாகாணசபை உறுப்பினர்கள் கட்சித் தலைவரை நேற்றுக்காலை கோரியிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இதன்போது குறுக்கிட்ட கட்சித் தலைவர் மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோர் இரண்டரை வருடங்களின் பின்னர் எமக்குக் கிடைக்கும் முதலமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டவர்களாக அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கே தீர்மானித்திருந்தோம் என்றும், அதுவரை எவ்வித பதவியும் பெறாமல் இருப்பதற்கும் முடிவு செய்திருந்தோம் என்றும் அறி [illegible] றது. ஆனால், இவற்றையெல்லாம் மீறி உதுமாலெப்பை நேற்று அமைச்சரானார்.

கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர் மற்றும் மூன்று அமைச்சர்களுமாக மொத்தம் நான்கு முஸ்லிம்கள் அங்கம் வகிக்க ஒருவர் மாத்திரம் சிங்களவராகவுள்ளார்.

எனினும், அமைச்சரவையில் தமிழர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இது தொடர்பில் முதலமைச்சர் உட்படப் பலரும் அரசை வலியுறுத்தியபோதிலும் அதனை அரசு அசட்டை செய்து விட்டது.

கடந்த கிழக்குமாகாணசபையில் தமிழரான பிள்ளையான் முதலமைச்சராகவும், நவரட்ணராஜா அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சு விவரம் வருமாறு:-

1. முதலமைச்சர் அப்துல் மஜீத்: நிதி, திட்டமிடல், சட்டம் - ஒழுங்கு, மாகாண நிர்வாகம், ஆளணி, உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், கிராமிய அபிவிருத்தி, சுற்றாடல்.

2. விமலவீர திஸாநாயக்க: கல்வி, கலாசார அலுவல்கள், காணி மற்றும் காணி அபிவிருத்தி, போக்குவரத்து.

3. எம்.எஸ்.உதுமாலெப்பை: வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை, கிராமிய மின்சாரம், நீர் வடிகாலமைப்பு.

4. ஹாபிஸ் நஸீர் அஹமட்: விவசாயம், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி அலுவல்கள், சுற்றுலாத்துறை.

5. எம்.எம்.மன்சூர்: சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம், இளைஞர் விவகாரம், விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு விநியோகம்.

இந்த வைபவத்தில் வடமத்திய மாகாண முதலமைச்சராக எஸ்.எம்.ரஞ்சித்தும் சப்பிரகமுவ முதலமைச்சராக மஹிபால ஹேரத்தும் பதவியேற்றுக் கொண்டனர். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்கள் நலன்களை தமக்கு புளியோதரை ஆக்கும் புதியபோக்கு!

*இனிமேலும் இந்த மனிக்பாம் முகாமில் (நலன்புரி நிலையத்தில்) தங்கியிருந்தால் எந்தவித உதவியும் கிடைக்க மாட்டாது. நாங்கள் பட்டினியினால் சாகவேண்டியது தான். அதனால், வேறு வழியின்றித் தற்காலிக இடத்திலாவது (சீனியாமோட்டையில்) தங்கியிருக்க முடிவு செய்துள்ளோம்-*

இவ்வாறு தெரிவித்தவர், முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவைச் சொந்த இடமாகக் கொண்டு, போரின் போது இடம்பெயர்ந்து, இதுவரை மனிக்பாம் முகாமில் தங்கியிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் ஒருவராவார்-

தம்மைத் தமது சொந்த மண்ணில்- நிலத்தில் - அதாவது முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவில் மீளக்குடியமர்த்துமாறு கேட்டும், போராட்டம் நடத்தியும் பயன் எதுவும் கிடையாமல், செய்வதறியாது தவித்து நிற்கும் இடம்பெயர்ந்த மக்களில் ஒருவர் அவர்.

வவுனியாவில் அமைந்துள்ள அகில உலகப் ''பிரசித்தி'' பெற்ற மனிக்பாம் நலன்புரி நிலையத்தை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது ஏற்கனவே தெரிந்ததே.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தின் போது-

போரினால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையம் ஒன்றாவது இயங்கவில்லை; எல்லாமே மூடப்பட்டு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று காட்டுவதற்கான அரசின் முன்னேற்பாட்டு நடவடிக்கையாகும் இது.

அதன் ஓர் அங்கமே, மக்களை நிர்ப்பந்தப்படுத்தி மனிக்பாம் முகாமை மூடும் அதிரடி நடவடிக்கை ஒன்றை அரச அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை மேற்கொண்டிருந்தமையாகும். அதன் பிரகாரம் கேப்பாபுலவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மனிக்பாமை விட்டு வெளியேறுவதற்கு அரச உயர் அதிகாரிகளால் இரண்டு நாள் அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று செவ்வாய்க்கிழமையுடன் மனிக்பாம் முகாம் மூடப்படும் என்று அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தி உள்ளார். இந்த முகாமில் கடைசியாக கேப்பாபுலவு மற்றும் மந்துவில் பிரதேசங்களைச் சேர்ந்த 1,135 பேர் தங்கியிருந்தனர்.

போரினால் பல வகைகளிலும் பாதிப்புற்று ஏதிலிகளாக மாறிய தமிழ் மக்களை, அவர்கள் சில மாதங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று கூறிக்கொண்டு, வவுனியாவில் மிகப் பல மாதங்களாக வைத்திருந்து, அதன் பின்னரே மீளக்குடியமர்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் இருந்து கண்ணிவெடிகள், மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றி, பாதுகாப்பான சூழலிலேயே இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என்று தனக்கு வசதியான, வாய்ப்பான காரணங்களை அரசாங்கம் கூறிவந்தது. அதனால் போர் முடிவுற்று சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னரே மக்களை அவரவர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் பணியை ஆரம்பித்தது. அதுவும், அனைத்துலக நாடுகள் பலவற்றின் அழுத்தங்களின் பின்னரே ஆரம்பமானது. எனினும் அவர்களுக்குரிய குடியிருப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய வசதிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வந்தன என்பதும் உலகறிந்த உண்மை.

அதன் காரணமாக வெளிநாட்டு அரச பிரமுகர்களோ, அனைத்துலகத் தொண்டர் நிறுவனங்களின் அதிகாரிகளோ அரசின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை நேரில் கண்டறிய அனுமதி வழங்குவதிலும் காலம் கடத்தும் தந்திரங்கள் கையாளப்பட்டன.

அவற்றுக்கும் அப்பால், அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தனது அறிக்கையில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதற்கு முன்னுரிமை வழங்குமாறு வலியுறுத்தி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரத்தில் இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் பிரதிநிதிகள், இலங்கையில் தாம் கண்டவற்றை, கேட்டறிந்தவற்றை ஆணையாளரிடம் கையளிப்பதற்கு இன்னும் சில நாள்கள் இடைவெளியே இருக்கும் வேளையில்--

இடம்பெயர்ந்தோரின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் தனது கை சுத்தம்; பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை நாடி அரசாங்கம் மிகுந்த சிரத்தையோடும், ஏன் மனிதாபிமானத்துடனும் செயற்படுகிறது என்று பறைதட்டும் பாணியிலேயே தனது பணிகளை அரசு தற்போது முன்னெடுத்து வருகிறது.

தனது சொந்த நிகழ்ச்சி நிரலை (Ajenda), பூசி மெழுகிக் காட்டுவதன் பொட்டுக்கேடு வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, பாதிப்புற்ற மக்களின் சொந்த கஷ்ட நஷ்டங்களை கவனத்தில் கொள்ளாமல், அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் மனிதாபிமானமற்ற, ஏன் மனிதநேயமே அற்ற, கல்லுண்ணி மங்கர்களாகச் செயற்படவும் துணிந்துவிடுகிறார்கள்.

இத்தகைய நாட்டில், அரசில், இந்த யுகத்தில், நல்லாட்சியைக் காண முடியும், அனுபவிக்க இயலும் என்று கற்பனைதானும் செய்யவும் முடியுமா? எல்லாச் செயற்பாடுகளுமே தகிடு தத்தப் பாணியில் அமைந்து வருகின்றன. தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் என்பதற்கு எதிர்மறையாக, தட்டிக் கேட்கப்போகிறார்கள் என்பதற்காக, மக்கள் நலன்களை உரித்தெடுத்துப் புளியோதரை போடும் போக்கு புதுவழியாக்கப்படுகிறது!

# பட்டதாரிப் பயிலுநர்களில் ஒரு தொகுதியினருக்கு மாற்றம்

### இன்று முதல் வேறு திணைக்களங்களுக்கு

**கமத்தொழில் அலுவலகம் மற்றும் தென்னை அபிவிருத்தி பயிர்ச் செய்கை அலுவலகம் என்பவற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.**

வலி. வடக்கு, செப் 25

யாழ். மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் பெற்றவர்களில் வணிகபீடம் மற்றும் புவியியல்துறை, பொருளியல் துறை பட்டங்களைப் பெற்றவர்களில் ஒரு பகுதியினர் பிரதேச செயலகங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்படவுள்ளனர்.

பட்டதாரிப் பயிலுநர்களில் யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பட்டதாரி பயிலுநர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளில் ஒரு தொகுதியினர் இன்று முதல் கமத்தொழில் அலுவலகம் மற்றும் தென்னை அபிவிருத்தி பயிர்ச் செய்கை அலுவலகம் என்பவற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே விவசாய அபிவிருத்தி அலுவலர்கள் தென் பகுதியில் நியமனம் செய்யப்பட்டுள்ள போதிலும் யாழ் குடாநாட்டில் நியமனம் செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையான பட்டதாரிகள் கமத்தொழில் திணைக்களத்துக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று முதல் தமது கடமைகளை யாழ்.நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர்களில் மற்றும் ஒரு தொகுதியினர் தென்னை அபிவிருத்தி அலுவலகத்தில் கடமைகளை இன்று பொறுப்பேற்கவுள்ளனர்.

இவர்கள் எந்த வகையான பணியில் ஈடுபடுவார்கள் என்பது தெரியவரவில்லை.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் தென்னைப் பயிர் செய்கை அலுவலர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பட்டதாரிப் பயிலுநர்கள் நியமனத்தின் மூலம் அதிக பயனை தென்னை அபிவிருத்திக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (ம-86)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, செப்.25

தொண்டமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மிக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை சுப.ஆறுமுக சுவாமியும், மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் நிகழ்த்துவர். (ம-8)

## உள்நாட்டுப் பதிவுத் தபால்கள் விரைவில் கணினி வலையமைப்பில்

யாழ்ப்பாணம், செப்.25

உள்நாட்டுக்கான பதிவுத் தபால்களை கணினி மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைத் தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே வெளிநாடுகளுக்கான பதிவுத் தபால்கள் கணினி வலையமைப்புக்குள் உள்வாங்கப்பட்டே விநியோகிக்கப்படுகின்றன.

இந்த வெளிநாட்டுப் பதிவுத் தபால்கள் கணினி மயப்படுத்தப்பட்டதால் அந்தத் தபால்கள் உரியவர்களைச் சென்றடைவதை திணைக்களம் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளது. அத்துடன் தபால்களும் விரைவாக உரியவர்களைச் சென்றடைகின்றன.

இதேபோன்று உள்நாட்டுக்கான பதிவுத் தபால்களும் விரைவில் கணினி வலையமைப்புக்குள் உள்வாங்கப்படுவதற்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த நடவடிக்கை விரைவில் செயற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-17)

## வடமாகாண அஞ்சல் தின நிகழ்வுகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.25

வடக்கு மாகாணத்துக்கான சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அஞ்சல் தின நிகழ்வுகளை எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சகல அஞ்சல் நிலையங்களுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்த இந்த சர்வதேச அஞ்சல் தினத்தை இந்த முறை மன்னாரில் கொண்டாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் தபால்மா அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்தார்.

எனினும் இந்த நிகழ்வு திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## சாவகச்சேரி கூ.சங்கத்தின் தலைவராக மீண்டும் மகேஸ்வரன்

தென்மராட்சி,செப்.25

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் செ.மகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற சங்கக் கிளைக் கூட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பொதுச் சபை உறுப்பினர்களிலிருந்து இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் முன்னிலையில் இயக்குநர் சபை தெரிவு இடம்பெற்றது.

ஏழு உறுப்பினர்கள் தெரிவுக்கு இரு அணியின் சார்பில் 14 பேர் போட்டியிட்டனர்.

தேர்தலில் தலைவர் பதவிக்கு செ.மகேஸ்வரனும், உப தலைவராக த.அப்புத்துரையும் உறுப்பினர்களாக உ.பரமநாதன், கு.மாதவன், ம.கந்தையா, க.தர்சன், ஐ.சதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட செ.மகேஸ்வரன் முன்னரும் சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## அரச முகாமைத்துவ உதவியாளர் கூட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதி

தென்மராட்சி,செப்.25

மத்திய, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 12 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிராந் திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

சங்கத் தலைவர் கா.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறும் கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் செயலக செயலாளர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, வடக்கு மாகாண பொது நிர்வாக செயலக பிரதிச் செயலாளர் செல்வி ஆர்.எஸ். துரைராஜா, சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நா.இன்பராஜ், மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் உட்பட பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கடந்த நடப்பு வருட காலத்தில் ஓய்வு பெற்ற சங்க உறுப்பினர்கள் கௌரவிப்பும் இடம்பெறுமென சங்கச் செயலாளர் கி.ஜெயசங்கர் கூறினார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நிகழ்வுகள்



வவுனியா, செப். 25

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு ஒற்றுமையினூடாகச் சமாதானத்தை நிலைநாட்டும் தொனிப்பொருளிலான நிகழ்வொன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா றோயல் காடன் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வுப் பயிற்சி பெற்று வருகின்ற முன்னாள் போராளிகளும் இங்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற பரா ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற மாற்று வலுவுள்ள முன்னாள் இராணுவ வீரரான சஞ்சய இந்த நிகழ்வில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வவுனியா இராணுவக் கட்டளைத் தளபதி, வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் முக்கிய இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## 1996இல் காணாமற்போன ஒருவரின் மரணச் சான்றிதழும் கிடைக்காத நிலை

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சியில் கடந்த 1996 ஆம் ஆண்டு காணாமல் போயுள்ள ஒருவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவரது மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதிலும் அவரது குடும்பத்தினர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு இராணுவம் மேற்கொண்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் வசமாகியிருந்த கிளிநொச்சி நகரில் உள்ள தனது வீட்டைப் பார்ப்பதற்கு வந்த போது சிவநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த கே.ரீ.தேவச்சந்திரதேவர் என்ற குடும்பஸ்தர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற் போயிருந்தார்.

இவர் காணாமல் போகும் போது இவருக்கு வயது 39 ஆகும். இவரது குடும்பத்தினர் 1996 ஆம் ஆண்டிலிருந்து பதினாறு ஆண்டுகளாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு, மதத் தலைவர்கள் எனப் பல தரப்புகளிடமும் முறைப்பாடுகளைத் தெரிவித்துவிட்டு இவரைத் தேடி அலைகின்றனர். ஆனால் எந்தவித தகவல்களையும் பெறமுடியவில்லை.

இதனால் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கென விண்ணப்பங்களைச் செய்த போதும் அதனைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனவும் காணாமற் போன நாளில் இருந்து இன்றுவரை எவ்வளவோ தொகைப் பணத்தைச் செலவு செய்தும் எதுவித பயனும் கிட்டவில்லை என்றும் காணாமற் போனவரின் மனைவி தெரிவித்தார். (க-6)

## வீதி ஒழுங்குகளை மீறியோருக்கு கிளிநொச்சி நீதிமன்றில் தண்டம்

கிளிநொச்சி,செப்.25

கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு விதிகளை மீறி வாகனங்களைச் செலுத்திய எட்டுப் பேர் தண்டமாகச் சுமார் 19 ஆயிரத்து 500 ரூபாவைச் செலுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி ஏ.9 வீதியில் தலைக்கவசம் இன்றியும், மதுபோதையிலும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவரை கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து மறுநாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

இதே வேளை பாதை ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகள் நால்வர் கைது செய்யப்பட்டுத் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

வரிப்பத்திரம் இன்றி வாகனத்தைச்செலுத்தியதோடு ஒலியெழுப்பத் தடை விதிக்கப்பட்ட பகுதியில் ஒலி எழுப்பிய ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஏ.9 வீதியில் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன இன்றி வாகனத்தைச் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 17 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது இந்தத் தண்டங்கள் விதிக்கப்பட்டன. (க-6)

# வாகனப் பதிவு நடவடிக்கைகள் ஆனையிறவு சாவடியில் நிறுத்தம்

வன்னி பெருநிலப் பரப்பிலும் ஆனையிறவு ஊடாகச் செல்லும் வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி பெருநிலப்பரப்பினுள் உட்பிரவேசிக்கும் வாகனங்களும் அதே போன்று வேறு இடங்களில் இருந்து யாழப்பாணம் வரும் வாகனங்களும் ஆனையிறவில் உள்ள சோதனைச் சாவடிகளில் பதிவு செய்த பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டு வந்தன.

**விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போர் நிறைவடைந்து ஏ.9 பிரதான வீதி மக்களின் போக்குவரத்துக்கென அனுமதிக்கப்பட்டபோது கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகளும், சோதனைக் கெடுபிடிகளும் இடம்பெற்று வந்தன.**

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போர் நிறைவடைந்து ஏ.9 பிரதான வீதி மக்களின் போக்குவரத்துக்கென அனுமதிக்கப்பட்ட போது கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகளும், சோதனைக் கெடுபிடிகளும் இடம் பெற்று வந்தன.

பின்னர் அது படிப்படியாக குறைக்கப்பட்டு வாகனங்களை மட்டும் பதிவு செய்த பின்னர் பயணத்தை மேற்கொள்ள படையினர் அனுமதித்து வந்தனர். அதிலும் தற்போது தளர்வு ஏற்பட்டுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளாமலேயே வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடப் படையினர் அனுமதித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இருந்து ஓமந்தை ஊடாக வன்னி பெருநிலப் பரப்புக்குள் உள்நுழையும் வாகனங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-400)

## விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள்

முல்லைத்தீவு, செப்.25

மகளிர் விவகார உத்தியோகத்தரால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.


சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் பண்டார வன்னிக் கிராமத்தில் இந்தக் கருத்தமர்வு இந்த மாதம் 18 ஆம் திகதி ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் கிராமத்தில் இடம்பெற்றது.

இந்தத் தகவலை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.விஜேந்தி தெரிவித்தார்.

இந்தக் கருத்தமர்வுகளின் போது பாடசாலை செல்லாத மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்தல், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீளக் குடிய மர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இங்குள்ள அனைத்துக் கிராமங்களிலும் இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-500)



துணுக்காயிலுள்ள திருநகர் சிவக்கொழுந்து சனசமூக நிலையத்தைப் புனரமைப்பதில் நிலைய நிர்வாகம் ஆர்வம் காட்டிவருகிறது. (க-415)

## ஒட்டுசுட்டான் பாடசாலைக்கு சரஸ்வதி சிலை அன்பளிப்பு

ஒட்டுசுட்டானிலுள்ள பாடசாலையொன்றுக்கு இங்குள்ள குடும்பமொன்று சரஸ்வதி சிலையொன்றை அமைத்து அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஒட்டுசுட்டானிலுள்ள தண்டுவான் அ.த.க பாடசாலைக்கு தமது மகனான பிரசாத்தின் நினைவாகக் கணேசராசா குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்தச் சிலை திறப்பு விழா கடந்த 13 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் பாடசாலை அதிபர் வி.பன்னீர்ச்செல்வனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் கலந்து கொண்டார். (க-435)

# பஸ்கள் முறிகண்டியைத் தவிர்ப்பதனால் பக்தர்கள் கடும் விசனம்

ஏ.9 பிரதான வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் முறிகண்டி ஆலயத்தில் நிறுத்தாமல் செல்வதனால் முறிகண்டிப் பெருமானைத் தரிசிக்க முடியாத ஏக்கத்தில் பயணிகள் தமது பயணத்தை கவலையுடன் தொடர்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதி ஊடாகப் பயணத்தை மேற்கொள்ளும் சகல வாகனங்களும் மத வேறுபாடின்றி முறிகண்டியில் நிறுத்தப்பட்டுப் பயணிகள் பெருமானை வழிபட்டுச் செல்கின்றனர்.

அதுமட்டுமல்ல முறிகண்டியில் விற்பனையாகும் கச்சானுக்கு இங்கு தனி மவுசு உண்டு. அவ்வீதியால் செல்லும் பயணிகள் பிள்ளையாரை வழிபடுவதோடு கச்சானையும் வாங்கிச் செல்லத் தவறுவதில்லை.

கடந்த காலங்களில் இவ்வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த அரச மற்றும் தனியார் பஸ்கள் முறிகண்டிப் பகுதியில் சிறிது நேரம் தரித்து நின்று செல்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

ஆனால் தற்போது சாரதிகளும் நடத்துநர்களும் கனகராயன்குளம், இரணைமடுக் குளம் சந்திகளில் உள்ள பெரும்பான்மை இன மற்றும் முஸ்லிம் உணவகங்களில் நல்ல 'கவனிப்புக்' கிடைப்பதாலும், அசைவ உணவு அங்கு கிடைப்பதாலும் அவர்கள் அவற்றின் முன்பாகவே தமது வாகனங்களை நிறுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் முறிகண்டிப் பகுதி ஆளரவமற்ற பகுதியாகக் காணப்படுவதுடன் அங்கு காணப்படும் வியாபார ஸ்தாபனங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. பஸ் சாரதிகள், மற்றும் நடத்துநர்களின் செயற்பாட்டினால் பக்தர்களால் முறிகண்டியானுக்குச் செலுத்தப்படும் காணிக்கைகளும் இல்லாது போகின்றன.

எனவே இவற்றை கவனத்தில் எடுத்து சாரதிகளை வழிநடத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் தரப்பால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-400)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் நடத்தும் எதிர்ப்புப் போரட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் இணைந்து பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான முக்கிய நகரங்களில் நடைபயணமும், கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தவுள்ளன. இன்று காலை நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் 50ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை, நெல்லியடி, ஆவரங்கால், யாழ்ப்பாணம் போன்ற முக்கிய இடங்களில் இவர்கள் தமது கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். (உ-10)

## மரண அறிவித்தல்

### திருமதி சச்சினேஸ்வரன் தவராணி (ரேணு)

ஆறுப்பிள்ளை வளவு டச்சு வீதி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் 158/4 கிட்செட் வீதி வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சினேஸ்வரன் தவராணி நேற்று முன்தினம் (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், வேலாயுதம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், வேலாயுதம் சச்சினேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகப்பிள்ளை பொன்னம்மாவின் பேர்த்தியும், டிலானி, காலஞ்சென்ற தர்சிகன் ஆகியோரின் அன்புத் தாயும், தயாழின், தாஸ்குமார் (கனடா) காலஞ்சென்றவர்களான தயாகுமார், தவக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வினோத், பிரதீபன் ஆகியோரின் மாமியும், முகுந்தன், சுபா ஆகியோரின் மைத்துனியும், உதயகுமார், கயேந்தினி, கஜலக்சுமி ஆகியோரின் பெரிய தாயும், சம்ருதன், டயன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2012) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயா வாசியசாலை,
வவுனியா.
(சி/3642)(3.14)

தகவல்:
சச்சினேஸ்வரன் (கணவர்)
(சுரேஸ் மோட்டோர்ஸ்)

## யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.25

யாழ். மாநகர சபையின் 2012ஆம் ஆண்டுக்கான ஒன்பதாவது (செப்ரெம்பர் மாத) மாதாந்தக் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் -2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. இவ்வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 25.09.2012 தொடக்கம் 05.10.2012 பி.ப. 4.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 08.10.2012 மு.ப.10.00 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 08.10.2012 மு.ப. 10.30 மணி
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டலின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப் பரத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.' என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(VAT,NBAT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01. | Construction of Floor Area at Thirunelvely Market | 14,750.00 | 500.00 | M08/C09 |
| 02. | Construction work of Road, Culvert & Channel in Maniyanthoddam | 18,750 | 500.00 | M08/C09 |

திரு.ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.
(c/3636)

## இரண்டாம் ஆண்டு



தோற்றம் 18 ★ 09 ★ 1954
மறைவு 17 ★ 09 ★ 2010

திருமதி
### சந்திரசேகரம் பவானிதேவி

ஈராண்டுகள் ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

வாகை வீதி,
திருநெல்வேலி.
(23161) (8.14)
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி




தென்மராட்சி பிரதேச செயலக
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
திருமதி இரஞ்சினி இரகுநாதன்
அவர்களின் அன்பு மாமியார்
### திருமதி கமலாதேவி கணேசநாதன்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம் தென்மராட்சி.
(சி/9379)(3.14.8)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் மாந்தருடன் 09 * 01 * 1934



விண்ணுலகில் மகாதேவருடன் 12 * 10 * 1997

### அமரர் பி.கே. பாலசிங்கம் (படியாதவன்)
(இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்வி அமைச்சின் விஞ்ஞன பாடநூல் எழுத்தாளர்)

ஆண்டுகள் பல ஓடினும் ஆறுமோ எங்கள் நெஞ்சு
பண்புகள் நிறைந்த அப்பா
பலதுறை அறிவு கொண்டஎ
கண் துயில் கொள்ளும் போதும்
கருமணிதன்னில் நிற்பீர்
மண்ணினில் வாழும் காலம் முற்றும் மனதினில்
ஏற்றித் தொழுவோம்

P.K.B பாலஸங்கர்
விதானை சங்கரியார் வளவு
718, கே.கே.எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.
(23157)(3.14)

## மரண அறிவித்தல்

### திருமதி எஸ்தாக்கி மொனிக்கம்மா



யாழ். நாவந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எஸ்தாக்கி மொனிக்கம்மா கடந்த (22.09.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கலைக்கவி நீக்கிலாப்பிள்ளை எஸ்தாக்கியின் (முன்னாள் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை- ஆனாசி தம்பதியரின் அன்பு மகளும், நீக்கிலாப்பிள்ளை - அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ச. அருளானந்தம் (முன்னாள் மரியா ஹோட்டல் உரிமையாளர்), திருமதி அந்தோனியாப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி திரேசம்மா மற்றும் திருமதி மாசில்லா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயராஜ் (நோர்வே), தங்கக்கிளி (கனடா), அன்னக்கிளி, தங்கராஜ் (கனடா), செல்வராஜ் (நோர்வே), செல்லக்கிளி, அருட்சகோதரி நிக்கொலின் (நல்லாயன் கன்னியர்சபை - கொழும்பு), பூ ஆகியோரின் பாசமிகு தாயும், அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் (செபமாலை தாசர் சபை), அருட்தந்தை மை.ஜீசஸ் பிரபு (இறைமீட்பர் சபை), நல்லாயன் கன்னியர் சபை அருட் சகோதரிகளான சகாயமரி (நாவலப்பிட்டி), பற்றிமா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2012) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் புனித பரலோகமாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10, 2ஆம் குறுக்குத்தெரு,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(23159)(3.14)

தகவல்:
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பரபரப்பான விற்பனையில்.. கேடயம்
'இலங்கையில் இருந்து தமிழ் மொழியில் வெளிவரும் முதல் முழு வர்ண விளையாட்டுச் சஞ்சிகை'
பரிசுப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் 5 அதிஸ்டசாலி வாசகர்களுக்கு இலங்கைக் கிரிக்கட் அணியின் T20 - 2012 இற்கான அழகிய ரீ-சேர்ட்கள் பரிசாக வழங்கப்படும்.
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை (கூடிய ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு : 0757683163
இமெயில் : public.shanth@gmail.com
பிரதி ஒன்று ரூ.50 மட்டுமே!
பாடசாலைகளுக்கும். மொத்த வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை ஐயாத்துரை



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஐயாத்துரை 21.09.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப் பிள்ளை-பொன்னு தம்பதியின் அன்பு மகனும், செல்வதியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, புனிதா, கலாறதி, லதாஜினி, ஸ்ரீமோகனவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2012) புதன்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18, 1 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(23262)(3.6.7)

# போக்குவரத்து தடை; சிவகாமி அம்மன் வீதியைப் பாவியுங்கள்

மானிப்பாய், இணுவில் அண்ணுகை வீதியானது வீதி அகலிப்பு வேலைகள்இடம் பெறுவதால் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை இந்தப் பாதை போக்கு வரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பாதையினூடாகப் போக் குவரத்துச் செய்வதைத் தவிர்த்து,அந்தக் காலப் பகுதி வரையில் சிவகாமி அம்மன் வீதியைப் பாவிக்குமாறு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் கேட்டுள்ளார். (ஒ)

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கை சேர்ந்த சுப்பிரமணியம் பகீர் என்பவரது தேசிய அடையாளஅட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இரண்டு credit card என்பன உரும்பிராய் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் கிழக்கு உரும்பிராய் எனும் விலாசத்தில் தந்துதவவும். உரிய சன்மானம்வழங்கப்படும்.

தொடர்பு: 0212240501, 0779294262

(சி/3640)(3.14)

### வாகனம் விற்பனைக்கு

NP PC - xxxx

தொடரிலக்கமுடைய Mahindra Double Cab Scorpio வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0774773704

(3638)(3.14)

### வீடு வாடகைக்கு

யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கைக்கு சமீபமாக புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடு வாடகைக்கு உண்டு. 4 அறைகள், போதிய வசனத் தரிப்பிட வசதி உண்டு. அரச சார்பற்ற/ தனியார் நிறுவனங்களுக்கு அல்லது உத்தியோகத்தர் விடுதியாக பயன்படுத்து வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 0752972412,
0212219177

(23158)(3.14)

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபர் க. தில்லைநாதன் அவர்களின் தாயார் திருமதி கமலாதேவி கணேசநாதன் (சோழங்கல், உடுப்பிட்டி) அவர்கள் 22.09.2012 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
விவேகானந்தாக் கல்லூரி,
கொழும்பு - 13.

(சி/3564)(3.6.7)

st Saravana Tex
# சரவணா ரெக்ஸ்
எமது எந்த ஒரு கிளையிலும் Office Ware சாறிகள் 500/=ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
1. சில்க்சாறி (With Blous) - 500/=
2. கொட்டன் சாறி (With Blous) - 500/=
கையிருப்பு உள்ள வரை மட்டும்
நல்லூரில்:
இல. 526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி) யாழ்ப்பாணம்
T.P : 021 222 1723
யாழ்ப்பாணத்தில்:
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம்.
T.P : 021 222 0421
வடமராட்சியில்
இல. 171, பிரதான வீதி
நெல்லியடி.
T.P : 021 226 2992
219 பிரதான வீதி, சங்கானை
(HNB வங்கி முன்பாக)
021 2250909

(சி/3635)(6.7.8)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திரு.திருமதி தம்பையா தியாகராசா
## (முன்னாள் பிரபா போட்டோ உரிமையாளர் - யாழ்ப்பாணம்)

தோற்றம்: 19.02.1940 மறைவு: 14.10.2009



தோற்றம்: 04.10.1937 மறைவு: 18.09.2010

திதி: 25.09.2012

அன்பின் திருவுருவே

ஆண்டுகள் இரண்டானாலும் உங்கள் நினைவலைகள், நீங்கள் அருகில் இருக்கும் உணர்வோடு அவனியில் வாழ்கின்றோம். ஆயிரம் தீபங்களாய் ஒளிகாட்டி சென்றிடுவீர் அன்பான உங்கள் வார்த்தைகளை அல்லும் பகலும் அசை போட்டுக் கொள்கின்றோம். ஆறாத உம் நினைவுகளை நெஞ்சத்துக்குள் சுமந்தபடி நிமிர்ந்து வாழ்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் நினைவு கூரல் பூசைகள் இலண்டனில் நடைபெறும்.

தகவல்:- தியாகராசா
பிரபாகரன் (மகன்)
லண்டன்.
00447939168467.

உங்கள் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(சி/3631) (15-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் ஆடினால் பொலிஸில் மாட்டுவர்

## தென்மராட்சியில் அதிரடி நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.25
தென்மராட்சிப் பிரதேச பொலிஸார் அண்மைக் காலமாக பொது இடங்களில் மது போதையில் காணப்படுவோரைக் கைது செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.இரவு வேளையில் மது போதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் குழப்பம் விளைவிப்பவர்கள், வீதிகளில் சண்டையிடுவோர், மது அருந்தி விட்டு வாகனம் செலுத்துவோரைக் கைது செய்து வருகின்றனர்.

பொலிஸாரால் கைது செய்யப்படுவோர் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் பரிசோதனை செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்றனர்.

கிராமப் புறங்களில் மதுபான விற்பனை முற்றாக நிறுத்தப்பட்டதால் மதுப் பிரியர்கள் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையங்களில் மதுபானங்களை வாங்கி அருகில் உள்ள மறைவிடங்களில் வைத்து அருந்திவிட்டு அட்டகாசம் செய்வது அதிகரித்துள்ளது.

இதனையடுத்தே பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மாடுகள் திருட்டு சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

வலி வடக்கு, செப் 25
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பகுதியில் மாடுகளைத் திருடிக் கொண்டு சென்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரவு வேளையில் ரோந்துக் கடமையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளையில் இருவர் மாடுகளைக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த பொலிஸார் குறிப்பிட்ட சந்தேக நபர்களை அழைத்து விசாரணையை தனித் தனியே மேற்கொண்டுள்ளனர்.

அதன்போது இருவரும் கூறிய விடயங்கள் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளில் மாட்டுக் களவை இருவரும் ஒப்புக் கொண்டனர்.

இந்த நிலையில் குறித்த மாடுகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப் பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சந்தேக நபர்கள் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (ம-86)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நீரிழிவுச் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ம-9)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப அலுவலகம் எங்கே?

### பெயர்ப் பலகை இன்மையால் தடுமாறுகின்றனர் மக்கள்

பளை, செப்.25
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முள்ளிப்பற்று உப அலுவலகத்தைத் தேடி அலைகின்றனர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட மக்கள்.

பிரதேச சபையின் முள்ளிப்பற்று, முகமாலை ஆகிய இரு உப அலுவலகங்களின் கட்டடங்கள் போர் இடர்களின் போது முற்றாக அழிந்து போயுள்ளன.

முகமாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளும் உப அலுவலகம் இருந்த பகுதியும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இதனால் கட்டடம் புனரமைக்கப்படவில்லை.

முள்ளிப்பற்று உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட காலத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் நலன்கருதி தற்காலிகமாக இயக்கச்சிப் பகுதியில் உப அலுவலகம், நூலகம், ஆயுள்வேத மருந்தகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

ஏ-9 வீதியை அண்டிய பகுதியில் உப அலுவலகம் தொடர்பான பெயர்ப்பலகை வைக்கப்படவில்லை. உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்த காணிகளில் கட்டடங்கள் அமைப்பதற்கு கட்டட விண்ணப்பப் படிவம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக உப அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிலையில் உப அலுவலகம் இருக்கும் இடம் தெரியாததால் தமது தேவைகளுக்காக 7 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள தலைமை அலுவலகத்துக்கு செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு தேர்தல் இடம்பெற்று புதிய சபை பொறுப்பேற்று ஓராண்டுக்கு மேலாகியும் உப அலுவலகத்திற்கு பெயர்ப் பலகை அமைக்க இதுவரை நடவடிக்கை எடுக்காதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வல்வை சிதம்பராக் கல்லூரியும்

வடமராட்சி, செப்.25
வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சால் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்ட 1000 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வல்வெட்டித் துறை நகரப் பகுதியில் எந்த ஒரு பாடசாலையும் இணைக் கப்படவில்லை.

இந்தத் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை நகரப் பாடசாலை ஒன்று இணைக் கப்பட வேண்டும் என வல் வெட்டித்துறை நகரசபையில் ஏற்கனவே தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகர எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இதுவரை எந்த ஒரு பாடசாலையும் ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை. இது மிகுந்த கவலை அளிக்கின்றது. எனவே வல்வெட்டித்துறை நகரப் பாடசாலையும் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பதிலளித்த வடமராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டு வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி இணைத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார். இதனையடுத்துச் சிரம்பராக்கல்லூரியையும் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இணைத்துக் [illegible] கல்விப் பணிப்பாளருக்கும் ஏனைய கல்வி அதிகாரிகளுக்கும் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த காலப் போரால் அழிவடைந்த ஊர் என்ற வகையில் வல்வெட்டித்துறையின் கல்வி அபிவிருத்தி, விளையாட்டுத்துறை விருத்தி மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் பகிரங்க வேண்டுகோளையும் அவர் விடுத்தார். (ம-8)

## குடாநாட்டுச் சந்தைகளில் தேங்கும் முருங்கைக்காய்

### கால்நடை தீவனமாகிறது

யாழ்ப்பாணம், செப்.25
யாழ். குடாநாட்டில் முருங்கைக்காய்க்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லாமையை அடுத்து அவற்றைக் கால்நடைகளின் உணவாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட் டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய கடும் வறட்சியான காலபோகத்தில் குடாநாட்டில் முருங்கைக்காய் அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளது. பெரும்பாலான முருங்கை மரங்கள் காய்களினால் நிறைந்துள்ளன. என்றுமில்லாதவாறு முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துள்ள போதும் அதற்கான சந்தை வாய்ப்புக் கிடைக்கவில்லை.

முருங்கைச் செய்கையாளர்கள் அதனைச் சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர். அவை சந்தையில் அதிகளவு தேங்கிக் காணப்படுகின் றன.

குறிப்பாக திருநெல்வேலி, சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம், சங்கானை சந்தைகளில் முருங்கைக்காய் கிலோ 25 ரூபா முதல் 35 ரூபா வரை விற்கப்படுகின்றது.

சந்தைப்படுத்த முடியாத முருங்கைக்காயை செய்கையாளர்கள் தமது கால் நடைகளின் உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த இரு மாதங் களுக்கு முன்பு ஒரு கிலோ முருங்கைக்காய் 300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது (த-17)

## 30 வருடங்களின் பின் வீதிகளுக்கு விமோசனம்

வடமராட்சி, செப்.25
கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாது சேதமடைந்து காணப்பட்ட வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்று தனிப்பனை வீதி, மருதங்கேணி வத்திராயன் அரசடி வீதி ஆகிய இரு வீதிகளும் திருத்தி புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 'ரைப்'நிறுவனத்தின் நிதி உதவியுடன் இரு வீதிகளும் திருத்திப் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

இந்த வீதிகளின் புனரமைப்புப் பணிகளை வடக்கின் மீள்எழுச்சித் திட்ட யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். இன்னும் சில மாதங்களில் இந்த வீதிப் புனரமைப்புப் பணி பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (ம-8)

## வலி. கிழக்குப் பகுதிகளுக்கு விரைவில் கேபிள் தொலைபேசி

யாழ்ப்பாணம், செப்.25
நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிக்கும் விரைவில் கேபிள் தொலைபேசி இணைப்புக்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தற்போது நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் 'இம்சான்' பரிவர்த்தனை அலகு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந்த அலகு மூலம் நீர்வேலிச்சந்தி வரையான இரண்டு கிலோமீற்றர் பகுதிக்கு கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப் படவுள்ளன.

முதற்கட்டமாக 200 இணைப்புக்கள் இந்தப் பகுதியில் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை - சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிகளுக்கும் 'இம்சான்' பரிவர்த்தனை அலகு அமைக்கப்பட்டு அதன் ஊடாக கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

அச்சுவேலி நகரத்திலும் 'இம்சான்' பரிவர்த்தனை அலகு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பரிவர்த்தனை அலகு மூலம் இந்தப்பகுதியில் கேபிள் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. (த-17)

## மணல் அகழ்வு, பனை தறிப்பு வடமராட்சி கிழக்கில் சட்டமீறல்

### மீறினால் நடவடிக்கை

வடமராட்சி, செப்.25
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சட்டவி ரோதமாக மணல் அகழ்தல், பனை மரம் வெட்டுதல் என்பன முன்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இந்த தடையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தெரிவித் துள்ளார்.

சட்டவிரோத மணல் அகழ்தல், பனைமரம் தறித்தல், அவற்றை வெட்டிக் கொண்டு செல்லல் போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளில் வீட்டுத்திட்டம் பெற்ற பயனாளிகளும் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளில் வீட்டுத் திட்ட பயனாளிகள் ஈடுபட்டால் வீட்டுத் திட்டம் உடனடியாக மீளப் பெற்றுக் கொள்ளப் படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரோ தலைமையகத்துள் போலிப் பெண் விஞ்ஞானி

### இரண்டுமுறை சென்று வந்தாராம்

பெங்களூர், செப். 25

பெங்களூரில் உள்ள இஸ்ரோ தலைமையகத்துக்குள் இரண்டு முறை சென்று வந்த போலி பெண் விஞ்ஞானி கைது செய்யப்பட்டார்.


கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பழைய விமானநிலைய வீதியில் உள்ளது இஸ்ரோ தலைமையகம். இது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இயங்கி வருகிறது. இந்த நிலையில் கடந்த 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் பெண் ஒருவர் தன்னை விஞ்ஞானி என்று கூறிக் கொண்டு இஸ்ரோ தலைமையகத்துக்குள் சென்று வந்துள்ளார்.

பலத்த பாதுகாப்பு இருந்தும், போலி அடையாள அட்டையைக் காண்பித்து பெண் ஒருவர் அதுவும் இரண்டு முறை இஸ்ரோ தலைமையகத்துக்குள் சென்று வந்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் 2 நாள்கள் சென்று வந்தும் 3 நாள்கள் கழித்து நேற்றுதான் அவர் போலி விஞ்ஞானி என்று கண்டறிந்து கைது செய்துள்ளனர்.

அவர் எதற்காக அங்கு சென்றார், தனலமையகத்தில் இருந்து ஏதாவது முக்கியத் தகவல்களை திருடிச் சென்றுள்ளாரா, அவரை யார் அனுப்பி வைத்தது என் பது குறித்து பொலிஸார் அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(வ)

# சனநெரிசலில் 12 பேர் சாவு

## ஜார்கண்டு ஆசிரமத்தில் விபரீதம்



ஜார்கண்டில் தோகார் மாவட்ட ஆசிரம பிரார்த்தனைக் கூட்டத்தின்போது ஏற்பட்ட திடீர் சனநெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்ததுடன், 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் 8 பேர் பெண்கள் என்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தாகூர் அனுகுல் சந்த்ராவின் 125 ஆவது ஜனன தினத்தைக் கொண்டாடும் வகையில், குறித்த டோகர் (Deoghar) ஆலயத்தின் சஸ்டாங்க் ஆசிரம மண்டபத்தில் அதிகாலை வழிபாட்டுக்காக தொண்டர்கள் கூடியிருந்த போதே மேற்படி சன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சுமார் 2 இலட்சம் பக்தர்கள் அங்கு கூடி ஒரே நேரத்தில் அங்குள்ள சத்திராவின் சமாதியை வழிபடுவதற்காக முயற்சி செய்த போது நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் சாஸ்டாங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். அதில் 9 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தில் கட்டுக்கடங்காத வகையில் தொண்டர்கள் கூடியதால், இடப்பற்றாக்குறை ஏற்பட்டதாகவும், ஆலயத்தின் வெளியே மட்டுமே பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், உள் வரும் பக்தர்களை வழிநடத்த வேண்டியது ஆலய நிர்வாக தொண்டூழியர்களின் வேலை என பொலிஸ் தலைமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச் சம்பவம் துரதிர்ஷ்டவசமானது என்று ஆலய நிர்வாகம் தெரிவித்தது. (வ)

## தனியார் மயமாக்கலை எதிர்த்து விமான நிலைய ஊழியர்கள் போராட்டம்

சென்னை, செப். 25

விமான நிலையத்தை தனியார் மயக்கமாக்குவதைக் கண்டித்து சென்னை விமான நிலைய ஊழியர்கள் காலைமுதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விமானநிலையங்களை தனியார்மயமாக்குவதைக் கண்டித்து , விமானநிலைய ஊழியர்கள் மூன்றுநாள் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இதனைய்டுத்து நேற்றுக்காலையில் சென்னை விமான நிலையத்தில் ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே போல் கொல்கத்தா விமான நிலையத்திலும் காலை முதல் உண்ணா விரதப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

விமான நிலைய ஊழியர்கள், அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் இந்தப் போராட்டம் சம்பள உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கை களையும் முன்வைத்து நடை பெறுகின்றது. நாடுமுழுவதும் 25 ஆயிரம் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## ரயில் – கார் விபத்து; 5 பேர் சாவு

அரூர், செப்,25

கேரள மாநிலம் அரூர் அருகே ஹப்பா எக்ஸ்பிரஸ் ரயிலும் காரும் விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஹப்பா - திருநெல் வேலி எக்ஸ்பிரஸ் ரயில் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஆள் இல்லாத ரயில்வே குறுக்குப் பாதையில் வந்த கார் ஒன்றின் மீது ரயில் வேகமாக மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே 3 பேர் உயிரிழந்தனர். மேலும் இருவர் மருத்து வமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தனர். இதில் மூன்றரை வயதுக் குழந்தையும் ஒன்று என்று ரயில்வே அதிகாரிகள் தெரி வித்தனர். நேற்றுப் பிற்பகல் 3 மணி அளவில் இந்த விபத்து நேரிட்டது.

## வட மாநிலங்களில் வெள்ளம், நிலச்சரிவு

### 30 பேர் சாவு

சிக்கிம், செப்.25

வடகிழக்கு மாநிலங்களில் பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இது வரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். சிக்கிமின் வடக்குப் பகுதி முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 48 மணி நேரத்தில் சிக்கிமில் மட்டும் 27 பேர் உயிரிழந்தனர். சன்தங் மற்றும் மங்கன் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வீதியில் சுமார் 7 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. தேசிய நெடுஞ் சாலையும் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. (வ)



ஜலந்தரில் ஹர்கிஷன் சிங் நினைவு விழாவில் கலந்த கொண்ட பஞ்சாப் துணை முதல்வர் சுக்பீர் சிங் படேல், சி.பி.எம். தலைவர் சீதாராம் யெச்சூரி ஆகியோரும் சந்தித்துக் கொண்டனர்.

## பீகார் முதலமைச்சருக்கு செருப்பை காட்டிய நபர்



பீகார் முதல்வர் நிதிஷ் குமாரை நோக்கி, செருப்பைக் காட்டிய மர்மநபரின் காணொலியை தொலைக் காட்சி ஒன்று ஒளிபரப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

பீகார் மாநிலம், மதுபானியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்று அந்த மாநில முதல்வர் நிதிஷ் குமார் பேசினார்.

அப்போது, கூட்டத்திலிருந்த மர்ம நபர் ஒருவர் நிதிஷ்குமாரை நோக்கி செருப்பைக் காட்டியதாகக் கூறப்படுகிறது.

இதை தனியார் தொலைக் காட்சி ஒன்று, படம் பிடித்து ஒளிபரப்பியதனால் பீகாரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆனாலும் இந்தத் தகவலை சம்பந்தப்பட்ட மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் மறுத்துள்ளார்.

குறிப்பிட்ட தொலைக் காட்சி அலைவரிசையில் வெளியான செய்தி தவறானது என்றும் அவர் குறிப்பிட்டார். (வ)

### வால் – மார்ட் நிறுவனத்துக்கு

## அமெரிக்காவில் எதிர்ப்பு இந்தியாவில் வரவேற்பா?

### சீறுகிறார் அத்வானி

அமெரிக்க தனியார் நிறுவனமான வால்-மார்ட்டுக்கு அமெரிக்காவிலேயே தற்போது எதிர்ப்பு வலுப் பெற்றுள்ள நிலையில் மன் மோகன் சிங் அரசு இந்தியாவில் அதனை அமைப்பதற்கு செங்கம்பளம்விரித்து வரவேற்பது சரியா என, பாரதீய ஜனதாக் கட்சி மூத்த தலைவர் அத்வானி கேள்வி எழுப்பியுள்ளார்.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டு அனுமதிக்கு எதிர்ப்பு தெரிவித்து தனது வலைப் பதிவில் கருத்துக் கூறியுள்ள அத்வானி மேலும் தெரிவித் ததாவது:-

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளித்ததன் மூலம், நாட்டில் உள்ள கோடிக்கணக்கான சிறு வியாபாரிகளின் வாழ்க்கையுடன் மத்திய அரசு விளையாடுகிறது. பா.ஜ.க. ஆட்சியின்போது, இதே பிரச்சினை வந்த போது காங்கிரஸைச் சேர்ந்த பிரிய ரஞ்சன் தாஸ் முன்ஷி, அன்னிய முதலீட்டை அனுமதிப்பது தேச விரோத நட வடிக்கை என்றார். இதே காங்கிரஸ் தற்போது அன்னிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவை தற்போது அறிவித்துள்ளனர். வால்- மார்ட் நிறுவனத்தை மூடக் கோரி அமெரிக்காவின் நகரங் களில் போராட்டம் நடத்தப் படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. ஆனால் மெக்ஸிகோவில் வால்-மார்ட் கடைகள் திறக்கப்படுகின்றன. அதே போன்று இந்தியாவிலும் இனி திறக்கப்படும்- என்றார். (வ)

## தாஜ்மஹாலின் அழகை ரசித்த சவூதி இளவரசி



சவூதி அரேபியாவின் இளவரசி தனது இந்திய சுற்றுப் பயணத்தின் போது தாஜ்மஹாலின் அழகைக் கண்டு ரசித்து மகிழ்ந்தார். சவூதி அரேபியாவின் அரசர் அப்துல்லா பின்-அப்துல் அஜீஸின் மகளான இளவரசி அடெலா பின்ட் அப்துல்லா அல் சவுத் 6 நாள் பயணமாக இந்தியா சென்றிருந்தார்.

12 உறுப்பினர்கள் கொண்ட குழுவுடன் இந்தியா சென்ற இளவரசி அடெலா, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவர் சோனியாகாந்தி, மனி தவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கபில் சிபல், சுற்றுலாத்துறை அமைச்சர் சுல்தான் அகமது மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் மீராகுமார் உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு உறவு பற்றிய பல்வேறு விடயங்களை விவாதித்தார். இவர் சவூதி அரேபியாவில் பாரம்பரிய பாதுகாப்புச் சங்கம் மற்றும் தேசிய [illegible] ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக [illegible] (வ)

## மூன்று தினங்களுக்குள் அமைச்சரவை மாற்றம்

டில்லி, செப். 25

மத்திய அமைச்சரவை, இன்று அல்லது எதிர்வரும் 28 ஆம் திகதி மாற்றியமைக்கப்படலாம் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டீசல் விலை உயர்வு, சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து, மம்தா பானர்ஜியின் திரிணமுல் காங்கிரஸ், கடந்த வெள்ளிக்கிழமை விலகியது. இதையடுத்து, மத்திய அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படலாம் எனக் கடந்த சில நாள்களாகவே பேசப்பட்டு வருகிறது.

**அமைச்சரவை மாற்றம் குறித்து, பிரதமர் மன் மோகன் சிங்குடன், காங்கிரஸ் தலைவர் சோனியா, முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளனர்.**

இந்தநிலையில், இன்று அல்லது எதிர்வரும் 28 ஆம் திகதி, மத்திய அமைச்சரவை மாற்றி அமைக்கப்படலாம் என டில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நாளையும் நாளை மறுதினமும் காஷ்மீரில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அவர் டில்லியில் தங்கியிருக்கும் நாள்களைப் பொறுத்து அமைச்சரவை மாற்றம் இருக்கும் என்று கூறப்படுகிறது. அதேநேரத்தில், அமைச்சரவை மாற்றம் குறித்து, பிரதமர் மன் மோகன் சிங்குடன், காங்கிரஸ் தலைவர் சோனியா, முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளனர்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான் முன்னாள் ஜனாதிபதியின் மகளுக்கு சிறைத் தண்டனை



ஈரான் அரசுக்கு எதிராக பொய் பிரசாரம் செய்த அந்த நாட்டு முன்னாள் ஜனாதிபதியின் மகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதியாக அக்பர் ஹஸ்மி ரப்சன் ஜானி, கடந்த 1989ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார்.

தற்போது அக்பர் ஹஸ்மி எதிர்க்கட்சியின் தலைவராக உள்ளார். இந்தநிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு செய்து ஜனாதிபதியானதாக முகமது அகமது நிஜாத் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்து, ஜனாதிபதி அகமது நிஜாத்துக்கு எதிராக பிரசாரம் செய்து வந்ததா கவே முன்னாள் ஜனாதிபதி மகள் மீது வழக்குத் தொடரப் பட்டது.

அக்கால கட்டத்தில் தந்தை முன்னாள் ஜனாதிபதி என்ற செல்வாக்கு இருந்ததால் கைதாகவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டு, 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து அவர் ஈவின் சிறையில் அடைக்கப்பட்டார். (வ)

## நேட்டோப் படைகள் வெளியேற்றம்
# சீனாவுடன் இணைகின்றது ஆப்கன்

ஆப்கானிஸ்தானிலிருந்து 2014 ஆம் ஆண்டு நேட்டோப் படைகள் முழுமையாக வெளியேறவுள்ளது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் சீனாவுடன் இணைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அல்குவைதா, தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகள் ஈடுபட்டுள்ளன.

இவர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்படும் படையினர், பொலிஸாருக்குப் பயிற்சிகளும் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுடன் நேட்டோப் படைகள் ஆப்கானை விட்டு முழுமையாக வெளியேற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து தங்கள் இராணுவம், பொலிஸ் துறைக்கு நிதியுதவி பெறும் முயற்சியில் ஆப்கான் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.



இதற்கிடையே சீனாவின் உள்நாட்டு பாதுகாப்பு உயர் அதிகாரியும், கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக் குழு உறுப்பினருமான ஹோவ் யாங்காங் திடீரென்று ஆப்கானிஸ்தான் சென்றார்.

அங்கு காபூல் நகரில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாயைச், சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் பாதுகாப்பு, பொருளாதாரம் தொடர்பான ஒப்பந்தங்களில் இருவரும் கையெழுத்திட்டனர். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் குறித்து விரிவான தகவல் வெளியிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பொலிஸாருக்கு தற்போது நேட்டோ படையினர் பயிற்சி கொடுத்து வருகின்றனர். நேட்டோப் படைகள் வாபஸ் பெற்ற பின்னர் புதிய ஒப்பந்தம் மூலம் சீனா உதவி வழங்கும் என தெரிகிறது.

1966ஆம் ஆண்டுக்கு பின்னர் சீன உயர் அதிகாரி ஒருவர் ஆப்கானிஸ் தானுக்கு சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

**ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பொலிஸாருக்கு தற்போது நேட்டோ படையினர் பயிற்சி கொடுத்து வருகின்றனர்.**

## நேபாளத்தில் பனிச்சரிவு 9 பேர் சாவு

**ஐவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒரு ஜேர்மனிய மலையேறியின் சடலம் மற்றும் வழிகாட்டியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.**

நேபாளத்தின், மானஸுலு மலையில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி, மலையேறிகள் 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 4 பேர் காணாமல் போயுள்ளனர்.

உலகின் 8 ஆவது மிகப் பெரிய மலைத்தொடரான மானஸுலு, காத்மண்டுவிலிருந்து சுமார் 100 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு, நேற்று முன்தினம் இரவு மலையேறிகள் சிலர் ஏறிக்கொண்டிருந்த போது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் புதையுண்டு இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதுவரை ஐவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒரு ஜேர்மனிய மலையேறியின் சடலம் மற்றும் வழிகாட்டியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

7 சடலங்கள் புதைந்த நிலையில் மீட்கப்பட்டிருப்பதாகவும் விரைவில் அவற்றை மீட்டெக்க முயற்சி நடைபெற்று வருவதாகவும் ஹெலிகொப்டரில் சம்பவ இடத்துக்கு விரைந்த நேபாள மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## கொலம்பியா சிறையில் அழகிப்போட்டி ஆர்வத்துடன் கைதிகள் பங்கேற்பு



கொலம்பியா தலைநகர் பகோடாவில் உள்ள எல் புளுயன் பெண்கள் சிறையில் அழகிப் போட்டி நடைபெற உள்ளது.

எல் புளுயன் சிறையில் வருடம் தோறும் பெண் கைதிகள் மறு வாழ்வுத் திட்டத்தின் கீழ் அழகிப் போட்டி நடத்தப்படுகின்றது.

இந்த சிறையில் மொத்தம் 9 பிளாக்குகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் அதிக பட்சம் 250 பெண் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிளாக்கிலிருந்தும் ஒரு பெண் கைதி இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டு கடைசியில் இறுதிப்போட்டி நடைபெறும். இந்தப் போட்டி ஒரு நாள், இரண்டு நாள் நடக்கும் நிகழ்ச்சியாக இல்லாமல், பல வாரங்களாகவே இதற்கான தகுதிப் போட்டிகள், பயிற்சி போன்றவை நடைபெறுவது வழக்கம்.

இந்தாண்டு நடைபெறவிருக்கும் போட்டிக்காக கவர்ச்சியான உடையில் நளின நடைபோட்டும், நடனமாடியும் பயிற்சிகள் பல பெற்று தயாராகி வருகின்றனர் பெண் சிறைக் கைதிகள். இவர்கள் அனைவருமே போதைப் பொருள் கடத்தல், திருட்டு, கொலை உட்பட பல்வேறு வழக்குகளில் சிக்கி சிறைத் தண்டனை பெற்றவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

## மர்ம நபர்களால் சோமாலியாவில் எம்.பி; சுட்டுக்கொலை

சோமாலியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் முஸ்தப் ஹாஜி முகமத், மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சோமாலியாவின் வபேரி மாவட்டத்தில் உள்ள மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை நேர தொழுகையை முடித்து விட்டு வெளியே வந்த நாடாளுமன்ற உறுப்பினர் முஸ்தப் ஹாஜி முகமத்தை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உடனே அவர்கள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

இந்தக் கொலைக்கு இது வரை எந்த அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. இருப்பினும் அல்குவைதா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய அல் ஷபாப் அமைப்பினர் இதனைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில் புதிதாக அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என அல் ஷபாப் அண்மையில் அறிவித்திருந்தது குறிப் பிடத்தக்கது.

## பேர்த்தியின் உயிர் காக்க வங்கியில் கொள்ளையடிக்க முயன்ற தாத்தா

ஜேர்மனியில் தன் பேர்த்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவளது தாத்தா (வயது 60) வங்கியில் கொள்ளையடிக்க முயன்றுள்ளார்.

வெஸ்ட்ஃபேலியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றினுள் மாறுவேடத்தில் நுழைந்த முதியவர் ஒருவர், தனக்கு 50 ஆயிரம் யூரோ தருமாறு வங்கி அதிகாரியை மிரட்டி உள்ளார்.

அந்தளவு பணம் தன்னிடம் இல்லை என்று அதிகாரி தெரிவித்ததும், 10 ஆயிரம் யூரோவாவது கொடுங்கள் என்று கேட்டுள்ளார். அதன் பின் பயந்து கொண்டு வங்கியை விட்டு வெளியேறி உள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாள்கள் கழித்து நீதிமன்றத்துக்கு வந்து தன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

நீதிமன்றத்தில், தன்னுடைய பேர்த்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே இவ்வாறு செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நீதிபதி, விரக்தியினால்தான் நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்துள்ளீர்கள். இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறி அனுப்பிவிட்டார். இவர் மீது எந்தவித குற்ற வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

## போதையில் கார் செலுத்தி மொஸ்கோவில் விபரீதம்

**7 பேர் உடல் நசுங்கிச் சாவு**



ரஷ்யாவில் போதையில் கார் செலுத்தி வந்த ஆசாமி ஒருவர், திடீரென பஸ் நிலையத்துக்குள் புகுந்ததால் 7 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் மேற்குப் பகுதியில் உள்ள பஸ் நிலையம் ஒன்றில் பயணிகள் ஏராளமானோர் நேற்று முன் தினம் வரிசையில் காத்திருந்தனர். அப்போது திடீரென கார் ஒன்று கூட்டத்துக்குள் புகுந்ததில் 4 சிறுவர்கள் உட்பட 7 பேர் பரிதாபமாக உடல் நசுங்கி உயிரிழந்தனர். 4 பேர் படுகாயமடைந்தனர். உயிரிழந்த சிறுவர்கள் 14 முதல் 16 வயதுக்கு உட்பட்டவர்கள். தகவல் அறிந்து உடனடியாக விரைந்து வந்த பொலிஸார், காரைச் செலுத்தி வந்த நபரைக் கைது செய்தனர்.

முதல் கட்ட விசாரணையில் அவர் போதையில் இருந்ததும், 200 கிலோ மீற்றர் வேகத்தில் காரைச் செலுத்தி வந்ததும் தெரியவந்துள்ளது. (வ)

## ஜப்பான்- சீனா நாடுகளுக்கிடையேயான இராஜதந்திரத் தொடர்புகள் ரத்து

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தீவுப்பிரச்சினை காரணமாக ஜப்பானுடனான 40 வருட இராஜதந்திர தொடர்பு நிகழ்வை சீனா ரத்துச் செய்துள்ளதாக ஜப்பானிய வெளியுறவு அமைச்சு உறுதி செய்துள்ளது.

ஜப்பான் வசம் உள்ள ஸுநமெயமர தீவுகள் தொடர்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல வருடங்களாக பிரச்சினை நீடித்து வருகிறது.

சீனாவுக்கு கிழக்கே அமைந்துள்ள மக்களற்ற இந்தத் தீவுகளில் இயற்கை வளங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தநிலையில் 2010 ஆம் ஆண்டில் இந்த தீவுகள் விடயத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் ராஜதந்திரப் பிரச்சினை ஏற்பட்டது

இதனையடுத்து கடந்த வாரத்தில் சீனாவின் 20 கப்பல்கள் அந்தத் தீவுப்பகுதிகளில் கண்காணிப்பை மேற்கொண்டதாக ஜப்பான் குற்றம் சுமத்தியிருந்தது.

இந்தப் பிரச்சினைக்கு மத்தியிலேயே எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவிருந்த இராஜதந்திர நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஜாவ்லின்' ஏவுகணைத் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா மறுப்பு

'ஜாவ்லின்' ரக பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைத் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது.

மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் தனது 350 படைப் பிரிவுகளை நவீனப்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. அதற்காக 'ஜாவ்லின்' ரக ஏவுகணைகளை அமெரிக்காவிடம் இந்தியா கோரியுள்ளது.

இவ்வகை ஏவுகணைகளை ஜேவி நிறுவனம் தயாரித்த போதும், அமெரிக்காவின் வெளிநாட்டு இராணுவத் தளபாட விற்பனைப் பிரிவு வழியாகவே விற்பனை செய்யப்படுகின்றன. இந்த ரக ஏவுகணை மற்றும் சிக்கலான தொழில் நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா ஆர்வம் காட்டவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய நிபுணர்கள் 'ஜாவ்லின்' ஏவுகணையை களப் பரிசோதனை செய்து மதிப்பிடுவதை அமெரிக்கா விரும்பவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஜாவ்லின்' மற்றும் இஸ்ரேல் நாட்டின் 'ஸ்பைக்' ஏவுகணைகளை வாங்குவது தொடர்பான பேச்சு கடந்த 2 ஆண்டுகளாகத் தாமதமாகி வருகிறது. 2010ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி அமெரிக்காவுக்கு கடிதம் மூலம் இது குறித்துக் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பனேட்டாவின் அண்மைய இந்திய வருகையின்போது, தொழில்நுட்பங்களை வழங்குவது தொடர்பான முயற்சிகளை அமெரிக்கா முன்னெடுக்கும் என அந்தோனியிடம் தெரிவித்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, டி.ஆர்.டி.ஓ. அமைப்பைத் தனிப்பட்டியலில் இருந்து நீக்கி, வர்த்தக உறவை எளிமைப்படுத்துவதாகக் கூறியிருந்தார். ஆனால், அது செயற்பாட்டுக்கு வரவில்லை என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) தலைவர் வி.கே. சாரஸ்வத் அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சீன இராணுவத்தில் விமானம் தாங்கி கப்பல்



அமெரிக்காவுடன் போட்டி போடும் அளவுக்கு இராணுவ பலத்தை அதிகரித்து வரும் சீனா இப்போது முதன் முதலாக இராணுவத்தில் விமானந்தாங்கிக் கப்பலைச் சேர்த்துள்ளது.

சீன இராணுவம் உலகில் வலிமையான இராணுவமாக இருந்தாலும், இதுவரை அதன் வசம் விமானம் தாங்கிக் கப்பல் இல்லாமல் இருந் தது.

இந்தக் கப்பல் ரஷ்யாவுக்குச் சொந்தமானதாகும். ரஷ்யா 1991ஆம் ஆண்டு உடைந்தபோது அந்தக் கப்பல் உக்ரைனுக்கு சொந்தமானது. 2002 ஆம் ஆண்டு அந்தக் கப்பலை சீனா விலைக்கு வாங்கி புதுப்பித்தது.

சீனாவில் உள்ள டேலியன் கப்பல் கட்டும் துறையில் பலஆண்டுகளாக புதுப்பிப்புப் பணி நடந்து முடிந்து, இப்போது சீன கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கப்பலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிக்காக பயன்படுத்தப் போவதாக சீனா கூறியுள்ளது. ஆனால் சீனா அண்மைக்காலமாக அயல் நாடுகளான ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், சுவீடன்கடற்நிலபரப்பு தொடர்பாக மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. எனவே இந்த கடல் பகுதியில் கண்காணிப்பதற்காகவும் அந்த நாடுகளை அச்சுறுத்தும் வகையிலும் கப்பலை பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் 990 அடி நீளம் கொண்டதாகும். 36 விமானங்கள், 16 ஹெலிகொப்டர்களை இதில் நிறுத்தி வைக்கலாம். 3 ஆயிரம் வீரர்கள் கப்பலில் தங்கியிருக்கும் வசதி உள்ளது. ரஷ்யாவிடம் இந்தக் கப்பல் இருந்தபோது 'வர்யாக்' என்று பெயரிடப்பட்டு இருந்தது. சீனா இதற்கு 'ஷிலேங்' என்று பெயரிட்டு உள்ளது.

## காந்தி போதனைகளே எனது வழிகாட்டி

### ஆங் சான் சூகி தெரிவிப்பு

நியூயோர்க், செப். 25

எனக்கு வழிகாட்டிய காந்தியடிகளின் போதனைகளை, மாணவர்களும் படிக்க வேண்டும் என்று, மியன்மார் நாட்டின் ஜனநாயகத் தலைவர் ஆங் சாங் சூகி அறிவுறுத்தியுள்ளார்.



மியன்மார் நாட்டின், தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர் ஆங் சாங் சூகி. 1990ஆம்ஆண்டில்மியன்மாரில் நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். ஆனால், அவரை ஆட்சியில் அமர விடாமல், அந்நாட்டு இராணுவ அரசு, வீட்டுச் சிறையில் அடைத்தது.

2010 இல் இவர், தேர்தலில் போட்டியிட முடியாதபடி மியன்மார் அரசு, சில வழக்குகளைத் தொடர்ந்தது. தேர்தல் முடிந்ததும் சூகி, விடுதலை செய்யப்பட்டார். ஜனநாயக முறையில் இவர் போராடியதற்காக, அமைதிக்கான நோபல் பரிசும் பெற்றுள்ளார். மியன்மார் நாட்டில், தற்போது ஜனநாயக நடைமுறைகள் ஓரளவுக்கு பின்பற்றப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, சூகி, வெளிநாடுகளில் பயணம்மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சூகி, நியூயோர்க்கில் உள்ள, கொலம்பியா பல்கலைக் கழகத்தில், நேற்றுமுன்தினம் உரையாற்றினார். இதன்போது, அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:-

நான் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில், காந்தியடிகள் மற்றும் ஜவகர்லால் நேரு ஆகியோரின் படைப்புகளை படித்திருக்கிறேன். இந்த நூல்கள், எனக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தது மட்டுமல்ல, வழிகாட்டியாகவும் அமைந்தது. மாணவர்கள் அனைவரும் காந்தியடிகள் ஆற்றிய தொண்டைக் கற்க வேண்டும்.

காந்தியடிகளுக்கு முன் இருந்தவர்கள், அகிம்சையின் மூலம், புரட்சி செய்ய முடியும் என்பதை அறிந்திருக்கவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்த சமகாலத்தில்தான், மியன்மாருக்கான சுதந்திரப் போராட்டத்தில் என் தந்தை ஆங் சானும் ஈடுபட்டிருந்தார். நேருவும், என் தந்தையும் நண்பர்கள். காந்திஜி, மார்ட்டின் லூதர் கிங், ஆங் சான் போன்றவர்கள் காட்டிய வழி தான், என் அரசியல் வாழ்க்கைக்குத் தூண்டு கோலாக அமைந்தது- என்றார்.

## தேவாலயத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் 2 பேர் சாவு; 4 பேர் காயம்

நைஜீரியா நாட்டில் பௌசி நகரில் செயின்ட் ஜான்ஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது மனித வெடி குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 2 பேர் இறந்தனர், 48 பேர் காயமடைந்தனர்.

போக்கோ ஹாரம் என்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகிறது. தேவாலயத்தில் கார் நிறுத்தும் பகுதியில் இந்தக் குண்டு வெடித்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
பொன்னுத்துரை திரவியம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பத்மாவதி மகேந்திரன் அவர்களின் அன்புத் தாயார் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அம்மையாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கொக்குவில்.
(23283)(5-6-7)

## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணகத்தில் 30.12.1953
விண்ணகத்தில் 18.09.2010

அமரர்
தம்பித்துரை சபாரத்தினம் (நடனம்)
(மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்)
திதி: பூர்வ பட்ச ஏகாதசி 25.09.2012

அன்பான உறவொன்று ஆண்டவனடி சென்றதோ
பண்பான உயிரொன்று பரமனடி சென்றதோ
எங்குதான் சென்றீர்கள் எம் உறவுகளைத் தவிக்கவிட்டு
ஓடி வந்திடுங்கள் உங்கள் உறவுகளை அரவணைக்க

குடாரப்பு, நாகர்கோயில். குடும்பத்தினர்

## தவறிவிட்டது

சாவகச்சேரியில் இருந்து சரசாலையூடாக பருத்தித்துறைக்கு எனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொழுது, மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு இல.NPWII 6068 தவறிவிழுந்துவிட்டது. கண்டெடுத்தோர். தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 078 326 1754 து.சிவயோகலிங்கம்
(23279)(5-6-7)

## கார் விற்பனைக்கு

மாருதி சுசுக்கி ALTO K10 - 2011 கறுப்பு நிறம் தனிப்பாவனையில் உள்ளது. 7500 km ஓடியது

தொடர்புகளுக்கு : 077 9845820
(23272)(8-6-7)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய உணவு உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதற்கு அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை

தகைமைகள்

* வயது எல்லை - 25 தொடக்கம் 40
* கல்வித்தகைமை - க.பொ.த சாதாரண தரம்
* மோட்டார் சைக்கிள் உள்ளவராக இருத்தல்
* முன் அனுபவம்

சம்பளம் - நியாயமான மாதாந்த சம்பளத்துடன் ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ 30.09.2012 க்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

SOND நிறுவனம்,
[illegible]
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212226700

## இரண்டாவது ஆண்டு நீங்காத நினைவுகள்

மலர்வு 04 * 09 * 1931
உதிர்வு 25 * 09 * 2010



திருமதி
சின்னத்துரை இராசமணி

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும் எமை வளர்த்து
முறையாக கல்வி புகட்டி வாழ்வின் வழிகாட்டியாக
இருந்து எம் நலனுக்காய் தன்னலம் பாராது வாழ்ந்து
இன்று தெய்வத்தோடு கலந்துவிட்ட என் அன்புத் தாயே
இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவுகள்
எமைவிட்டு நீங்காதம்மா

சந்தை வீதி,
காங்கேசன்துறை,மல்லாகம்.
(23286)(5-6-7)
சி. ஆனந்தன் குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்



சின்னத்தம்பி மகேந்திரன்
(ஓய்வு பெற்ற முன்னாள் ஊழியர் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை, M.S.F வவுனியா)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேந்திரன் (22.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பற்றிமாராணியின் அன்புக் கணவரும் யூட்சுதர்சன் (CACM.போதகர்) காலஞ்சென்ற அன்ரன் லோகர்ஷன் மற்றும் சசிபமிளா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை), காலஞ்சென்ற சோபியா, ஜொய்சி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெவ்றி, ஜெபஜோதி ஆகியோரின் மாமனாரும் தானியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.09. 2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக் கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரிசுத்த யாக்கோபு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

148, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
0212224980, 0774132826 (23261) (15-6.7)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(16)

சாக்ரடீஸ், மரணத்தை துணிச்சலோடு சந்தித்திருக்கிறார். அவர் மரணம் அடையப் போகிறாரே என்று அவருடைய நண்பர்கள் வருந்திய நேரத்தில் ''மரணம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கட்டாயம் நிகழ்ந்து தீர வேண்டிய ஒன்று. அதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்'' என்று ஆறுதல் சொன்னார் சாக்ரடீஸ். மரணத்தின் வாயிலில் நின்ற பொழுதும் துணிச்சல் காட்டிய மாவீரர்களின் வரலாறு ஏராளம், ஏராளம்.



நம்முடைய் நாட்டில் நடந்த விடுதலைப் போராட்டத் தின்போது கூட பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் போன்ற இளைஞர்கள் தூக்கு மேடைக்குத் துணிச்சலுடன் சென்றிருக்கிறார்கள்.

தத்துவஞானிகள், சிந்தனையாளர்கள் மட்டுமல்ல, விஞ்ஞானிகளும் கூட சோதனைகள் நிகழ்த்திய காலத்தில் தங்களுடைய துணிச் சலை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். பறவைகளைப் போல் பறக்க வேண்டுமென ஆசை கொண்டு லேசான வாயு அடைத்த பலூனில் ஏறிப் பறந்து அந்த பலூன் வெடித்ததால் கீழே விழுந்து உயிர் விட்டவர்கள் எத்தனை பேர்.

பரிணாம தத்துவத்தைக் கண்டறிந்த விஞ்ஞானி டார்வின் ஒரு சமயம் வண்டுகளைச் சேகரித்து ஆராய்ச்சிகள் நடத்தினார். வண்டுகள் எங்கே கிடைத்தாலும் அவற்றைப் பிடித்து சட்டைப் பையில் போட்டுக் கொள்வாராம். ஒரு சமயம் இரண்டு கைகளிலும் இரண்டு வண்டுகளை வைத்திருந்தார். மூன்றாவது நூதனமான வண்டு ஒன்று பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். அதைப் பிடிக்க வேண்டும், என்ன செய்வது? ஒரு கையிலுள்ள வண்டை வாயில் வைத்துப் பற்களுக்கிடையில் பற்றிக் கொண்டார். வேகமாக பறக்கின்ற மூன்றாவது வண்டைத் தாவிப் பிடித்தார். அவர் தாவிய வேகத்தில் பற்களுக்கிடையே இருந்த வண்டைக் கடித்துவிட அது இரண்டு துண்டாகி வாய்க்குள் விழுந்தது. அது விஷ வண்டானதால் அவருடைய வாய் புண்ணாயிற்று. அந்தப் புண் ஆற அவருக்கு நீண்ட காலம் பிடித்தது.

ஆர்வத்தின் காரணமாக அவர் உண்டாக்கிக் கொண்ட துணிச்சல் அவருக்கு ஆபத்தை விளைவித்தாலும் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு துணிச்சலுடன் அவர் நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக உலகம் போற்றும் ஒப்பற்ற தத்துவமான 'பரிணாமத் தத்துவத்தை' அவர் கண்டறிந்தார்.

துணிச்சலுக்கு விஞ்ஞானிகளின் வாழ்க்கையிலிருந்து நிறைய உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். எந்தச் சாதனையாளரும் துணிச்சல் இன்றி வெற்றி கண்டதில்லை. பயத்தை தோழமையாகக் கொண்டவர்கள் வாழ்க்கையில் தோல்வியாளர்களாகவே காட்சி தருகிறார்கள்.

**அஞ்சுவது அஞ்சாமை**

'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வாழ்க்கையில் அஞ்ச வேண்டிய விஷயங்களும் உண்டு என்று பெரியவர்கள் சொல்லியுள்ளதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் அவர்கள் குறிப்பிடுகின்ற அச்சத்திற்கும் இந்தப் புத்தகத்தில் நான் குறிப்பிடும் அச்சத்திற்கும் அடிப்படை வேறுபாடுகள் உண்டு.

செய்யக் கூடாததைச் செய்வதற்கு அச்சப்படாமல் இருப்பதை பேதமை என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

பொய் சொல்லுவதற்கு அச்சப்பட வேண்டும். திருடுவதற்கு அச்சப்பட வேண்டும். இது போன்ற செய்யக் கூடாத காரியங்களைச் செய்வதற்கு அச்சப்பட வேண்டும். இதற்கு அச்சம் என்று பெயரிட்டு அழைத்தாலும் உண்மையில் அறிவுத் தெளிவின் விளைவாக ஏற்படும் குணம் இது என்பதில் சந்தேகமில்லை.

நான் இந்தப் புத்தகத்தில் அச்சம் கூடாது என்று குறிப்பிடுகிற போது ஆக்க ரீதியான காரியங்களைச் செய்வதற்குத் தடையாக இருந்து நம்முடைய மனதில் ஆழமாகப் பதிந்துவிடும் எதிர்மறைக் குணத்தையே அச்சம் என்று குறிப்பிட்டுள்ளேன்.

அனுபவத்தின் காரணமாக தெளிவு ஏற்பட்டு ஒரு காரியத்தைச் செய்வது தவறு என நாம் எண்ணுவது ஒரு போதும் அச்சமாகாது. பார்க்கப் போனால் அதை ஒரு வகையில் துணிச்சல் என்றே கூற வேண்டும்.

போரில் காட்டும் வீரத்தை ஆண்மை என்று சொல்லுகிறார்கள். ஆனால் திருவள்ளுவர் பிறருடைய மனைவியை ஏறெடுத்தும் பார்க்காத குணத்தைப் பேராண்மை என்று குறிப்பிடுகிறார். 'பிறன் மனை நோக்கா பேராண்மை' என்பது வள்ளுவர் வாக்கு.

காந்திஜியைப் போல் துணிச்சல் மிக்கவர்கள் எவரும் இருந்ததில்லை. சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்ப்பதற்கு அசாத்திய துணிச்சல் வேண்டும். அந்த சாம்ராஜ்யத்தையே எதிர்த்து பாரத நாட்டிற்கு விடுதலை வாங்கித் தரும் துணிச்சல்காரராக காந்திஜி விளங்கினார். அவர் கூட தன்னுடைய அந்தராத்மாவிற்குப் பயந்து காரியங்களைச் செய்ததாகக் குறிப்பிடுகிறார்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# காரைநகரின் வளத்தைப் பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவிப்பு

காரைநகர் பிரதேசம் பசு வளமும், பனை வளமும் நிறைந்த பகுதியாகும். இந்த வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி இந்தப் பிரதேச மக்கள் உயர்ந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த இரு வளங்களையும் சரியான முறையில் பாதுகாத்து வளப்படுத்துவதன் ஊடாக நிறைந்த வருமானத்தைப்பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள் என்று ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே சச்சிதானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பனை வளத்தையும் பசு வளத்தையும் நாம் அழிக்கக்கூடாது. அவற்றைப் பெருக்கிப் பாதுகாப்பதன் ஊடாக உயர்ந்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியும். யாழ்.மாவட்டத்தில் தொற்றுநோய் மிகக் குறைந்த பிரதேசமாக காரைநகர் காணப்படுகின்றது. தொற்றுநோய் தொடர்பான புள்ளி விவரங்களில் காரைநகர் பிரதேசம் பூச்சியமாகவே காணப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும்.

ஆள்கள் இல்லாத வளவுகளில் குப்பைகளைக் கொட்டாமல் பொது இடத்தில் குப்பைகளைக் கொட்டி அதனை மண்ணில் புதைத்து அதன் மேல் பனம் விதையை நட்டால் வளம் மேலும் பெருகும்.

மேலும் காரைநகரில் மயிர் கொட்டிகள் பெருகுவதாகக் கவலைப் படுகிறார்கள். அவற்றை முற்றாக அழித்தால் எமது தேசிய வளமும் அழிந்துவிடும். மயிர் கொட்டிகளே வண்ணத்துப்பூச்சிகளாக மாற்றமடைகின்றன. அவை தொடர்ந்து மகரந்த சேர்க்கை மூலம் காய் கனிகள் உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றன.

எனவே மயிர்க்கொட்டிகளை முற்றாக அழிக்காமல் எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பகுதிகளில் உள்ளவற்றை மாத்திரம் அளிக்க வேண்டும்-என்றார். (எ-250)



வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்திய பாரதி விழாவில் கௌரவிக்கப்பட்ட வவுனியா வாணி கணினிப் பதிப்பக அதிபர் பொ.செல்வநாயகம் தம்பதிகளையும் திருப்பணிச் செம்மல் தி.தில்லைநாதன், வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் தம்பதிகளையும் தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோரையும் காணலாம்.

(எ-400)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



சுழிபுரம், செப்.25

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் வி.உமாபதி அகில இலங்கை சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிவான் எ.ஜீ.அலக்ஸ் ராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த இவர் இளைப்பாறிய ஒரு பொறியியலாளர். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள மீள் எழுச்சித் திட்டம், யாழ்ப்பாண மாவட்டத்தின் திட்டப் பொறியியலாளராகவும் சுழிபுரம் மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் நிர் வாக உறுப்பினராகவும் சுழிபுரம் மேற்கு பாரதி கலை மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்து வரு கிறார்.

(எ-28)

# நல்லொழுக்க தின போட்டிகள்

வடமராட்சி,செப்.25

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு, வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

6 தொடக்கம் 13 ஆம் தரம் வரையான மாணவர்கள் மத்தியில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவுகளுக்கான தலைப்பு ''மது, புகை போதையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உரு வாக்குவோம்'' மேற்பிரிவுக்கான தலைப்பு ''சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்போம்'' என்பதாகும்.

முதலில் பாடசாலை மட்டத்தில் இந்தப் போட்டியை நடத்தி அதில் முதலாம் இடத்தைப் பெற்ற போட்டியாளரை மட்டும் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், அல்வாய் கிழக்கு அல்வாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-8)

# விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,செப்.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே வகுப்பு ரீதியாக நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மாகாண நிலைப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தமிழ் மொழி மூலம்**

**தரம்-6**

1 ஆம் இடம்-யோசப் ஸ்ரெலின் நிஷாசிங்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, 2 ஆம் இடம்-ஜெயக்குமார் கஜவதனி-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 3 ஆம் இடம்-[illegible] வரதன்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**தரம்-7**

1 ஆம் இடம்-ஜெகசீலன் பானுகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம்-சந்திரசேகரம் சங்கவி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம்-அச்சுதன் கீர்த்தனன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தரம்-8**

1 ஆம் இடம்-சுப்பிரமணியம் சுபாஷன்-நாவற்குழி ம.வி, 2 ஆம் இடம்-குணரத்தினம் கம்சிகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம்-பாலச்சந்திரன் சங்கீதன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**தரம்-9**

1 ஆம் இடம்-தயாபரன் சதுலக்ஸன்-மட்டுவில் கமலாசனி வித்தி, 2 ஆம் இடம்-வேலாயுதபிள்ளை கோகுலன்-வரணி ம.வி, 3 ஆம் இடம்-சிவஸ்கந்தராஜா கிருஷாயினி-வரணி ம.வி.

**தரம்-10**

1 ஆம் இடம்-செல்வராஜா சுகர்ணன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம்-தங்கவேல் குணவதனி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம்-தங்கராஜா சங்கீத்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தரம்-11**

1 ஆம் இடம்-கிருஷ்ணமூர்த்தி தனுஷன்-வரணி ம.வி, 2 ஆம் இடம்-கிருஷ்ணானந்தலிங்கம் தர்மிகன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம்-முருகதாஸ் மயூரன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (எ-9) (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
**செய்தி:** 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்த். முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021–2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தொடர் போராட்டம் தேவை

உலகின் மிகப் பெரிய மனிதத் தடுப்பு முகாம் என, மூன்று வருடங்களுக்கு முன்னர் மனித உரிமைகள் அமைப்புக்களால் வர்ணிக்கப்பட்ட 'மனிக்பாம்' இடைத்தங்கல் முகாம் ஒரு வழியாக மூடப்பட்டுவிட்டது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் அந்த முகாம்களுக்குள் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அடைக்கப்பட்டபோது உலகமே அதிர்ந்தது. கண்டனக் குரல்கள் தீவிரமாக எழுப்பப்பட்டன. முகாமை உடனடியாக மூடி மக்களை அவர்களது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புமாறு உலக நாடுகள் பலவும் அழுத்தம் கொடுத்தன.

மூன்று வருடங்கள் கடந்த நிலையில் இப்போது அந்த முகாம் மூடப்பட்டுள்ளது. இது குறித்து அனைவரும் குறிப்பாகத் தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். ஆனால், தமிழர்களை இரண்டாந்தர மக்களாகப் பார்க்கும் மஹிந்த அரசின் நடவடிக்கைகளால் அந்த அற்ப மகிழ்ச்சியைக்கூட தமிழர்கள் அனுபவிக்க முடியாதவர்களாகி விட்டார்கள்.

'மனிக் பாம்' எனப்படும் மாணிக்கம் பண்ணையில் எஞ்சியிருந்த மக்கள் அனைவரும் நேற்றுமுன் தினம் இரவோடு இரவாகப் புறப்பட்டு நேற்றுப் பகலுக்குள் முகாமைவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. 'மனிப் பாம்' முகாமில் இருந்து கிளப்பப்பட்டு மற்றொரு இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

அவர்களின் சொந்த இடங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு செல்ல மக்களை அனுமதிக்கிறார்கள் இல்லை. அப்படி இருக்கும்போது அவசர அவசரமாக 'மனிக் பாம்' முகாமை மூடி மக்களை மீண்டும் மற்றொரு முகாமில் தள்ள வேண்டிய அவசியம் அரசுக்கு ஏன் வந்தது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அதிபுத்தி சாலித்தனம் வேண்டும் என்பதில்லை.

இப்போதைக்கு சர்வதேச நாடுகளின் அழுத்தங்களில் இருந்து தப்புவதற்கு அரசுக்குச் சில பல நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'மனிக் பாம்' முகாமுக்கான மூடுவிழா.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை எதிர்கொள்ள இருக்கும் பூகோள பருவ கால மீளாய்வுக் கூட்டத் தொடரில் அழுத்தங்களில் இருந்து தப்புவதற்கு 'மனிக் பாம்' மூடுவிழா அரசுக்குத் தேவையாக இருக்கிறது. ''பாருங்கள் உலகின் மிகப் பெரிய இடம் பெயர்ந்தோர் முகாமை நாம் மூடிவிட்டோம். 3 லட்சம் மக்களுக்கும் மேற்பட்டவர்களை மீளக்குடியமர்த்தி விட்டோம்'' என்று கூறி உலகை ஏமாற்ற முயற்சிக்கிறது அரசு. அதற்காகவே மக்களை நட்டாற்றில் தள்ளியாவது 'மனிக் பாம்' முகாமை மூட அது கங்கணம் கட்டி நின்றது.

அரசின் இத்தகைய முயற்சிகளை வெளி உலகுக்கு எடுத்துக்காட்டி, அந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை. ஆங்காங்கே எப்போதாவது ஒரு நாள் போராட்டம் அல்ல, தீர்வு கிடைக்கும் வரைக்குமான தொடர் போராட்டங்களாக அவை இருக்க வேண்டும். கூடங்குளம் மக்களுடையதைப் போன்று சட்ட மற்றும் சீர வழியிலானவையாகவும் வன்முறை அற்றதாகவும் இலக்கை அடையும் வரை அவை தொடர வேண்டும்.



# மனம் திறக்கற... பஸில்

**கே**ள்வி: மூன்று மாகாணசபைத் தேர்தல்களினதும் முடிவைப் பற்றிய அரசின் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** அரசொன்றை அமைத்து தேர்தலுக்குச் செல்லும்போது அது பலவிதமாக இருக்கிறது. அரசொன்று அமைந்து முதல் வருடம் தேனிலவு வருடமாகத்தான் இருக்கும். இரண்டாம், மூன்றாம் வருடங்களில் பிரபலமான தீர்மானங்களை எடுக்கமுடியாமல் இருக்கும். இது அப்படியான காலம்.

எமது அரசின் இரண்டாவது ஆட்சிக் காலம் இது. இயற்கையின் சீற்றத்தில் எமது நாட்டின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, வடமத்திய மாகாணம் பாதிக்கப்பட்டிருந்தது. ஈரான் மீதான அமெரிக்கத் தடைகளால் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் நிதி தொடர்பான சில முக்கிய தீர்மானங்களை அரசு எடுத்திருந்தது.

இந்த நிலைமையில் எமக்குப் பாதகமான ஒரு சூழலில்தான் நாம் தேர்தலுக்குச் சென்றோம். இப்போதே தேர்தல் வேண்டாம். பிறகு செல்லலாம் என்ற ஒரு கருத்தும் எமது கட்சியில் இருந்தது. இருந்தும் மக்களின் மனநிலையை அறிய ஜனாதிபதி விரும்பினார். நாம் செல்லும் பாதை சரியானதா, இல்லையா என்பதை மக்களிடம் கேட்க விரும்பினார். இதனால்தான் தேர்தலுக்குச் சென்றோம்.

நாங்கள் கூடுதல் வீதத்தில் வெற்றி பெற்றுள்ளோம். இப்போதைய நிலைமையில் நாங்கள் பெற்ற வெற்றி அனைத்து வெற்றியையும் விட பெரிதானது. இதற்கு மக்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம். இது எமக்குப் பெரும் சக்தி. குறிப்பாக, கிழக்கு மக்கள் எமக்கு வழங்கிய ஆதரவும், வழிகாட்டலும் மகத்தானவை. தமிழ்க் கூட்டமைப்பு தேர்தலில் நடந்ததைப் பார்த்த நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எந்தப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டும் என்பதை நன்கு உணர்ந்து வைத்துள்ளோம். மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துள்ளோம். விருப்பு வாக்குகள் மூலமாகவும் மக்கள் தெளிவான செய்தியொன்றை அனுப்பியுள்ளனர். அந்தச் செய்தியையும் நாம் உணர்ந்து கொண்டுள்ளோம்.

**கேள்வி: கிழக்கு மாகாண தேர்தல் குறித்தான உங்களின் பார்வை எப்படி?**

**பதில்:** கிழக்கைப் பொறுத்தவரை அரசுக்கு சார்பான, அரசின் கொள்கைகளை ஏற்ற ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஏற்ற - அரசின் அமைச்சரவையில் அரச நாடாளுமன்றக் குழுவில் இருக்கும் கட்சிகள் கிழக்குத் தேர்தலில் வெவ்வேறாகவே போட்டியிட்டன. உண்மையில் அவர்கள் அரசுக்காகவே அரசின் சார்பாகவே போட்டியிட்டனர்.

அரசுக்கு எதிராக மூன்று தரப்புக்களே போட்டியிட்டன. நாடாளுமன்றில் எதிர்க் கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்க் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவையே எதிராகப் போட்டியிட்டன. மறுபுறத்தில் எமது கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய சுதந்திர முன்னணி இருந்தன. எமது கூட்டமைப்பு கிழக்கில் 2 இலட்சத்து 44 வாக்குகளை எடுத்தது. முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 917 வாக்குகளை எடுத்தது. தேசிய சுதந்திர முன்னணி 9 ஆயிரத்து 522 வாக்குகளை எடுத்தது. எனவே, மொத்தமாக நாங்கள் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 483 வாக்குகளை எடுத்தோம். மறுபுறம் தமிழ்க் கூட்டமைப்பு ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 827 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சி 74 ஆயிரத்து 901 வாக்குகளும் ஜே.வி.பி. 3 ஆயிரத்து 154 வாக்குகளையும் எடுத்துள்ளன. அவை மொத்தமாக 2 லட்சத்து 71 ஆயிரத்து 882 வாக்குகளையே பெற்றுள்ளன. இதில் பாருங்கள் ஜனாதிபதியின் தலைமையை ஏற்ற குழுக்களுக்கு 70 ஆயிரத்திற்கும் [illegible] வாக்குகள் [illegible] ளன. எனவே, இதன்படி நூற்றுக்கு 53 சதவீதமான மக்கள் அரசை ஆதரித்துள்ளனர். மக்களின் ஆணை இது.

**கேள்வி: நீங்கள் கூறுவதைப் பார்த்தால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டாலும் அரசுடன் தான் இருந்தது. அரசுக்கே ஆதரவைத் தரும் என்று எதிர்பார்த்திருந்தீர்கள். அப்படித்தானே?**

**பதில்:** தேர்தலுக்கு முன்னர் எமது பேச்சுகள் இணக்கப்பாடு இல்லாமல் முடிந்தபோது இருதரப்பினரும் ஓர் இணக்கப்பாட்டுடன்தான் செயற்படுவது என முடிவெடுத்தோம். கேகாலையிலும், இரத்தினபுரியிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது போன்றுதான் இதுவும்.

**கேள்வி: தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க அரசு வகுத்த வியூகம் இதுவெனக் கொள்ளலாமா?**

**பதில்:** ஒருவகையில் நீங்கள் அப்படியும் எடுத்துக்கொள்ளலாம். சாதாரணமாக அரசியல் கட்சிகள் தமது வியூகங்களை வெளியில் சொல்வதில்லை. இருந்தும் தேர்தல்முறை தெரிந்தவர்களுக்கு இது நன்கு புரியும். ஜே.ஆர். ஜயவர்த்தனவின் இந்தத் தேர்தல் முறை ஒவ்வொரு தேர்தலுக்கும் வித்தியாசமாகிறது.

இதற்கமையவும் தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது. இது விரும்பி எடுத்த வியூகமில்லை. இருந்தாலும் இது வியூகமாக மாறியுள்ளது. அமெரிக்காவில் பிரபல தொழிலதிபர் ஒருவர் இருந்தார். அவரின் வெற்றியின் இரகசியம் கேட்கப்பட்டது. அர்ப்பணிப்பு தமது வெற்றிக்கு நூற்றுக்கு 99 வீதம் உதவுவதாகவும், நூற்றுக்கு ஒரு வீதம் அதிர்ஷ்டம் உதவுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சில நேரங்களில் அந்த நூற்றுக்கு ஒரு வீத அதிர்ஷ்டம் நூற்றுக்கு 99 வீதத்தை விட உதவுமென்றும் அவர் குறிப்பிட்டார். (சிரிக்கிறார்) அதுபோல இதில் ஏதோ ஒரு அதிர்ஷ்டத்தன்மையும் இருக்கவேண்டும். கிழக்கில் ஒரு சவால் இருந்ததுதான். ஆரம்பம் முதல் அதனை நாங்கள் தெரிந்து கொண்டுதான் இருந்தோம்.

**கேள்வி: கிழக்கு மாகாணசபையில் உங்களது கட்சியில் நிறை... உறுப்பினர்கள் முன்னர் இ... இப்போது அந்த உறுப்பி... எண்ணிக்கை தமிழ்க் கூட்... வருகையுடன் குறைந்துவிட்... உங்களுக்குப் பின்னடைவுதா...**

**பதில்:** உண்மையில் இப்...
இனவாதம் பேச விரும்...
இருந்தாலும் நாம் யதார்த்தத்...
வேண்டும். மூன்று இனக்...
கிழக்கில் உள்ளன. சன...தொ...
விவரப்படி கூடுதலான ...த்...
களும், அதற்கு அண்மித்தவாறு...
மக்களும் உள்ளனர். இருந்தாலு...
கூட்டமைப்பு முறையாக நடக்...

பிரபாகரனால் தமிழ் மக்களி...
சந்ததிகள் அழிந்தன. உ...
இல்லாமற் போயின. கல்வி, ...
எல்லாமே இல்லாமலாகி...
போன்று ஒன்றைத்தான் தமி...
மைப்பு இப்போது கிழக்கு ம...
செய்துள்ளது. பிள்ளையான் ...
சராக இருந்து எல்லா மக்களுக்...
செய்தாலும் அவர் தமிழ் மக்...
அடையாளமாக இருந்தார்...
இல்லாமலாக்கிவிட்டனர். ...
அநியாயம். இன்று இந்த மா...
ஏற்படப்போகும் ஆட்சியில் ...
பங்குவகிக்க முடியாத ஒரு...
கூட்டமைப்பு ஏற்படுத்தியுள்...

இதற்கான முழுப்பொறுப்...
டமைப்புத்தான் ஏற்கவேண்டு...
செய்ததைப் போன்றுதான்...
தேர்தலில் கூட்டமைப்பு செ...
வெற்றிபெற்ற தனது கட்சி உறு...
பதினொரு பேரையும் பாது...
சம்பந்தன் ஜனாதிபதியிடம் ...
விடுக்கின்றார். ஜனாதிபதி...
சம்பந்தன்தான் அவர்களைக்...
வேண்டும். அதற்கு முதல் தமி...
சம்பந்தன் கவனித்துக் கொள்...

**கேள்வி:** வெற்றி பெற்...
கூட்டமைப்பு உறுப்பினர்கள...
தரப்பு விலைக்கு வாங்க மு...
படைத்தரப்பினர் கூட இந்த ...
ஈடுபட்டுள்ளனர். இதனைச்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிழக்கைப் பொறுத்தவரை அரசுக்கு சார்பான, அரசின் கொள்கைகளை ஏற்ற ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஏற்ற - அரசின் அமைச்சரவையில் அரச நாடாளுமன்றக் குழுவில் இருக்கும் கட்சிகள் கிழக்குத் தேர்தலில் வெவ்வேறாகவே போட்டியிட்டன. உண்மையில் அவர்கள் அரசுக்காகவே அரசின் சார்பாகவே போட்டியிட்டனர்.*

# தேர்தலின் பின்னர் அரசும் மு.காவும் இணைவதே திட்டம்

■ நேர்காணல்:
*ஆர்.சிவராஜா*

**நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத்தான் சம்பந்தன் கூறுகிறார்.?**

*பதில்:* வெற்றி பெற்ற தமிழ்க் கூட்டமைப்பின் சில வேட்பாளர்களுக்கு ஏற்கனவே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தொடர்பு இருந்திருக்கக்கூடும். படையினருக்கு இப்படி ஆள்களை எடுக்கமுடியுமாயின் வடக்கில் இருக்கும் எத்தனையோ உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படையினர் எடுத்திருப்பார்களே? அரசியல்வாதி என்ற ரீதியில் நான் போய்ப் பேசினேன் என்று கூறினால்கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், படையினர் போய்ப் பேசுகின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு பலருடன் தொடர்பு இருக்கலாம். பணத்துகாகச் செயற்படும் பலர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்பு வைத்திருக்கக் கூடும். இராணுவத்துக்கு தமிழ் அரசியல்வாதிகளை உள்வாங்குவதோ அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ எந்தத் தேவையும் கிடையாது. சம்பந்தன் ஐயா இதனை யோசித்து நடக்க வேண்டும்.

**கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆட்சியமைக்க தமிழ்க் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த மூன்று சக்திகளும் ஒன்றிணைய முயன்றமை அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருந்ததா?**

*பதில்:* இல்லை. இல்லவே இல்லை. இந்த இணைவு நடப்பது குறித்து நாம் மகிழ்ச்சியுடன் இருந்தோம். இது இலகுவாக எமக்கு இருந்திருக்கும். தமிழ் இனவாதம் பேசியதால்தானே தமிழ்மக்களின் வாக்குகள் சம்பந்தனுக்குக் கிடைத்தன. எனவே, அவர்கள் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்க முற்படும்போது என்ன செய்யவேண்டும் என்பதைத் தமிழ் மக்கள்தான் தீர்மனிக்க வேண்டும். மறுபுறம் மற்ற கட்சிகளும் தீர்மாணங்களை எடுத்திருக்கவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருந்து போட்டியிட்ட ஒரு தரப்பு. எனவே, இங்கு ஆட்சியமைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பயப்படவில்லை. தமிழ்க் கூட்டமைப்பினர் தன்னைச் சந்திக்க விரும்புவதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்னிடம் கூறியபோது, நீங்கள் தாராளமாக சந்தியுங்கள், எனக்குப் பிரச்சினையில்லை என்றுதான் நான் கூறினேன். ஜனாதிபதியும் இதைத்தான் கூறினார். முடிந்தால் ஆட்சியமைத்துக் கொள்ளுங்கள் என்று தான் நாம் கூறினோம். ஆட்சியமைத்திருந்தால் இவர்களின் செயற்பாடுகளைப் பற்றி நாங்கள் இன்னும் கூறியிருக்கலாம்.

**கேள்வி: சில நிபந்தனைகளை முன்வைத்துத்தானே முஸ்லிம் காங்கிரஸ் உங்களை ஆதரிக்கின்றது?**

*பதில்:* இல்லை. எந்த நிபந்தனைகளும் இல்லை. ஆனால், எந்தக் கட்சிக்கும் தனக்கென கோரிக்கைகள், தேவைகள் உள்ளன. அவை இல்லாமற் போகாது. எங்களது கூட்டமைப்பில் வேறு பல கட்சிகளும் உள்ளன. அவையும் பல கோரிக்கைகளை முன்வைக்கின்றன. அவ்வாறான சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியுமேற்பட்டது. இது கூட்டமைப்பு ஒன்றில் வழமை.

**கேள்வி: இல்லை. முஸ்லிம் மக்களுக்கான கரையோர அலகு, முஸ்லிம் அரச அதிபர் போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசு எழுத்துமூலம் வழங்கியிருப்பதாகவும், அதனால்தான் அரசுக்கு கிழக்கு ஆட்சியை ஏற்படுத்த உதவியதாகவும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் வெளியில் கூறிவருகின்றனர். அது சரிதானா?**

*பதில்:* நான் அப்படி நினைக்கவில்லை. அப்படி ஒன்றும் இல்லை. அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். செய்யமுடிந்தவற்றை நாம் செய்வோம். முடியாதவற்றை நாம் செய்யப் போவதில்லை. அடிப்படையில், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தையும், மஹிந்த சிந்தனையையும் ஏற்றுத்தான் அவர்கள் எம்முடன் இருக்கின்றனர். அதேபோல் அவர்கள் தமக்குத் தேவையானவற்றைக் கூறுவர். அமைச்சர் தொண்டமானுக்கும் அமைச்சர் டக்ளஸுக்கும் இப்படியான கோரிக்கைள் உள்ளன. தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவற்றுக்கும் கோரிக்கைகள் உள்ளன. எனவே, இது முஸ்லிம் காங்கிரஸுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. எல்லோரின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

**கேள்வி: கிழக்கு மாகாணசபை ஆட்சியில் தமிழ் அமைச்சர் ஒருவரும் நியமனம் பெறவுள்ளாரா?**

*பதில்:* தமிழ் முதலமைச்சரே இல்லை. தமிழ் அமைச்சரைப் பற்றி என்ன கதைக்க இருக்கிறது? இதனை தமிழ்க் கூட்டமைப்புதான் இல்லாமற் செய்தது. அதைத்தான் என்னால் கூறமுடியும்.

**கேள்வி: கிழக்கில் உங்களுக்கு ஆதரவளித்த முஸ்லிம் காங்கிரஸ், மத்திய அமைச்சரவை மாற்றப்படும் போது புதிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பெறுமா?**

*பதில்:* மத்திய அமைச்சரவை உடனடியாக மறுசீரமைக்கப்படுமா என்பது பற்றி தெரியவரவில்லை. ஜனாதிபதியே இதனைத் தீர்மானிப்பார்.

**கேள்வி: கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசு ஒன்றை அமைப்பது குறித்து பேசப்பட்டது. தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து தேசிய ஆட்சியொன்றை ஏற்படுத்தியிருந்தால் சிறந்ததாக இருந்திருக்குமல்லவா?**

*பதில்:* தேசிய அரசுக்கான அவசியம் எங்களுக்கு இல்லையே. நாட்டில்தான், மத்திய அரசில்தான் தேசிய அரசு ஏற்படுத்தப்படவேண்டும். மாகாணசபைகளில் எதற்கு தேசிய அரசு?

**கேள்வி: உங்களது அரசின் அமைச்சர்கள் தானே தேசிய அரசுக்குத் தயாரென கூறினார்கள்?**

*பதில்:* தேசிய அரசுக்கு தயாராக வேண்டிய அவசியம் இல்லை. இப்போது நிறுவப்பட்டிருக்கிற ஆட்சி தேசிய ஆட்சி போன்றுதான். இப்போது முஸ்லிம் காங்கிரஸ் எங்களுடன் சேர்ந்ததை கூட்டமைப்பும், ஐ.தே.கவும் எதிர்க்கின்றன. அவர்களுக்குத் தேசிய அரசு ஏற்பட்டிருந்தால் பதவிகள் கிடைத்திருக்கும். அமைதியாக இருந்திருப்பார்கள். இப்போது பதவிகள் கிடைக்கவில்லை; விமர்சிக்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குள் உள்ள ஒரு கட்சி. அவர்கள் மாகாண ஆட்சியில் பங்கெடுப்பதில் என்ன தவறு? தமிழ் மக்களிடம் வீராப்பு பேசி வாக்குகளைப் பெற்ற கூட்டமைப்பு, முதலமைச்சர் பதவியையும் விட்டுக் கொடுத்து ''தமிழ் பேசும் மக்களுக்காக'' என்று புதிய கதையை விட்டது. இதன் அர்த்தம் என்ன? இன்னும் கொஞ்சக் காலம் போனால் ''ஆங்கிலம் பேசும் மக்களுக்காக'' என்றும் கூட்டமைப்பு கூறும். ஐ.தே.கவில் பலர் ஆங்கிலம்தானே பேசுகின்றனர். அவர்களுடன் சேர்ந்து ஆட்சியமைக்க ஆங்கிலம் பேசுவோர்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் கூட்டமைப்பு கூறலாம்.

**கேள்வி: முஸ்லிம் காங்கிரஸுக்கு மாகாண முதலமைச்சர் பதவியில் இரண்டரை வருட பதவிக்காலம் வழங்கப்படுமா?**

*பதில்:* இப்போதுள்ள விடயத்தைப் பற்றி நாம் பேசுவோமே... அவர்கள் [illegible] சொல்லக் கூடும். நான் அதைப்பற்றி பேச விரும்பவில்லை.

**கேள்வி: கிழக்கு மாகாணத்தின் பல அபிவிருத்திப் பணிகளை நீங்கள் முன்னெடுத்து வருகிறீர்கள். இந்தத் தேர்தலில் கிழக்கில் தமிழர்கள் கூட்டமைப்பை ஆதரித்திருப்பதால் உங்கள் பணிகளில் ஏதேனும் சோர்வு ஏற்படுமா?**

*பதில்:* இல்லை. தேர்தல் முடிவுகள் எமக்கு எரிச்சலை ஏற்படுத்தவில்லை. கூட்டமைப்பைத் தமிழர்கள் ஆதரித்தார்கள் என்பதற்காக எமது பணி தமிழ் மக்களுக்கு சென்றுவிடாமல் இருக்கப்போவதுமில்லை. இது எமது நாடு. நாம் மாகாணங்களையோ, மக்களையோ பார்ப்பதில்லை. எமது மாகாணத்தில் வந்து வேலை செய்ய உங்களுக்கு அதிகாரமில்லையென சம்பந்தன் எனக்குக் கூறுகிறார். இது என்ன அர்த்தம்? எமது தொகுதி என்று எவருக்கும் இல்லை. இலங்கை எல்லோருக்கும் சொந்தமானது. அப்படிப் பார்த்தால் நான் கம்பஹாவில் மட்டும்தான் வேலை செய்யவேண்டும். இதுதான் பிரிவினை. நாட்டைப் பிரிக்கும் கொள்கைதான் இது.

மக்களைப் பிரிக்க நினைக்கிறார்கள். பிற மாகாணத்திலிருந்து வந்து வேலை செய்கிறார்களே என்று சந்தோஷப்பட வேண்டும். கொழும்பு நீதிமன்றங்களில் இன்று வழக்காடுபவர்கள் யார்? சுமந்திரன் எல்லாம் கொழும்பு நீதிமன்றங்களில் தானே வழக்குப் பேசுகின்றார். நீங்கள் எங்கள் பிரதேசத்திற்கு சொந்தமில்லாதவர் என்று அவரை எவராவது கூறினார்களா? இல்லையே! இந்தப் பேச்சுக்களின் அர்த்தம் என்ன? இந்த பிரிவினை வாதம் வெற்றியடைய விடமாட்டோம். தாயகக் கோட்பாட்டுக்கு நாம் எதிரானவர்கள். எல்லோரும், எல்லா இடங்களிலும் வாழும் உரிமை அரசமைப்பில் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ரணிலை அழைத்து மேதினம் நடத்தியது கூட்டமைப்புத்தான். அரசியலுக்காக அவர்கள் எதையும் செய்வார்கள்.

தேர்தலின் இறுதிக் காலத்தில் கூட்டமைப்பு மோசமான வகையில் பிரசாரங்களைச் செய்தது. சீ.டீக்கள் மூலம் பிரசாரம் நடத்தியது. சாராயப் போத்தல்களையும் தாரளமாக வழங்கியது. மதுவரித் திணைக்கள தகவல்களின்படி கூட்டமைப்பு சுமார் ஐம்பதாயிரம் சாரயப் போத்தல்களை விநியோகித்துள்ளது. அரசு நிவாரணப் பொருள்களை வழங்கவில்லை. அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தது. சாராயம் விநியோகித்தவர் யார்? எங்களுக்கு கூண்டோடு கைப்பற்றும் வாய்ப்பும் இருந்தது.

**கேள்வி: கூட்டமைப்பு சாராயம் விநியோகித்திருக்குமானால் நீங்கள் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டிருக்கலாமே?**

*பதில்:* இதனை நாம் முறையிட்டுள்ளோம். இதனை சர்வதேசத்திற்கு பிரபலப்படுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. சில இடங்களில் தேர்தல் கண்காணிப்பு இயக்கமான பவ்ரலின் இலச்சினைகளை வாகனங்களில் ஒட்டிக் கொண்டே கூட்டமைப்பு உறுப்பினர்கள் சென்றனர்.

**கேள்வி: வடக்குத் தேர்தல் எப்போது?**

*பதில்:* அதை நேரத்திற்கு வைப்போம்.

**கேள்வி: செம்ரெம்பரில்?**

*பதில்:* எப்போதாவது வைப்பதற்கு கூட்டமைப்பும் ஒத்துழைக்க வேண்டும். மீள்குடியேற்றத்தை தடுத்து, புரளிகளைக் கிளப்புவதுதான் கூட்டமைப்பின் வேலை. உணர்ச்சிபூர்வமாகக் கதைத்து, இரத்தத்தைச் சூடேற்றி பேசும் தமிழ்க் கூட்டமைப்பு மக்களுக்குத் தேவையானவற்றை செய்யாது.

**கேள்வி: வேறு சில மாகாண சபைகள் ஏதும் கலைக்கப்படுமா?**

*பதில்:* எனக்குத் தெரிந்தவரை இப்போதைக்கு இல்லை.

**கேள்வி: வடமத்திய மாகாணசபை நிலைமை எப்படி? யார் முதலமைச்சர்?**

*பதில்:* அந்தப் பிரச்சினைகளையும் பேசிக் கொண்டிருக்கிறோம். விரைவில் சிறந்த முடிவெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு படிப்பினைகள்

ஒரு நண்பர் படித்துக் கொண்டிருந்தார். ''என்ன படிக்கிறீர்கள்?-என்று கேட்டேன்.

''பகவத்கீதை படிக்கிறேன்'' என்றார்.

''அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் என்று கேட்டேன்.!'' அவர் சொன்னார்.

''பகவத் கீதையிலே இரண்டு முக்கியமான படிப்பினைகள் உண்டு. அதன் பிரகாரம் நடந்தால் எமது வாழ்க்கை இன்பமாக அமையும். வெற்றிகரமாக அமையும்!- என்றார்.

'' அது என்ன படிப்பினை.. அதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள். அவர் விவரமாகச் சொன்னார்.

''முதல் படிப்பினை.. கீதையின் இரண்டாவது அத்தியாயத்திலே 48 ஆவது சுலோகத்திலே வரும்.

'சமத்துவம் யோக உச்யதே'

அதாவது ஒரே சீரான நிலையிலே இருக்கிறது தான் யோகம்- என்கிறது. எமது உடலைப் பொறுத்த வரைக்கும் இந்த சமத்துவம் என்பது இயற்கையாகவே அமைந்திருக்கும்.

நாம் கடுமையான வெயிலில் இருந்தாலும் சரி... அல்லது கடுமையான குளிரில் இருந்தாலும் சரி.. உடம்புக்குள்ளே இருக்கிற வெப்பநிலை மாறுவதில்லை. அது ஒரேமாதிரித்தான் இருக்கும். ஊட்டியிலே இருந்த பொழுது 26 டிகிரி. ராமநாதபுரத்திலே இருந்தபோது 96 டிகிரி என்று யாரும் சொல்வதில்லை.

அது எப்பவும் ஒரே அளவுதான். அப்படி இல்லை என்றால் உடம்பில் ஏதோ கோளாறு என்று அர்த்தம்.

எமது உடம்புக்குள்ளே இருக்கிற ஏதோ ஒன்று வெப்ப நிலையைச் சமத்துவமாக வைத்திருக்கும்.

ஆனால்.. மனசைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சமத்துவம் நமக்கு இருக்கிறதில்லை.

இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கிறோம். துன்பம் வந்தால் துவண்டு போகிறோம். இது மாதிரி இருக்கக் கூடாது.

இரண்டு நிலையிலேயும் நாம் ஒரேமாதிரியே இருக்க வேண்டும். அதுதான் யோகம் என்கிறது கீதை.

இரண்டாவது படிப்பினை என்னவென்றால்.

அது அதே இரண்டாம் அத்தியாயத்திலே 50 ஆவது சுலோகத்திலே வரும்.

''யோக: கர்மஸூ கௌசலம்'

அதாவது செய்வதைத் திருந்தச் செய்தால்- அது யோகம்! நாம் பல சந்தர்ப்பங்களில் செய்வதைத் திருந்தச் செய்வதில்லை. அரைகுறையாகத்தான் செய்கிறோம்.

குறைவாகச் சம்பளம் கிடைத்தால் அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலை! அதிகமாக சம்பளம் கிடைத்தால் அதுக்குத் தகுந்த மாதிரி ஒரு வேலை!

பல நேரங்களில் உழைப்புக்குத் தகுந்த சம்பளமும் கிடைப்பதில்லை. சம்பளத்துக்குத் தகுந்த உழைப்பும் இருப்பதில்லை. நிர்வாக ரீதியாக இதைச் சரி செய்யலாம். அல்லது போராட்டங்கள் மூலமாகக் கூட இதைச் சரி செய்யலாம். இது ஒரு பக்கம்.

ஆனாலும் அதுக்காக செய்யும் காரியத்தை அரைகுறையாகச் செய்யக்கூடாது. கிடைக்கிற பலனைப் பற்றிக் கவலைப்படாமல் எடுத்த காரியத்தை சிறப்பாக முடிக்க வேண்டும்! அப்படி முடிக்கிறத்துக்கு பழகிக் கொள்ளவேண்டும். அதுதான் யோகம்.

அது இரண்டும் கீதையின் முக்கியமான இரண்டு படிப்பினைகள்- அப்படி என்று சொல்லி முடித்தார் அந்த நண்பர்.

இதில் இருந்து நாம் தெரிந்திருக்க வேண்டியது என்னவென்றால்...

இன்பம் வந்தால் அதற்காகத் துள்ளிக் குதிக்காதே!

துன்பம் வந்தால் அதற்காகத் துவண்டு போகாதே!

எப்பவும் ஒரே மாதிரியாக இருக்கப் பழகிக்கொள்.

அதேமாதிரி... எந்தக் காரியத்திலும் ஈடுபட்டாலும் செய்வதைச் சிறப்பாகச் செய்யப் பழகிக் கொள்.

நம்மை நாமே தயார் படுத்தினால் நமது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும். இப்படி எல்லாம் எங்களை நாங்களே தயார் செய்யாததுனாலேயே நாம் பல சமயங்களிலே வாழ்க்கையிலே சிரமப்படுகிறோம்.

நம்ம ஊரிலே...

சமையல் செய்தால்கூட அதைச் சிறப்பாகச் செய்கிறவர்கள் இருக்கிறார்கள்... பலனை எதிர்பார்ப்பதில்லை.

சாப்பிட்டவர்களும் அதை எதிர்பார்ப்பதில்லை.

ஒரு கணவன் மிகவும் தாமதமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மனைவி அதிகமாக வருத்தப் பட்டு சொன்னார்.



''மிகவும் நல்லது! உங்களுக்காக ஆசையாக ஒரு புது சமையல் வகை செய்து வைத்திருக்கிறேன்... அதை எங்களது நாய் சாப்பிட்டு போய்விட்டது! என்றார். உடனே கணவர் '' அதுக்காக கவலைப்படாதே! நாம் வேறு நாய் வாங்கிக் கலாம்!'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# யாழ். ஆஸ்பத்திரியில் ஆலயம் கொண்டு ஆறுதல் அளிக்கும் ஆரோக்கிய அன்னை

எஸ்.யேசுதாஸ்



மனிதன் தனது பணம், பதவி, பட்டம், செல்வாக்கு புகழைக்கொண்டு என்னதான் சாதித்தாலும் அதற்கும்மேலே உள்ள ஒரு சக்தியின் அனுகூலமின்றி எதிலும் வாழ்வின் இலக்கை அடைந்துவிடமுடியாதென்பதே யாதார்த்தமாகும். உலக மெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறை சக்தியே அவரவர்க்கு ஏற்ற கொடைகளை வழங்கி நிறைவு தருகிறது.

இன்பம், செழிப்பு, வளங்கள் சேரும் போது இறைவனை விட்டு விலகிச்செல்வதும் துன்ப, துயரங்கள், வெறுமை, வறுமை, இழப்புக்கள் வரும் போது இறைவனிடம் சரணடைவதும் மனிதவாழ்வில் தொடர்கதையாக நீண்டு செல்கிறது. தீராத நோய் நொடிகள், ஆபத்துக்கள், உடல் உளத்தாக்கங்கள் ஏற்படும்போது எமக்காகவும் நாம் அன்பு பாசம் கொண்ட உறவுகள் நண்பர்களுக்காகவும் இறைவனிடம் வேண்டுதல் செய்து அவனருளால் சுக நலன்களைப் பெற்று அமைதி பெறுகிறோம்

வடபகுதியின் பிரதான வைத்தியசாலையான யாழ். போதனா வைத்தியசாலையில் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். பல நாள்கள், வாரங்கள், மாதங்களாகவும் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். அவ்வேளைகளில் பல்வேறுபட்ட உடல், உள நோய்களாலும் மருத்துவம் செய்தும் பயனில்லை யென்று கடவுளின் சித்தமென்று எதிர்பார்க்கப்படும் நிலையிலும் வருந்தி அவதிப்படுகின்ற நோயாளிகளின் ஆன்மிக தேவைகளை நிறைவேற்றவும், வழிபாட்டிலே பங்கெடுத்து இறை அமைதி நோக்கிலும் யாழ். கத்தோலிக்க திருச்சபையால் யாழ் போதனா வைத்தியசாலையின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்டதே வைத்தியசாலை வளாகத்தில் சமயவேறுபாடின்றி மக்களால் வணங்கப்பட்டுவரும் தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை ஆலயம். வைத்தியசாலை வளாகத்திலே 40 வருடங்களாக கத்தோலிக்க ஆலயம் இறைவனின் கருணையைப் பொழிந்து வருகிறது.

தற்போது ஆரோக்கிய அன்னை ஆலயமாக இயங்குகின்ற போதிலும் 1973 ஆம் ஆண்டிலே முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் கைவிடப்பட்டோரின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பெயரில் அமைந்தது. அருட்திரு தேவதாசன் அடிகளார் முதன்முதலில் இங்கே பணியைப் பொறுப்பேற்று நடத்தினார். இவர் புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையாக இருந்தார். இரண்டு வருடங்கள் மட்டும் புனித யூதாததேயுவின் திருநாள் கொண்டாடப்பட்டது

இயேசுவின் சிலுவை மரணம் வரை துன்ப துயரங்களைத் தாங்கி நடந்த இயேசுவின் தாயான மரியாள்தான் நோய்களால் துன்புறுவோரின் இடர்களை அறிந்து அரவதைத்து தன்மகனிடம் பரிந்துபேச வல்லவள். அந்த அன்னையை பாதுகாவலராகக் கொள்வதே சாலப்பொருந்துமெனப் பலரும் கருதியதால் 1975 ஆம் அண்டு அன்னையின் பெயருக்கு இச்சிற்றாலயம் மாற்றப்பட்டது .

இயேசுவின் சிலுவை மரணம் வரை துன்ப துயரங்களைத் தாங்கி நடந்த இயேசுவின் தாயான மரியாள் தான் நோய்களால் துன்புறுவோரின் இடர்களை அறிந்து அரவணைத்து தன்மகனிடம் பரிந்துபேச வல்லவள். அந்த அன்னையை பாதுகாவலராகக் கொள்வதே சாலப்பொருந்துமெனப் பலரும் கருதியதால் 1975 ஆம் அண்டு அன்னையின் பெயருக்கு இச்சிற்றாலயம் மாற்றப்பட்டது .

இதனைத்தொடர்ந்து அருட்தந்தையர்களான குணசீலன், கிறிஸ்ரியன்வாஸ், மங்களராஜா ஆகியோர் ஆன்மகுருக்களாகப் பணியாற்றி நோயாளர்களுடைய தேவைகளை நிறைவேற்றி ஆறுதல் அளித்து வந்தார்கள்.

வைத்தியசாலை நோயாளர்களுக்கான சேவை அர்ப்பணிப்பின் கனாகனத்தையும் தேவையையும் கருத்தில் கொண்டு 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமலமரித்தியாகிகள் சபைக்குருக்களிடம் யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை அவர்கள் இவ் ஆலயப்பணிகளை ஒப்படைத்தார். அருட்திரு பிரான்சிஸ் டானியல் (அ.ம.தி) அடிகளார் முதல் அமதியாக பணியாற்றத்தொடங்கி ஆலயத்தையும் சேவைகளையும் விஸ்தரித்தார்.

இவரைத் தொடர்ந்து அருட்தந்தையர்களான மரியசெபஸ்ரியன் , லீனஸ்சொய்சா, எட்மண்ட் றெஜினோல்ட், யோகராசா, செலஸ்ரீன், ஜீவேந்திராபோல் , ஸ்ரனிஸ்லஸ், அன்புராசா, ரட்ணராஜா, வின்சன், ஜெயபாலன், அந்தோனிமுத்துகுருஸ், செபமாலை பெரேரா ஆகியோர் பணியாற்றிஉள்ளனர். அருட்திரு அன்புராசா அடிகள் காலத்தில் ஆலயம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டது. 2010 ஆம் ஆண்டு முதல் போதனா வைத்தியசாலை ஆரோக்கிய அன்னை ஆலய ஆன்மகுருவாக அருட்திரு ஜோன்பற்றிக் (அ.ம.தி) அடிகள் பணிபுரிந்து வருகிறார்.

அன்னையிடம் மனமுருகி வேண்டுதல் புரிந்து நலமடைந்தோர் ஏராளம். தங்கள் குடும்ப உறவுகள், உறவினர், நண்பர்களின் நோய்களைத் தீர்க்குமாறு கண்ணீர் மல்கி கதறியழும் மக்களின் அபயச் சத்தத்தை ஆரோக்கிய அன்னை மறப்பதேயில்லைஅவனது அருளால் நலமடைந்தோர் புரியும் நேர்த்திகளும், அன்பளிப்புக்களும் இதற்கு சான்றாகும்

இந்த ஆலய ஆன்மகுருவும் அவருடன் துணை நிற்கும் திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி, அமலமரித் தியாகிகள் சபை இறையியல் மாணவர்கள், மற்றும் யாழ்.மறைக் கோட்ட பக்திச்சபைகள், மரியாவின் சேனை, வின்சன்டி போல் சபையினர் இறைமக்கள் பலரும் வைத்தியசாலை விடுதிகளுக்குச் சென்று நோயாளர்களுக்கு நோயில் பூசுதல் திருவருட்சாதனம் வழங்குவ திலும், உதவிகள் செய்வதிலும், இறை விசுவாசத்தையும் ஆறுதல் வார்த்தைகளையும் கூறி திடப்படுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆலயத்திருவிழா ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் வரும் இறுதி ஞாயிறு தினத்தில் கொண்டாடப்படுகிறது. இந்நாளுக்கு முன் மூன்று தினங்கள் ஆராதனை வழிபாடுகள், நற்கருணைப் பெருவிழா என்பன நடைபெறும் . அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் பணியாற்றும் கத்தோலிக்க மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் இணைந்து வழிபாடுகளைத் தயார் செய்வதிலும் ஆலயப் பராமரிப்பு உதவிகளிலும் ஊக்கமுடன் பங்கு கொள்கின்றனர். பிறசமய நோயாளிகளும், மக்களும் அன்னையை தமது அன்புத் தாயாக எண்ணிப்போற்றி வழிபட்டு வருகின்றனர்.

முடவன் நடக்கவும், குருடன் பார்வை பெறவும் , பால்பொங்கி வழிந்தோடவும், திசைமாறிய கப்பல் கரைசேரவும், பிள்ளையற்ற பெண் புத்திரப்பாக்கியம் பெறவும் என அனேகம் புதுமைகள் புரிந்த வேளாங்கண்ணித்தாய் வேதனை நீக்கி நோய்களிலிருந்து விடுதலை தருவாள் என்று விசுவாசத்துடன் போற்றிப்புகழ்வோம்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் கைது

அக்கரைப்பற்று,செப்.25

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடி வேம்பு பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஒருவரும் பின்னர் ஓட்டோ ஒன்றின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த இருவரும் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அக்கரைப்பற்று, பதுர்பள்ளி வீதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி றியாஸ் (வயது-22) என்பவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)



மட்டு. மறை மாவட்ட ஆயராக ஜோசப் பொன்னையா ஆண்டகை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநிலைப்படுத்தப்பட்டார். அருகில் திருமலை மறை மாவட்ட ஆயராக நியமனம் பெற்றுள்ள கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, வத்திக்கான் பிரதிநிதி ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# கிழக்கு அமைச்சரவையில் மூவின மக்களின் பிரதிநிதிகள்

## உள்வாங்கப்பட வேண்டுமென சிவில் சமூகம் கோரிக்கை

அம்பாறை ,செப்.25

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியாகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமை புதிய வடிவில் வலுவூட்டப்பட்டு இனங்களிடையே நல்லெண்ணத்தை உருவாக்க அண்மையில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அரசால் நடத்தப்பட்டது. அதன் முதலமைச்சர் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அமையப்போகின்ற அமைச்சரவையில் மூவினத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவதன் மூலம் இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட சிவில் சமூக ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு பிரதிநிதிகளுடன் சிங்கள மக்களின் பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்கவினதும், தமிழ் சமூகத்தின் சார்பாக முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினதும் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**மூவினத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவதன் மூலம் இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.**

இந்த மாகாண அமைச்சரவையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் கபளீகரம் செய்வதற்கு கட்சி ஒன்று முயற்சி செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தடுத்து தமிழர்களின் அமைச்சரவை பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யுமாறு கிழக்கின் அரசை உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸை அம்பாறை மாவட்ட சிவில் சமூக ஒன்றியம் கேட்டுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஆழ்கடலில் வீழ்ந்த மீனவரைக் காணவில்லை

சாய்ந்தமருது,செப்.25

இயந்திரப் படகில் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் கடலில் தவறி வீழ்ந்து காணாமற் போயுள்ளார்.

காணாமற் போனவர் சாய்ந்தமருதில் வசிக்கும் இரு பிள்ளைகளின் தந்தையான எம்.வை.லத்தீப் (வயது-52) என்பவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த படகில் மூவர் பயணித்துள்ளனர். காணாமற்போன நபரே படகைச் செலுத்தியுள்ளார்.

அஷ்ரப் (வயது-31), சின்னவர் (வயது-42) ஆகிய இருவரும் தூக்கத்தில் இருந்துள்ளனர். இவர்கள் இருவரும் எதுவித பாதிப்பும் ஏற்படாது தப்பித்துள்ளனர்.

இந்த நபரைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் 4 மீனவப் படகுகளும், கடற்படையினரும், விமானப் படையினரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காணாமற் போன மீனவரை மீட்கும் வரை ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடப்போவதில்லை என்று அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடியாளர்கள் சங்கத் தலைவர் சலாம் தெரிவித்தார். (ச)

# முஸ்லிம்களின் ஆணையை புறந்தள்ளியது மு.காங்.

## கூட்டமைப்பு உறுப்பினர் இராஜேஸ்வரன் குற்றச்சாட்டு

அம்பாறை,செப்.25

கிழக்குமாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் வழங்கிய ஆணையை முஸ்லிம் காங்கிரஸ் தனி நபர்களின் சுகபோகங்களுக்காக புறந்தள்ளி விட்டனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட உறுப்பினர் மு. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுடன் இணையாமல் தனித்துப் போட்டியிடும் தீர்மானம் எடுத்தவுடன் இதனை முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் வரவேற்றனர். இதனையடுத்து, தேர்தலில் மஹிந்த அரசுக்கு எதிரான தமது வாக்குகளைத்தான் கிழக்கு முஸ்லிம் மக்கள் மு.காவுக்கு அளித்தனர். ஆனால், முஸ்லிம் மக்களின் ஆணையை தனிநபர்களின் சுகபோகங்களுக்காக மு.கா. தரப்பினர் புறந்தள்ளிவிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைக்கும் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மு.காவின் ஸ்தாபகத் தலைவர் மாமனிதர் அஷ்ரப் இன்று உயிரோடு இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து கிழக்கில் ஆட்சியமைத்திருக்கலாம்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைக்கும் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களும் ஏமாற்றமடைந்துள்ளனர்.**



எனவே, கிழக்கு மாகாணத் தமிழ், முஸ்லிம் மக்களுக்குத் துரோகமிழைத்த ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. இவர்களுக்கு மிக விரைவில் வரலாறே பாடம் புகட்டும் - என்றார். (ச)

# வாகன விபத்தில் ஒருவர் சாவு

திருகோணமலை,செப்.25

கிண்ணியா, புஹாரி சந்தியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா பிரதான வீதியைக் கடக்க முற்பட்டவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியமையால் கடும் காயங்களுடன் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிண்ணியா, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்துல் காதர் சமது (வயது-75) என்பவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கிழக்குக்கு சிங்கள அமைச்சரை திருமலையிலிருந்து நியமிக்குக

## ஜனாதிபதியிடம் தேரர் கோரிக்கை

திருகோணமலை,செப்.25

திருகோணமலைக்கு சிங்கள அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று தெஹியோவிட்ட பியதிஸ்ஸ தேரர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கான அமைச்சர் தெரிவின் போது திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டு விட்டது. இரண்டு அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது. எஞ்சியுள்ள இரண்டு அமைச்சர் பதவிகளில் ஒன்றை திருகோணமலை மாவட்ட சிங்களப் பிரதிநிதி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.

கடந்த தேர்தலின் போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவருக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஆரியவத்தி கலப்பத்திக்கு எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை.

எனவே ஆரியவத்திக்கு அமைச்சுப் பதவி வழங்குவது மிகவும் பொருத்தமானது- என்றார். (ச)

# கட்டணம் செலுத்த தவறியவர்களுக்கு தண்ணீர் வெட்டு

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, பள்ளிக்குடியிருப்பு, ஆலிம்நகர், ஆலம்குளம், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் மூன்று மாதங்களுக்கு மேலாக தண்ணீர்க் கட்டணங்கள் செலுத்தாமல் உள்ள பாவனையாளர்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

[illegible] வியாழக்கிழமை முதல் [illegible]க்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கு முன்னர் குறித்த நபர்கள் குடிதண்ணீர் கட்டணங்களைச் செலுத்தி நீர் விநியோகத் துண்டிப்பிலிருந்து விடுபடுமாறு அக்கரைப்பற்று பிராந்திய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலகம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் குடிதண்ணீர் கட்டணத்துடன் அபராதமாக 2,500 ரூபா செலுத்த நேரிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அவசியமற்ற பணச்செலவு செய்வதால் பணக்கடன் உருவாகும். கவனம் தேவை. சகதொழில் சார்ந்தவர் உங்களிடம் சிறு உதவி கேட்டுப்பெறுவர். தொழில் பணிகள் படிப்படியாக நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். சில காரியங்களை நிறைவேற்றும் பொறுப்புணர்வால் உறக்கம் கெடலாம்.

**இடபம்:** உங்களுக்கு அதிகவேலை காத்திருக்கும். தகுந்த திட்டமுடன் செயற்படுவதால் பணியை ஒவ்வொன்றாக நிறைவேற்றலாம். செய்வீர்கள். பணவரவை விட கூடுதல் செலவினம் ஏற்படும். கௌரவத்திற்காக பணம் செலவு செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** எண்ணத்திலும், செயலிலும் புதிய உத்வேகம் பிறக்கும். பலநாள் சாதிக்க நினைத்த செயலை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் உருவாகி தாராள வளர்ச்சி காண்பீர்கள். சராசரி பணவரவுடன் நிலுவைப்பணமும் வசூலாகும்.

**கடகம்:** நீங்கள் ஆரம்பிக்கும் செயல்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். உறவினர், நண்பர் பாராட்டுவர். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும். நீண்டநாள் விவகாரம் ஒன்றில் சாதகமான தீர்வு வரும். உடல்நல ஆரோக்கியம் பலமுடன் இருக்கும்.

**சிங்கம்:** உங்களின் ஒவ்வொரு செயலிலும் முன்யோசனையுடன் செயற்படுவது அவசியமாகும். உங்கள் நலம் விரும்புவரின் உதவி கிடைத்தால் மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். தொழில் இலக்கை நிறைவேற்ற அதிகநேரம் பணிபுரிய நேரிடும். பணவரவுகளில் முக்கிய செலவுக்கு மட்டும் இடம் தருவது நல்லது.

**கன்னி:** உங்கள் செயல்களில் விளையாட்டுக்குணம் ஏற்படலாம். பிறர் சூழ்நிலைகளை உணர்ந்து நடப்பதால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தன்மைகளை பாதுகாப்பது நல்லது. பணவரவு குறிப்பிட்டளவில் கிடைக்கும்.

**நாளை**

புரட்டாதி - 10 புதன்கிழமை 26.09.2012
திதி: ஏகாதசி மு.ப 10.19 வரை
நட்சத்திரம்: திருவோணம், பி.ப 02.24வரை
சுபநேரம்: 04.32- 06.02 வரை
ராகுகாலம்: 12.02- 01.32 வரை

**துலாம்:** உங்கள் வாழ்வில் எதிர்மறை என்று நினைத்த விடயம் நேர்மறை பலன் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளுக்கு கூடுதல் மூலதனம் செய்வீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்தபொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** நீங்கள் நிர்ப்பந்தம் காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். அளவுடன் செலவழித்து சிரமங்களைத் தவிர்ப்பீர்கள். கூடுதல் உழைப்பினால் மட்டுமே தொழில் வளர்ச்சி சீராகும். நண்பர், உறவினர்களிடம் பேசுவதில் அதிருப்தி மனநிலையை வெளிப்படுத்த வேண்டாம்.

**தனுசு:** உற்சாக மனதுடன் செயற்பட்டு மகிழ்ச்சி தான, தர்மம் செய்ய பணவசதி துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். நீண்ட கால பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மகரம்:** உங்களின் சுய திறமைகளை வெளிப்படுத்த முயற்சிப்பீர்கள். பகைமை எண்ணம் கொண்டவர்களிடம் விலகுவது நல்லது. பணவரவுக்கு ஏற்ப புதிய செலவுகளும் உண்டாகும். உறவினர், நண்பர்களுக்கு எதிர்காலத்தில் உதவுவது பற்றி தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்க வேண்டாம்.

**கும்பம்:** கடந்தகாலத்தில் முக்கிய உதவி செய்த ஒருவரை அதிர்ஷ்டவசமாகச் சந்திப்பீர்கள். அவரது அறிவுரை மனதில் கூடுதல் நம்பிக்கையை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** உங்கள் மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். வாழ்க்கை நிகழ்வுகளில் கண்ட நிதர்சன உண்மைகளை எண்ணி அதிசயிப்பீர்கள். தொழில்வளர தேவையான அனுகூலம் உருவாகும். பணியாளர்களுக்கு கௌரவமும், ஊக்கம் தருகிற சன்மானமும் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 9 | | | 5 | 7 | |
| | | 9 | 7 | | 2 | 1 | | 3 |
| | | | 6 | | 4 | | 2 | 9 |
| 8 | | 5 | | | | 7 | | 4 |
| | | | 5 | | 7 | | | |
| 3 | | 7 | | | | 2 | | 1 |
| 7 | 2 | | 1 | | 3 | | | |
| 4 | | 3 | 2 | | 8 | 9 | | |
| | 9 | 6 | | | 5 | | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 6 | 8 | 2 | 1 | 5 | 3 | 9 |
| 1 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 7 | 8 |
| 2 | 5 | 8 | 3 | 9 | 7 | 4 | 1 | 6 |
| 5 | 7 | 1 | 6 | 4 | 2 | 8 | 9 | 3 |
| 3 | 6 | 4 | 9 | 7 | 8 | 1 | 2 | 5 |
| 9 | 8 | 2 | 1 | 5 | 3 | 6 | 4 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 8 | 9 | 3 | 6 | 1 |
| 6 | 1 | 9 | 4 | 3 | 5 | 7 | 8 | 2 |
| 8 | 3 | 7 | 2 | 1 | 6 | 9 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**மீண்டும் யாழ் நகரில் .....**
**நிஷா மொழி பெயர்ப்பாளர்களின் தமிழ்- சிங்கள ஆங்கில மொழி பெயர்ப்புச் சேவைகள்**

★ பல்கலைக்கழக பாடப்பிரதி / ஆவணங்கள்/ நூல்கள் மொழி பெயர்ப்பு
★ ஆங்கிலம், சிங்களத்தில் கணினி தட்டச்சில் கடிதங்கள் மனுக்கள் தயார் செய்தல்
★ O/L - A/L- IELTS இற்கான ஆங்கில வகுப்புக்கள் (பிரத்தியேக வகுப்புகள் உண்டு)
★ சிங்கள மொழி வகுப்புகள்- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

தரம் .......வேகம்.....நம்பகத்தன்மை

தொடர்புகளுக்கு
நிஷா மொழி பெயர்ப்பாளர்கள்
27, புதுமை மாதா கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0775948722 (23282) (15,6,7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# ஐந்தாம் ஆண்டின் நினைவுகள்



## திருமதி சாரதா பரஞ்சோதி

(இசை ஆசிரியை,
சங்கரனை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

நுண்ணிசை மீட்டிய
நல்லிசை வீணையுடன்
தந்திகள் அறுந்தும்
எந்தையர் மனங்களில்
இன்று முன் இசை
அதிர்வுகள்
காலத்தால் கலையாமல்
கனவாயும் நனவாயும்
நெஞ்சத்தில் மோதுதம்மா
நெடுகாலம் வாழுமம்மா
ஓம் சாந்தி!

அன்னையின் மடியில்
3.11.1965

ஆண்டவன் அடியில்
25.09.2007


டச்சு வீதி,
மூளாய்.

குடும்பத்தினர்

(23269) (15-7-6)

# மரண அறிவித்தல்

## திருமதி காராளசிங்கம் றோசம்மா



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காராள சிங்கம் றோசம்மா (22.09.2012) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (கட்டட பரிசோதகர்) - இராசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபாவதி (கட்டடப் பரிசோதகர்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காராளசிங்கம் (கட்டடபரிசோதகர், கட்டட திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், இந்திராணி, இராசலிங்கம், காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிரிந்திரன், சுரேஷ்குமார் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தி யோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நோவூட்), அனுலா நிர்மல குமாரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி), றஞ்சித்குமார் (உதவிக்கணக்காளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, செற்சிரிபாய), சியாமினி (ஆசிரியை, யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி), குமுதினி, நந்தினி (முகாமைத்துவ உதவியாளர், யாழ்மாநகரசபை), நந்தாக் கிருஷ்ணகுமார் (நந்தன் - பொறியியலாளர், ஆஸ்திரேலியா, சிட்னி) ஆகியோரின் அன்புத் தாயும், பழனிமலை நாதன் (உதவிப் பணிப்பாளர், மாகாண கணக்காய்வுத் திணைக் களம்), குணரட்ணம் (நிர்வாக உத்தியோகத்தர், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்), மகேந்திரநாதன் (மகேந்திரன் ஸ்ரோர்ஸ், கோண்டாவில்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் புஷ்பராணி, வீரலஷ்சுமி, பாமினி (கணக்காளர்,ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சைல்லஜென் (பட்டதாரிப் பயிலுனர்), சாருஜா (விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்), பிரஜீவன் (நிறைவேற்றுப் பொறியியலாளர் Green Valley Shelters ), அபிராம் (விவசாய முகாமைத்துவ தொழில்நுட்ப பீடம்- பெரதெனிய பல்கலைக்கழகம்), நிதர்சன் (இலங்கை வங்கி - வடமாகாண காரியாலயம்), நிஷ்மதா (ஹட்டன் நசனல் வங்கி - சுன்னாகம்), திவாகரன், றம்யா (தேசிய கல்வியற் கல்லூரி - மட்டக்களப்பு), மாதுர்யா (மாணவி- யாழ்இந்து மகளிர் கல்லூரி), ஜீவகன் (மாணவன் - யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி), நிஷாங்கா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2012) செவ்வாய்க்கிழமை காலை 9.30க்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82, [illegible] லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(23251)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலனாய்வு அதிகாரி குற்றவாளி

### என்கிறது ராணுவ விசாரணை மன்றம்

கொழும்பு,செப்.25
இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி சந்தன பிரதீப், அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா உட்பட குழுவொன்றினால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பான இராணுவ விசாரணை மன்ற விசாரணை பூர்த்தியடைந்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த இராணுவ அதிகாரி குறித்த சம்பவத்தின் போது கடமையில் இல்லாத நிலையில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்று இராணுவ விசாரணை மன்றம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது, தான் உத்தியோகபூர்வ பணியில் இருந்தார் என்று குறித்த அதிகாரி தெரிவித்த போதிலும், உத்தியோகபூர்வ கடமை நிமித்தம் அவர் அங்கிருக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மூவரடங்கிய குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, இலங்கை இராணுவத்தின் சட்டப்பிரிவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சட்டப் பிரிவானது தனது அறிக்கையை இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் கையளித்துள்ளது. இராணுவத் தளபதி இதனை மேலும் ஆராய்ந்து தனது கருத்தைத் தெரிவிப்பார்.

இராணுவத் தளபதியின் கருத்தின் அடிப்படையில் இராணுவ சட்டப்பிரிவானது மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து, தனது துப்பாக்கியை இழந்த அதிகாரி, குறித்த அரசியல்வாதியின் மகன் அடங்கிய குழுவினர் தன்னை தாக்கவில்லை, இந்த விடயத்தை தான் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளத் தயார் என்று நீதிமன்றில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## ஹுனைஸ் பாரூக் எம்.பி. வாகன விபத்தில் காயம்




கொழும்பு,செப்.25
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் உள்ளிட்ட குழுவினர் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

சிலாபம் - பத்துலுஓய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த வாகன விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் காயமடைந்ததுடன், அவருடன் வாகனத்தில் பயணித்த மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்

மன்னார் நீதிமன்றத்தில் நேற்று, உப்புக்குளம் மீனவர்களின் வழக்கு மற்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மன்னார் நீதிவானை அச்சுறுத்திய வழக்கு என்பவற்றின் விசாரணைகள் இடம்பெற்றன. இந்த வழக்குகளில் பங்கேற்பதற்காகவே ஹுனைஸ் பாரூக், ஐந்து சட்டத்தரணிகளுடன் மன்னார் நோக்கிச் சென்றுள்ளார். இதன்போதே அவர்களின் வாகனம் வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாலினி பொன்சேகா இராஜினாமா நாடகம்

கொழும்பு,செப்.25
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்து பின்னர் அதனை மீளப் பெற்றுள்ளார்.

மாலினி பொன்சேகா தனது இராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததாக அதன் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க அவர் அந்தக் கடிதத்தை மீளப்பெற்றுள்ளார். பிரபல நடிகையான மாலினி பொன்சேகா 2010 ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொண்ட இவர் வேறு உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்ததாக தெரிவித்துள்ளார். (ச)

# அரசு 'திவிநெகும' சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி

### லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.25
வட மாகாண ஆளுநரைப் பயன்படுத்தி சர்ச்சைக்குரிய 'திவிநெகும' சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம்சாட்டியுள்ளார்.



**மாகாண சபைகளின் அதிகாரங்கள் வலுவிழக்கச் செய்யும் வரையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை காலம் தாழ்த்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.**

சகல மாகாண சபைகளினதும் ஒப்புதலுடன் 'திவிநெகும' திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அரசு இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் இந்த முயற்சியானது அரசமைப்புக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பான கோட்பாட்டுக்கும் புறம்பானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாக அரசு சர்வதேச சமூகத்துக்குத் தொடர் வாக்குறுதிகளை அளித்து வந்த போதிலும், மாகாணசபை விவகாரங்களில் அரசு தலையீடு செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை வலுவிழக்கச் செய்யும் வரையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை காலம் தாழ்த்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

## தனியார் பஸ் ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு,செப்.25
சிலாபம் - கொழும்பு மற்றும் கிரிந்திவல - நிட்டம்புவ போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பஸ்ஸில் கப்பம் பெறப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சிலாபம் - கொழும்பு தனியார் பஸ் ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தனியார் பஸ் ஊழியர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை நடத்துநர் மீதான தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிரிந்திவல - நிட்டம்புவ தனியார் பஸ் ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

இந்தப் பகிஷ்கரிப்பால் குறித்த பிரதேசங்களில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டுப்படுத்திய அளவில் அமெரிக்க தூதரக செயற்பாடு

கொழும்பு,செப்.25
அமெரிக்காவுக்கு எதிராகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் முஸ்லிம் மக்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம், தனது நடவடிக்கைகளை நேற்று மட்டுப்படுத்தியுள்ளது.

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படத்தைக் கண்டித்து கொழும்பில் நேற்று அமெரிக்காவுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றது. இதன் காரணமாக அமெரிக்கத் தூதரகம் அன்றையதினம் காலை 9.30 மணிக்கு மூடப்பட்டது என்று தூதரக தரப்பு தெரிவித்துள்ளது. தமது தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக முன்னர் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அலரிமாளிகையில் சந்தித்தபோது...

## ரூ. 2,000 மில்லியன் செலவில் மேம்பாலம்

வெயாங்கொடை நகரில் மேம்பால நிர்மாணப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. துறைமுக, பெருந்தெருக்கள் அமைச்சின் வீதி அபிவிருத்தி அதிகார சபை 2000 மில்லியன் ரூபாவை இந்தப்பணிக்குச் செலவிட்டுள்ளது.

வெயாங்கொடை நகரில் மிக நீண்ட காலமாக நிலவும் வீதிப் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு இந்தப் பாலம் அமைப்பதன் மூலம் தீர்வு கிடைக்கும். இந்தப் பாலம் 315 மீற்றர் நீளமும் 104 மீற்றர் அகலமும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## 6 ஆயிரம் ஏக்கரில் மூங்கில் உற்பத்தி

### கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,செப்.25
6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மூங்கில் மரங்களை நடுகை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது என்று கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுக் கொடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

கொழும்பு, காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்ற அமைச்சின் கீழ் இயங்கும், ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு அறிமுகப்படுத்தும், மூங்கில் மரத்தைக் கொண்ட உற்பத்தித் திட்டம் என்னும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை செயற்பாட்டின் மூலம் இலங்கை ஆசியாவின் மத்திய தளமாக மாறிவருகின்றது, தற்போது நாட்டின் பல்துறைகளிலும் வளர்ச்சியைக் காணமுடிகின்றது. இந்த அறிமுக நிகழ்ச்சியானது பல நன்மைகளை இத்துறையில் தோற்றுவிக்கும். இதற்கு எனது அமைச்சு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்கும், சுற்றாடல் பாதுகாப்புக்கும், சக்தி வள பயன்பாட்டுக்கும். தொழில் உற்பத்திக்கும், கைத்தொழில் பேட்டைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்குவதற்கும் இந்த மூங்கில் உற்பத்தித்துறை மிகவும் அவசியமானது.

இதற்கென முதற்கட்டமாக 24 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாக் காணும் புனித பிறவி



### ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
### (அமெரிக்கா)

ஸ்தாபகர் – கோப்பாய் சுப்பிரமணிய சுவாமிகள் கோட்டம்
அமெரிக்கா ஹவாய் சுப்பிரமுணி சுவாமிகளின்
ஆற்றுப்படுத்தலில் வளர்ந்த ஆன்மிகச் சுடர், அகவை
ஐம்பது நிறைவுறும் நாளில் அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

நிர்வாகசபை,
சிவபூமி பாடசாலை கோண்டாவில்,
சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்,
சிவபூமி அறக்கட்டளை.

(23092)(6.7.8)

## தசாக கிரஹயக்ஞ அழைப்பு

17.09.2012 திங்கட்கிழமை அமரத்துவம்
அடைந்த



அமரர்
### புவனேஸ்வரி அம்மா இரத்தினக்குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள்

26.09.2012 - புதன்கிழமை மு.ப. 10.00 தசாகம்
27.09.2012 - வியாழக்கிழமை மு.ப. 10.00 ஏகோதிஷ்டம் மாசியம்
28.09.2012 - வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 சபிண்டீகரணம்
29.09.2012 - சனிக்கிழமை மு.ப. 10.00 கிரஜக்ஞம் சமாராதனை (பிராமண போஜனம்)
30.09.2012 - ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 வண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயத்தில் விசேட பிரார்த்தனையும் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று
நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

20, ஐயனார் கோயில் வீதி,
வண் - மேற்கு, யாழ்ப்பாணம். (23294) (6.7.8) குடும்பத்தினர்

## 32 ஆவது பிறந்த நாள் நினைவுகளும் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு 25 ★ 09 ★ 1980



உதிர்வு 23 ★ 09 ★ 2007

### குலேந்திரமோகன் சுதாகர்
(கண்ணன்) திதி: துதியை

கண்ணா!
உங்களை இழந்து ஆண்டுகள் ஐந்து ஆனதே
ஆறவில்லை எம் இதயம்
காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் நினைவுகள்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவில் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி : ரத்னா, கெங்கேஸ்வரி,
பிள்ளைகள் : ஜதுஷன், பிரவின், சத்யான்

2 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(சி/3629)(6.7.8)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சி.குணரட்ணம் அவர்களின்
அன்புத்தாயார்
*அமரர் காராளசிங்கம் றோசம்மா*
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம்.
அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர், மாணவர்கள் கல்விசாரா ஊழியர்கள்*
*யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி.* (23289) (15-7,6)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## தவறிவிட்டது

நவரத்தினம் தவரூபன் என்பவரது அடையாள அட்டை 811122157V, தொழில் அட்டை, A.T.M காட், மோ.லை சென்ஸ் உருத்திரபுரத்திலிருந்து கிளிநொச்சி டிப்போ சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சுந்தரேஸ்வரி அவைக்குழு ஆலை
1019, திருநகர், கிளிநொச்சி. (23293)(5-6-7)
தொடர்பு: 077 648 8556, 077 330 0226

## புலோப்பளை தூய மரியாள் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - இல. 473
2 ஆம் பரிசு - இல. 4634
3 ஆம் பரிசு - இல. 3889

ஆறுதல் பரிசு
முதலாவது - இல. 3544
2 வது - இல. 2404
3 வது - இல. 4630
4 வது - இல. 2949
5 வது - இல. 1375
6 வது - இல. 3812

தொடர்பு:- 0756596499

(23288)(3.6.7)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம்- கரைச்சி- துணுக்காய் பெரியபரந்தன் நில அளவைப் பகுதி யில் PPA 1687 படத்தில் 174 ஆம் இலக்கத்தில் விவரிக்கப்பட்ட யோன் அன்னம்மா என்பவரின் காணி அனுமதிப்பத்திரம் A9 பாதை யில் பளைக்கும் இயக் கச்சிக்கும் இடையில் தொலைந்துள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ. பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு:- 0711876350

(23295) (15-6-7)

## கண்ணீர் அஞ்சலி

கொழும்பு விவேகானந்தா தேசிய
கல்லூரியின் பிரதி அதிபரும்,
மாணவத் தலைவர்களின்
பொறுப்பாசிரியருமான
க.தில்லைநாதன் அவர்களின் தாயார்
*திருமதி கமலாதேவி கணேசநாதன்*
22.09.2012 சனிக்கிழமை அமரத்துவம்
அடைந்தார். அன்னாருக்கு எமது
கண்ணீர் அஞ்சலியை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

*மாணவத்தலைவர் கழகம்*
*கொ/விவேகானந்தாக் கல்லூரி,*
*கொழும்பு- 13* (சி/3666) (15-6-7)

## மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் மேல் நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 12.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் சீலிடப்பட்ட உறையில் வைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை நேரடியாகக் கையளிக்க விரும்புவோர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்குக் கிளையில் ஒப்படைத்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சாவகச்சேரி நீதிமன்ற வளாகசுத்திகரிப்பு பணிக்கான கேள்விப்பத்திரம் என தவறாது குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு

★ சுத்திகரிப்பு பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 08 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதில் நான்கு பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
★ காலை 6.30 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
★ சுத்திகரிப்புக்குரிய உபகரணங்கள் ஏனைய மூலப்பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.
★ சனி, ஞாயிறு, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாக கருதப்படும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் மேல் நீதிமன்றப் பதிவாளருடன் அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்றப் பதிவாளர்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

*ஜே.விஸ்வநாதன், தவிசாளர்.*
*மேல் நீதிமன்றக் கேள்விச் சபை,*
*மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

(சி/3627)(6.7.14)

சிறுவர், ஆசிரியர், முதியோர் தினங்களை
மகிழ்ச்சியுடன் கொண்டாட மெடல், மக்
சீல்ட், பிக்பச் வழங்கி கௌரவியுங்கள்
S.S. Jasotharan Arts : 077 7110610
(சி/3556) (8.7.6)

## ஓப் செற் பிறிண்டிங் மெசின் விற்பனைக்கு

- Hamada 700 CD DC
- Hamada 700 CD- NP
- 36" சைனா கட்டர் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773452824 (23298)(3.6.7)

## நெஞ்சை விட்டகலாத நினைவுகள்

### மூன்றரை ஆண்டு

மலர்வு 16 ★ 05 ★ 1954



உதிர்வு 11 ★ 04 ★ 2009

திருமதி
**சோதிராணி சதானந்தராஜ்**
திதி -துதியை

### நான்காம் ஆண்டு

மலர்வு 09 ★ 06 ★ 1947



உதிர்வு 11 ★ 10 ★ 2008

அமரர்
**நடராஜா அற்புதராஜா**
திதி -ஏகாதசி

25.09.2012 செவ்வாய்க்கிழமை

நிஜங்கள் நிழல்கள் ஆனாலும்
வரும் நினைவுகள் மாறுவதில்லை
உங்கள் உடல்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
அவனியில் உங்கள் நினைவால்
அனுதினமும் நாம் வாடுகின்றோம்.

கற்பகப்பிள்ளையார்
கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

*உங்கள் பிரிவால் துயருறும்*
*குடும்பத்தினர்.*

(23286)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நெடுந்தீவில் நடைபெற்ற இளைஞர் தினவிழா

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால்2012 ஆம் ஆண்டுக்கான மாவட்ட இளைஞர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் இரத்தினபுரியைச் சேர்ந்த இளைஞர்களும் நெடுந்தீவைச் சேர்ந்த இளைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நெடுந்தீவு இளைஞர் கழகத் தலைவர் எஸ்.ரஜீவ் பிரகாஸ் தலைமையில் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில்நடைபெற்றஇந்தஒன்றுகூடல் நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் மற்றும் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐம்பது இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். இவர்களுடன் நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளும் பங்குபற்றினர். இந்த நிகழ்வில் ஆடல், பாடல் உட்படப் பல விளையாட்டுக்களும் இடம் பெற்றன. இந்த நிகழ்வை நெடுந்தீவுப் பிரதேசத்துக்கான இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஞா.அமலஜான் ஒழுங்குபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## 'ஆசிரியர் குரல்' பத்திரிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் ''ஆசிரியர் குரல்'' எனும் பெயரில் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் இந்தப் பத்திரிகை வெளியிடப்பட்டது. இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை இந்தப் பத்திரிகை வெளிவரவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சங்கத்தின் அதிகாரபூர்வ, நடுநிலையான பத்திரிகையாக இது அமையும்.அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இஸட் புள்ளி தொடர்பான விளக்கங்களுடன் முதலாவது பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது. (3-4)

## இடர் முகாமைத்துவ விழிப்புணர்வு கருத்தரங்கு

நவாலி, செப்.25

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இடர் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றுள்ளது.

கிராம சேவையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அந்தப் பிரிவுக்கான பட்டதாரிப் பயிலுநர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அந்தப் பிரிவுக்கான வரைபடம் கொண்டு கிராம சேவையாளர் ரி. நித்தியானந்தன் இடர் முன்னேற்பாடு, இடர்கால முகாமைத்துவம் சம்பந்தமான முன்னெச்சரிக்கை பற்றியும் விளக்க மளித்தார். வெள்ளம் ஓடும் வாய்க்கால்கள், மதகுகள் சீரமைக்கப்பட வேண்டும். திடீரென வெள்ளம் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இந்தப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் தேவாலயங்கள், வை.எம்.சி.ஏ மண்டபம் என்பவற்றில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் பற்றியும் விளக்கமளிக்கப் பட்டது.

மேலும் இப் பிரிவில் மழைநீரைச் சேமித்து வைப்பது, மேய்ச்சல் தரைகள், விளையாட்டு நிலங்கள், சதுப்பு நிலங்கள், வீதிகள் பற்றியும் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. (3-100)

## சகோதரத்துவ விழா

தென்மராட்சி, செப்.25

மீசாலை வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தின் சகோதரத்துவ விழா எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் வழிபாடு, மகா மன்ற நிறைவு, நினைவு, திருப்பள்ளி எழுச்சி, அகவல் பாராயணம், ஞான சரிகை ஓதுதல், திருவருட்பா இசை, பேருபதேசம், சத்விசாரம், ஜோதி வழிபாடு போன்றவை இடம்பெறும்.

நிகழ்வில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களைச் சேர்ந்தோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

## கால்நடைகளுக்கு தண்ணீர்தொட்டி

யாழ்ப்பாணம், செப்.25

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் பரிபாலன சபையினர் கால்நடைகளின் தேவை கருதி ஆலயப் பகுதியில் தண்ணீர்த் தொட்டியை அமைத்து தினமும் காலை மாலை நேரங்களில் தொட்டிக்கு நீரிறைத்து விடுகின்றனர். கடும் வறட்சி காரணமாக இந்தப் பகுதியில் உள்ள கால்நடைகள் நீருக்காக அலைவதைவிடுத்து நீர் குடிக்க கோயிலடிக்கு வந்து திரும்புவது குறிப்பிடத்தக்கது. ஐய னார் கோயில் பரிபாலன சபையின் இந்த நடவடிக்கையை காரைநகர் மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். (3-7)

## யோகா வகுப்புகள்

'யாழ், யோக அரங்கம்' வண்ணை நாச்சிமார் கோயில் திருமண மண்டபத்தில் இலவச யோகா வகுப்புகளை நடத்தி வருகின்றது.இந்த வகுப்புகள் புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெற்று வருகின்றது. ஆர்வமுடையவர்கள்இதில்இணைந்து பயன் பெற்றுக்கொள்ளலாம் என யாழ் யோகா அரங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (3)

## யாழ். ஆஸ்பத்திரி வேளாங்கண்ணி மாதாவுக்கு கொடி

யாழ். போதனா வைத்திய சாலை வளாகத்தில் அமைந்துள்ள புனித வேளாங்கண்ணி மாதா ஆலய கொடியேற்றத் திருவிழா நாளைமறுதினம் 27 ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆராதனைகள் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15க்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (3-51)

## வண்ணை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இன்று

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு விசேட இசையரங்கு நடைபெறவுள்ளது. இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற வுள்ள இசையரங்கில் பாட்டு- கனகாம்பரி சிவனேஸ்வரநாதன், மதுரா பரமேஸ்வரன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்- சி. துரைராசா, முகர்சிங்-எஸ். நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

* * *

மாலை 6.30 மணிக்கு 'பன்முக நோக்கில் இராமன்' என்னும் தலைப்பில் ஆசிரியர் எஸ். செந்தூர்ச்செல்வனின் தெய்வீகப் பேருரை இடம்பெறவுள்ளது. (3)

## ஆழமாக்கப்படும் வலிகாமம் பகுதிக் கிணறுகள்

வலிகாமம் பகுதியின் பல இடங்களில் கிணறுகளுக்கு கம்பி வைத்து ஆழமாக்கியும் கனரக வாகன இயந்திரத்தினால் வெளிவளவுகளில் புதிய கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக கிணறுகளின் நீர்ஊற்றுக்கள் வற்றியுள்ளன. இதன் காரணமாக மக்கள் பலரும் அதிக பணம் கொடுத்து இவ்வாறு தமது கிணறுகளை ஆழமாக்கி தண்ணீரைப் பெறுகின்றனர். (3-100)


# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் குமாரசாமி சுந்தரமூர்த்தி

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் கம்பளையை வதிவிடமாகவும் கொண்டவர்

பிறப்பு 05 ★ 11 ★ 1934

இறப்பு 07 ★ 10 ★ 2011




அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
அவனியது புகழும் அன்பாய் மிளிர்ந்தீர்!
இன்ப வாழ்வு நாம் வாழ தன்னையே அர்ப்பணித்த ஐயாவே
இன்றைய நாளில் நெஞ்சமதில் நினைந்து உருகுகின்றோம்.
துன்ப சாகரத்தில் நாம் துணையின்றி தவிக்கின்றோம்.
ஓராண்டு மறைந்தாலும் மறவாது உங்கள் நினைவு
என்றுமே எங்கள் இதயங்களில் நினைவுச் சுடராய் ஒளி வீசும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்

113/6, கண்டி வீதி,
கம்பளை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(அ/3626) (15-7-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம், ஸ்ரீ வேங்கடேச

# தேர்த் திருவிழா



## காலை 7.30 மணிக்கு வசந்

## முற்பகல் 11.3



### கடமைகளை உணர்த்தியவன்

அகில லோக இரட்ஷகன் கருணைக் கடல் நாயகன் யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜ பெருமாளுக்கு இன்று மிகவும் சிறப்பாக தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. தர்மத்தை காக்க யுகம் தோறும் அவதரித்த பரந்தாமன் பார்த்தனுக்கு சாரதியாகி கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என அனைவருக்கும் தத்தமது கடமைகளை உணர்த்திய வேங்கடவன் இன்று தேரிலே ஏறி எம்மிடம் உள்ள ஆணவம் முதலிய மலங்களை நீக்க வருகின்றார். இந்த வேளை தேர்வடம் தொட்டிழுத்து வேங்கட வரதராஜ பெருமாளது பேரருளுக்கு பாத்திரமாவீர்களாக!

கோவிந்தா! கோவிந்தா!

இ.ரமணிதரக்குருக்கள்
பிரதமகுரு
வேங்கட வரதராஜ பெருமாள்
கோயில்

### ஆதீன மகாசபைத் தலைவர் வாழ்த்துச் செய்தி

உலகைக் காக்கும் பரம்பொருளாக விளங்குகின்ற ஸ்ரீபரந்தாமன் வண்ணைம்யபதியிலே வேங்கடேச வரதராஜப் பெருமாளாக அருளாட்சி புரிகின்றார். அந்த வெண்ணெய் திருடும் வேங்கடேசனுக்கு இன்று தேர்த்திருவிழா. உலகெலாம் நிறைந்து விளங்கும் காத்தற் கடவுள் இன்று துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ்செய்யும் பொருட்டு சித்திரத் தேரிலே ஆரோகணித்து சிங்காரப் பவனி வருகின்றான்.

'பச்சை மாமலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே' என்று ஆழ்வார் பாடியுள்ளது போல் தேவாதி தேவனான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் அக்கிரமங்களையும் அநியாயங்களையும் அழித்தொழித்து அடியவர்களைக் காக்கும் ஆதி கேசவனாக இன்று தேரிலே எழுந்தருளி நேரிலே காட்சியளிப்பது ஓர் ஆனந்த நிகழ்வாகும்.

இன்றைய ரதோற்சவ நன்னாளிலே வேங்கடத்தான் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று அவன் பொற்கமல பாதம் பணிந்து வாழ்த்தி மகிழ்கின்றோம். எல்லாம் வல்ல வரதராஜப் பெருமாள் எல்லோருக்கும் நல்வாழ்வு அருள வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

'கண்ணன் கனியமுதம் எங்கும் பரவட்டும்'
இறைபணியில்என்றும் மகிழ்ந்தருளும்

திரு.றஞ்சன், ஆதீன மகாசபைத் தலைவர்,
வண்ணை ஸ்ரீவேங்கட வரதராஜ பெருமாள்
தேவஸ்தானம்,யாழ்ப்பாணம்.



### வண்ணை வரதராஜனே! யாழ் மண்ணைக் காத்திட தேரேறுக!

பொன்னாலையிலே வரதராஜனாய்
துன்னாலையில் வல்லிபுர ஆழ்வாராய்
அளவையில் நாகவரத நாராயணராய்
வண்ணார்பண்ணையிலே
வேங்கடேசப் பெருமாளாய்

வந்துதித்த வள்ளலே வருக வருக
சந்துபொந்தென்றில்லாது சகலருக்கும்
முந்தியே வரமருளும் மணிவண்ணனே
சிந்தித் திருப்போர்க்கு சித்தி
தருபவனே!

மாநிலமின்று மலையாய் பறக்கின்றது
மாயவன் தேர்வடம் பிடிக்கின்றோம்
மாரி பொழிவதற்கும் மானிடம்
தழைத்திடவும் காரிருள் கண்ணா நின்
கடைக்கண்ணருள்வாய்

தெல்லியூர் தேவி.



### நல்லை

உலகெலாம் நிறைந்து
விஷ்ணுவானவர் தம்மை நி
யார்களின் துன்பதுயரங்க
ருந்து அருள்பாலிக்கும் ஸ்த
ராஜப் பெருமாள் தேவஸ்தா

இந்த அருள்மிகு அற்பு
விழா. மஹோற்வசத்தில் ர
அந்த வகையில் ஜீவகாருண்
இன்று அழகிய வண்ணச்
களை நீக்கி அடியார்களுக்கு

உலகமுண்ட பெருவாய
பரம்பொருளாக, உயிர்களை
வண் ணையம் பதியிலே
மன் அருள்பாலிக்கும் அ
இந்த வண்ணைப்பதி வே
வரையும் காத்து ரட்சிக்க வே
பணிந்து அருளாசிகள் நல்கி
திருவருள் எங்கும் பரவி
றோம்.

'என்றும்

## தேர்த் திருவிழாச் சிறப்புற

பலசரக்கு சமான்கள் நியாய விலைக்கு பெற்றுக்கொள்ள
**சந்திரன் ஸ்ரோர்ஸ்**
75, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4331

**Seelan Aluminium Fitting**
**சீலன் அலுமினிய பிற்றிங்**
DOHA, DUBAI
இல் 10 வருட அனுபவமுள்ளவர்..
No:54, K.K.S. Road, Kokuvil Junction.
Tel: 021 4902561, 0778050918

அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**ஆசைப்பிள்ளை**
**அன்சன் நகைமாடம்**
K.T.பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே:021 321 2399.

யாழ்.நகரில்
**வஜிதா VAGEETHA**
மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்
உரிமையாளர்-வசந்தன்,
தொ.பே.0778097741, 0215672219
இல.300/1, நாவலர் வீதி, ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.

**TRACTOR SPARE**
Importers and Dealers in
Tractor Spare Parts Specialist in
Massy Ferguson Engineers &Tippi
Course Pressure Pipe Fitting.
7, Kannathiddy Road, Jaffna
T.P:0212225055

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் குளிரூட்டிகளும் சிறந்த முறையில் திருத்த வேலைசெய்து கொள்ள
**சேகர் குளிர் ஊற்று**
இல.400, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 6634

**ரவிதா களஞ்சியம்**
பழைய இரும்பு உலோகப் பொருள்கள் வாங்கி விற்பனை செய்யப்படும்
இல, 377, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2223700.
இணை நிறுவனம்:
**சானுகா ஜுவல்ஸ்**
64D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2224687.

சகல புரியாணிகள் (சை
சிற்றுண்டிகள் (வடை,
என்பவற்றை சு
**ஹொட்டல்**
ஓடர்கள் குறித்த நேரத்
340, ஆஸ்பத்தி
தொ.பே.:
காலி வீதி, கொழும்

(c2468) (6,7,10)

இலங்கையில் அதிகமாக விற்பனை மற்றும் எரிபொருள் சிக்கனம் கொண்ட சகல வர்ண பெயின்ட் வகைகள், கட்டப் பொருள்கள், சுண்ணாம்புப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.





**வேல்முருகன் வணிக நிலையம்**
இல.56 A(378), இல.295 (21), மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9457

சகல விதமான கட்டடபொருள்களையும் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள
**ரமணன்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
84, ஐயனார் கோயிலடி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 4923417, 021 222 9296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணையம்பதி வரதராஜ பெருமாள்
# சிறப்பு மலர் 25-09-2012





## மண்டப பூசை காலை 9.30 இரதோற்சவம்
## 0 மணிக்கு இரதவரோகணம்.

### ஆதீன குருமுதல்வரின் ஆசிச் செய்தி

ங்குகின்ற காத்தற் கடவுளான மகா
ந்து மனம் நைந்துருகி வழிபடும் அடி
க்கும் பொருட்டு எழுந்தருளி வீற்றி
தான் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத

தவஸ்தானத்தில் இன்று தேர்த்திரு
ற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும்.
ர்த்தியான ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர்
ரத் தேரில் ஆரோகணித்து துன்பங்
ட்காட்சி நல்குவார்.
ா ஸ்ரீ மகாவிஷ்ணு உலகைக் காக்கும்
ரட்சிக்கும் திருமாலாக இன்று யாழ்
டித் தேரிழுக்க பார் மகிழும் பரந்தா
ி.
டேசன் இன்று தேரேறி வந்து அனை
ிமென்று அவரின் பத்ம மலர்ப்பாதம்
ழ்த்தி மகிழ்கின்றோம். வேங்கடேசன்
னவரும் நலமே வாழ வாழ்த்துகின்

ண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்.



### ஈழத்து திருப்பதியில் தேரேறும் பெருமாள் எமையிங்கு காத்தருள வேண்டும்.

வைணவம் சார்ந்த வைகானச ஆகம விதி முறைகளுக்கு இணங்க ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னாகிய குணபூசன ஆரியன் செகராச சேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீவேங் டேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றது. பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப் பெற்ற நிலை யில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தேயுடைய ஒரு திவ்விய ஷேத்திரமாக விளங்கத் தொடங்கியது. அன்று தொடங்கி இன்று வரை இத் தேவஸ்தானத்தை வைணவ சமயத்தைச் சார்ந்த பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகள் நிருவாகப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

ஈழத்து திருப்பதி என போற்றப்படும் இவ் வண்ணை ஸ்ரீ வேங்க டேச வரதராஜப் பெருமாள் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தரும் பெரு மாள் இன்று தேரிலே ஆரோகணிக்கின்ற திருக் காட்சி அற்புதமா னது,'கொண்டல் வண்ணைக் கோவலனாய் வெண்ணையுண்ட வாயன் எனதுள்ளம் கவர்ந் தானை அண்டர் கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினை காணாவே' என்பதாக திருப்பாணாழ்வார் அனுபவித்தது போல அரங்கனை அனுபவிக்க வேண்டும். அப்பொழுதே மனம் ஒரு நிலைப்பட்டு அமைதியும் ஆனந்தமும் ஏற்படும். இத்தகு வேங்கடவனை நாமும் தொழுது நல்ல வண்ணம் வாழ்வோமாக.

காரை எம்.பி. அருளானந்தம்



### பேரருளைத் தந்தருள தேரேறி வரவேண்டும்!

வேங்கடேசனே! வேணுகோபாலனே!!- எங்கள்
வேதனையைப் போக்கிடவே தேரேறி வாருமையா!
பாங்காகப் பக்கத்திலே ஸ்ரீதேவி பார்த்திருக்க -நல்ல
பூப்போன்ற பூமகளும் புத்தாடை சரசரக்க
நாங்காண வண்ணையிலே வண்ணத் தேரேறி
வாருமையா!
நல்லருள் தந்தெம்மை ரட்சிக்க வேண்டும்!
தேங்காய்கள் உடைத்தே நற் கற்பூர தீபமேற்றி
வணங்கியே நிற்கின்றோம் வரந்தருவாய் கண்ணா!
கண்ணான மணி வண்ணா காத்தருள் புரிவாய் ஐயா!
கல் நெஞ்சும் கரைந்துருகத் தேரேறி வாருமையா!
உண்ணாமுலை உமையாளும் தேவர்களும் பார்த்து
மகிழ
ஊர் கூடித் தேரிழுக்க நல்லருளைத் தாருமையா
பெண்ணாகிய பெருமானே! வண்ணை வேங்கடேசா!!
பேரருளைத் தந்தருளத் தேரேறி வரவேண்டும்!
புண்ணாகிய நெஞ்சுடனே புழுவாய்த் துடிக்கின்றோம்
பூமகளின் நாயகனே! வரமருளத் தாமதமேன்?

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்.

## வாழ்த்துவோர்

**அம்பாள் மரக்காலை**
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:0777111147

சிக்கனமான சலவைக்கும்
தூய வெண்மைக்கும்
**மில்க் வைற்**
நீல சோப் பாவியுங்கள்
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 1497

**நெல்சன் வீடியோ**
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**லிப்ரா ஹொட்டல்**
சைவ உணவகம்
174, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6784.

**ஈஸ்வரா நெஞ்கபே**
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
காரைநகர் வீதி, சுழிபுரம்.

**க.கு.கந்தையாப்பிள்ளை**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சைவம்), குளிர்பானங்கள்,
ல்ஸ், கட்லட், சமோஷா)
ாக உண்டு மகிழ
**றொலக்ஸ்**
செய்து கொடுக்கப்படும்
தி, யாழ்ப்பாணம்.
222 2808.
, தொ.பே:2360462

**கிருஷ்ணா நகைமாளிகை**
**KRISHNA JEWLLARY**
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212225046
கிளை நிறுவனம்:
**கிருஸ்ணா அடகு கடை**
இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**RUBA VERSATILE TRADERS**
104A, STANLEY ROAD
JAFFNA
021 222 8330

**செல்வி நகை அகம்**
நம்பிக்கையான நாணயமுள்ள நகைகளை,
நல்ல முறையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2229441

அலுமினியம்
பிற்றிங் மற்றும்
அனைத்து
அளவிலான படம்
பிறேம் போடுதல்
மற்றும் பல
சேவைகளை
எம்மிடம் குறுகிய
காலத்தில் பெற்றுக்
கொள்ளலாம்.



கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
**பட்டாபி படமாடம்**
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351.

**சாரங்கா நாணயமாற்று சேவை**
**Sharanga Money Exchange (Pvt) LTD**
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6972, Fax: 222 8869

இணை நிறுவனங்கள்
**சாரங்கா ஜுவல்லறி**
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11.
TEL.: 2434971, Fax. 0112434071

**சிவா நகைமாடம்**
இல.14, கண்டி வீதி, நவீன சந்தை
சாவகச்சேரி. தொ.பே: 021 4922398

Colombo: 0773988776,
Jaffna: 077 3929359,
Hot Line: 0777743578,
Tel: 021 222 6972

கொழும்பு ⟷ யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு
**Venkadeswara Express**



217, Central Road, Colombo 12. Tel: 0115234580

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரிகள் தொடர்பாக NDB அக்கறை கொண்டுள்ளது

## சலுகை அடிப்படையிலான நிதிச்சேவைகள்

சுயசக்தியோடும், திடமான நோக்கத்தோடும் தங்களது வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரிகளின், எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்யும் பல்வேறு நிதிச் சேவைகளே இவை.

- சௌபாக்யா செழுமை கடன் திட்டம்
- 'வடக்கின் எழுச்சி' - வட மாகாண கடன் மார்க்கம்
- கிழக்கு மாகாணத்திலுள்ள பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சிக்கான கடன் திட்டம்
- விவசாயக் கால்நடை அபிவிருத்தி செயற்திட்டம்
- புதிய விரிவான கிராமியக் கடன் திட்டம்
- வறுமை ஒழிப்பு நுண் நிதிச் செயற்திட்டம்

## குறுகிய கால கடன் வசதி

நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் போது ஏற்படும் குறுகிய கால நிதித்தேவைகளை பூர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். அத்துடன் இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற இது வழிவகுக்கும்.

## விஷேடமாக வடிவமைக்கப்பட்ட நிதிச்சேவைகள்

தேசிய பொருளாதாரத்திற்கு தங்கள் பங்களிப்பையும் இவர்கள் வழங்கி வருகின்றனர் என்பதை யாரும் அறிந்திருக்க முடியாது. இவ்வாறு அமைதியாக தங்கள் சேவையை வழங்கி வரும் இவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கி, இவர்களை மேலும் வலுப்படுத்தி சக்தியை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

- விநியோகஸ்தர்கள் தொடர்பான நிதிச்சேவைகள்
- வழங்குனர்கள் தொடர்பான நிதிச்சேவைகள்
- ஏற்றுமதியாளர்கள் தொடர்பான நிதிச்சேவைகள்
- தேயிலை உற்பத்தியாளர்கள் தொடர்பான நிதிச்சேவைகள்

அழையுங்கள் 0112 448 888

AA (lka) Fitch Rating

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

NDB வங்கி

(#/3553)(6-7)

PHOENIX OPM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுடன் சேர்ந்தாலும்

# கூட்டமைப்புடன் பேச்சுக்கள் தொடரும்!

## சம்பந்தனிடம் ஹக்கீம் உறுதி





**'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டிருந்த அரசியல் கட்டுரையில் இருந்து ஒருபகுதி தமிழில்: கோகுலன்**

கடந்தவாரம் ஞாயிற்றுகிழமையன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிமுக்கு கடுமையான சிலவார்த்தைகளைக் கூறும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ''உங்களுக்கு நினைவிருக்கட்டும், நான் எந்த வித அரசியல் பேரம் பேசுவதிலும் இறங்கப் போவதில்லை. பதிலாக எனது மாகாணசபை உறுப்பினர்களை எதிர்த்தரப்பில் இருக்கசெய்வேன் . நீங்கள் எனது அமைச்சரவையில் இருக்கலாம் . நீங்கள் விரும்பினால் கிழக்கில் ஒரு நிர்வாகத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்'' இவ்வாறு ஹக்கீமுக்கு ஜனாதிபதி கூறினார்.

அப்பொழுது அவர்களுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் உடனிருந்தார். இதே வேளை அமைச்சரவைக் குழுவொன்று ஹக்கீமுடன் திரைக்குப் பின்னால் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டே இருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணியின் கோரிக்கை என்னவாக இருந்ததென்றால் முஸ்லிம் காங்கிரஸ் தனது பிரதான கோரிக்கையான கிழக்கு 'மாகாண முதலமைச்சர் பதவி தனக்கு வேண்டுமென்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகும். இந்தக் கலந்துரையாடலானது முன்னர் ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசில் அமைச்சரவை உறுப்பினர் அல்லாத கூட்டுறவு உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சராகவிருந்த அக்கட்சியின் உறுப்பினர் நஜீப்அப்துல் மஜீத்தை(வயது-55) முதலமைச்சராக நியமிப்பது என்ற தீர்மானத்தில் முடிவுற்றது. அதன்படி அவர் சத்தியப்பிரமாணமும் எடுத்துக்கொண்டார்.

நேற்று முன்தினம் அப்துல் மஜீத் முதலமைச்சர் என்ற முறையில் கிழக்கு மாகாணத்துக்குச் சென்றடைந்த போது கிண்ணியாவில் ஒரு வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலநிலை சரியில்லாமையால் அவர் சென்ற ஹெலிகொப்டர் சீனக்குடாவில் இறங்கியது.

இந்த முதலமைச்சர் பதவிக்கு மாற்றீடாக முஸ்லிம் காங்கிரஸிற்கு அதன் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் அரச தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியை சந்தித்ததன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றக்குழுவை அழைத்து ஹக்கீம் தாம் நடத்தியிருந்த பேச்சுக்களின் விவரங்களை அவர்களுக்கு எடுத்துரைத்தார். உறுப்பினர்களின் கருத்துக்கள் பல மாதிரியாக இருந்தன. சிலர் கட்சி முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருப்பதால் இன்னும் இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டும் என்றார்கள். மற்றவர்கள் கட்சித்தலைவருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் உடன்பாட்டுக்கு வரும்படி அதிகாரம் வழங்கியிருந்ததை சுட்டிக்காட்டினார்கள். என்றாலும் கட்சியினர் எதிர்பார்த்த மாதிரியில் விடயங்கள் முற்றுப்பெறவில்லையென்பதில் ஏமாற்றம் நிலவியது. தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்பினார்கள்.

திங்கட் கிழமை காலையில் பார்க்வீதி கொரிய உணவு விடுதியில் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, சுமந்திரன் மற்றும் அமைச்சர் ஹக்கீம் தனது குழுவினருடன் கலந்து கொண்டார்கள். கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்த ஹக்கீம் கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டமைக்கான நியாயத்தன்மையை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்ததாகவும் ஒன்று பட்ட திட்டமொன்றின் கீழ் பணியாற்றவும் தாம் தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தார் என்றும் அந்த வகையில் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக நியமிப்பது பற்றி ஆலோசிப்பதும் நல்ல விடயமாகும் என்றும் ஹக்கீம் கூறினார். இது சாத்தியமான ஒரு விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தன் பதிலளித்த போது விடயங்கள் விவாதிக்கப்படுவதற்கு தாம் எதிரானவர் அல்ல என்று கூறியதுடன் சற்று கோபமுற்றவராக, சிறுபான்மையின, முஸ்லிம்கள் தமிழர்கள், ஆகிய இரு தரப்பினரும் கைவிடப்பட்டுவிட்டார்கள். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ.ம.சு. கூட்டமைப்பிலிருந்து மாறுபட்டு நின்றதுடன், தனித்தே தேர்தலிலும் போட்டியிட்டது. அரசுக்கு எதிரான வாக்குகளையும் வென்றது. தமிழ் மக்களின் கரிசனைகளைக் காப்பாற்றுவதாகவும் தமிழர்க்கு வாக்குறுதியளித்தது. இப்பொழுது ஐ.ம.சு கூட்டமைப்பை ஆதரிப்பதற்கு தெரிவு செய்துள்ளது என்றார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றுவது என்பதை விட வேறு தீர்மானம் அது எடுத்திருப்பதானது அதற்கு மாறாகச் செயற்படுவதானது மு.க.பெற்ற மக்கள் தீர்ப்பினை காட்டிக் கொடுப்பதாகவே இருக்கும். இது சங்கீதக்கதிரைப் போட்டியாக இருக்க முடியாது. மோதல் அரசியலை நாம் நடத்துவது சரியல்ல, சரியான முடிவை தெரிவு செய்வது தான் வீரமாகும் என்றார்.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை ஹக்கீம் பின்னர் வலியுறுத்தினார்.

மன்னாரில் ஏற்பட்ட சம்பவத்தை எடுத்துக் காட்டிய அவர் அந்தச் சம்பவம் நீதித்துறையுடனான மோதலாக முடிந்தது என்றார். அரசுத் தரப்பு அரசியல் வாதி ஒருவரினால் அந்த விடயம் தவறுதலாகக் கையாளப்பட்டுள்ளது என்று கூறி அரசியல் வாதியின் பெயரையும் வெளியிட்டார். விடத்தல் தீவிலுள்ள தமிழ் மீனவர்களை கோந்தைப்பிட்டியில் மீளக் குடியமர்த்துவது அதன் அடிப்படை பிரச்சினையாக இருந்துள்ளது என்றார். அந்த இடத்தில் முன்னர் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் குடியமர்ந்திருந்தார்கள். சில குழுக்களினால் இந்தப் பிரச்சினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தப்பட்டு விட்டது. இன்னொரு பிரச்சினை புதைகுழிகள் இருந்த இடமாகக் கருதப்படும் இடத்தில் முஸ்லிம் தொழுகைக்கான கட்டடம் அமைந்திருப்பது. இந்த விடயமும் சம்பந்தப்பட்ட அரசியல் வாதியால் தவறாக கையாளப்பட்டுள்ளது என்றார்.

நிமால்சிறிபாலடி சில்வா, மைத்திரிபால சிறிசேன மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய அமைச்சர்களும் உடன் இருந்தார்கள். இரு தரப்புக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்களைக் களைந்தெறிவதற்கான பெரு முயற்சி இங்கு இடம் பெற்றது. பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய ஹக்கீம், ஐ.ம.சு.கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவர் பதவிக்காலத்தின் முன் பகுதியின் அரைவாசி காலத்துக்கு முதலமைச்சராக இருப்பார். அடுத்த அரைவாசிக் காலத்துக்கும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் முதலமைச்சராக இருப்பார் என்றும் ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டது. அவ்வாறு இல்லையெனில் முஸ்லிம் காங்கிரஸ் ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஆதிக்கத்துக்குள்ளாக்கப்பட்டு விட்டது என்று மக்கள் கருதுவார்கள் என்பதும் இடித்துரைக்கப்பட்டது என்றார்.

இப்பொழுதுள்ள அம்பாறை மாவட்டத்தைப் பிரித்து கல்முனை கரையோர மாவட்டம் ஒன்று உருவாக்க வேண்டும் என்பதும் முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று என்று ஐ.ம.சு. கூ.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படலாம் என்று பதில் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

மு.கா.தலைவர் தங்கள் தரப்பிலான கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஐ.ம.சு.கூட்டமைப்பின் செயலாளருக்கு அனுப்பி அப்படியான கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்றதற்கான பதில் கடிதம் ஒன்றை அந்தக் கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளார்.

மூன்றாவது விடயம் அம்பாறையில் காரைதீவு சந்தியில் உள்ள பள்ளிவாசல் தொடர்பான பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளை முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்று கூறினார் ஹக்கீம்.

இரா.சம்பந்தன் முஸ்லிம் காங்கிரஸின் முடிவு பற்றி பத்திரிகையாளர்களிடம் பேசிய போது தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே நாங்கள் முஸ்லிம் காங்கிரஸிற்கு முதல் அமைச்சர் பதவியை வழங்குவதாகக் கூறியிருந்தோம். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுவது தான் செய்யக் கூடிய நியாயமான காரியம். ஹக்கீம், ராஜபக்ஷவின் விசுவாசமுள்ள வேலைக்காரர். இது துரதிர்ஷ்டமாகும். மிக மோசமாக துன்பங்களை அனுபவித்துள்ள தமிழ் பேசும் மக்கள் காட்டி கொடுக்கப்பட்டு விட்டார்கள் என்றார்.

கடந்த திங்கட் கிழமை பிற்பகுதி ஹக்கீமுக்கும் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்குமிடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டமைக்கான நியாயத் தன்மையை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்ததாகவும் ஒன்று பட்ட திட்டமொன்றின் கீழ் பணியாற்றவும் தாம் தயாராய் இருப்பதாகவும் அந்த வகையில் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக நியமிப்பது பற்றி ஆலோ சிப்பதும் நல்ல விடய மாகும் என்றும் ஹக்கீம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கெய்ன் லங்காவின் மாநாடு

இலங்கையின் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபடும் கெய்ன் லங்கா தனியார் நிறுவனம் கொழும்பில் கூட்டு வர்த்தகர்களுக்கான மாநாடொன்றை நடத்தியது.எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வு அபிவிருத்தி பணிகளில் அவர்களையும் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

எரிபொருள் அகழ்வாராய்ச்சிகள் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் எத்தகைய நன்மைகளை வழங்கும் என்பது தொடர்பாகக் கவனம் செலுத்தும் நோக்கில் தாஜ் ஹோட்டலில் அண்மையில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

எண்ணெய் மற்றும் எரிவாயு தொடர்பான கலந்துரையாடல்களுக்கு அப்பால், இலங்கையில் கெய்ன் நிறுவனம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடும் வாய்ப்பும் உள்ளூர் வர்த்தகர்களுக்குக் கிட்டி யது.





இலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அகழ்வுப் பணிகள் தொடர்பாக கருத்தரங்கில் உள்ளூர் வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாகவும் கெய்ன் லங்காவினால் வர்த்தகப் பிரமுகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

கெய்ன் நிறுவனத்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக வர்த்தகர்கள் தெளிவுபடுத்தப்பட்டதுடன் உள்ளூர் நிறுவனங்களுக்கு எரி பொருள், எரிவாயு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

(த)

# DHL இற்கு வெள்ளி விருது



சமீபத்தில் நடைபெற்ற மனித வள முகாமைத்துவம் தொடர்பான விருது வழங்கும் நிகழ்ச்சியில் DHL கீல்ஸ் நிறுவனத்திற்கு வெள்ளி விருது கிடைத்துள்ளது.

மனித வள நிபுணர்கள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2012-HRM விருது வழங்கும் நிகழ்ச்சியில், தனியார் மற்றும் பொதுத் துறைகளில் உன்னதமான மனித வள முகாமைத்துவ வழிமுறைகளையும், தொழில் நுட்பங்களையும் மேற்கொண்டு வரும் சிறந்த அமைப்புகள் தெரிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்பட்டன.

நிறுவனத்தின் சார்பில் DHL கீல்ஸின் வதிவிட முகாமையாளர் மனிஷ் பட்டேல் சமுகமளித்திருந்தார். DHL கீல்ஸின் மனித வள பிரிவின் தலைவி புஷ்பிகா குணதிலக விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்த வருட விருதுக்கான நிறுவனங்கள் திறமையானவர்களின் சேவை, தலைமைத்துவம் மற்றும் திறமை முகாமைத்துவம், ஊழியர்களின் ஆளுமை, திறன் ஊக்குவிப்பு விருது வழங்கல், அங்கீகாரம் மற்றும் தொழிலாளர் உறவு போன்ற துறைகளில் மதிப்பீடு செய்யப்பட்டன.

DHL எக்ஸ்பிரஸின் தெற்காசிய பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் மொன்றிரோ கருத்து வெளியிடுகையில், ''இலங்கையில் இடம்பெற்ற மனித வள முகாமைத்துவ விருது வழங்கும் நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நிறுவனங்களுள் ஒன்றாக எம் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டமை எம் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட மாபெரும் கௌரவமாகும்'' என்றார்.

'தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் அதிபர்' என்ற கௌரவத்தை நாம் பெறுவதற்குக் காரணியாக இருந்த உன்ன[illegible] மனித வள முகாமைத்துவ வழிமுறைகளை DHL நிறுவனத்தில் நாம் தொடர்ந்தும் கடைப்பிடிப்போம்' என்றும் கூறினார்.

வாடிக்கையாளர்களுக்கான வாக்குறுதிகளை ஊழியர்கள் நிறைவேற்றவென அவர்களுக்கான வழிகாட்டியாக உறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச நிபுணத்துவத் திட்டத்தை (CIS) DHL கொண்டுள்ளது.

# அம்பாறையில் ICTA வின் செயலமர்வு

அறிவக சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் அறிவகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் அதன் ஈ-சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாண அறிவகங்களுக்காக புதிய ஈ-சேவைகள் மற்றும் நிதிச் சேவைகளை அறிமுகப்படுத்தும் செயலமர்வொன்றை நடத்தவுள்ளது.

இவ் ஒரு நாள் செயலமர்வு 2012 - ஒக்டோபர் மாதம் முதலாம் அல்லது இரண்டாவது வாரந்த அம்பாறை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் இடமொன்றில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான இடம், திகதி, மற்றும், நேரம் ஆகியவை பின்னர் அறிவிக்கப்படும்.

இதற்காக அறிவக உரிமையாளர்களின் பங்கேற்பு கட்டாயமாகும். அறிவக உரிமையாளரல்லாதவரொருவர் பங்குபற்ற வேண்டுமாயின் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துக்கு அறிவிக்க வேண்டும்.

# களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் விநியோகஸ்தர்களுக்கு விருதுகள்

இலங்கையின் முதல்தர கேபிள் தயாரிப்பாளர்களான களனி கேபிள்ஸ் நிறுவனம் அதன் விநியோகத்தர்கள் மற்றும் விற்பனை குழுவினரைச் கௌரவிக்கும் வகையில் விருதுகள் வழங்கியுள்ளது.

சிறப்பாகத் தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள், பணப்பரிசுகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயண வாய்ப்புகள் போன்றவை வழங்கப்பட்டன.

இந்த விருதுகள் சிறந்த பிராந்திய விற்பனை முகாமையாளர், சிறந்த விற்பனை ஊக்குவிப்பு அதிகாரி மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு பிராந் தியங்கள் உள்ளடங்கலாக சிறந்த விநியோகத்தர் (பெரிய, மத்திய மற்றும் சிறியளவு) போன்ற மூன்று பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன.

சிறந்த பிராந்திய விற்பனை முகாமையாளருக்கான விருதை, மேல் மாகாணத்தைச் சேர்ந்த கிஹான்லக்மல் பெர்னான்டோ பெற்றுக் கொண்டதுடன் சிறந்த விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிக்கான விருதை, நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த பிரசன்ன குமார விஜேசேன பெற்றார்.

சிறந்த திட்ட விற்பனை அதிகாரிக்கான விருதை துஷார பெர்னான்டோ பெற்றார். மாவத்தகம பிராந்திய விநியோகத்தரான திருமதி. ஏ.கே.எம். குணதிலக, சிறந்த விநியோகத்தருக்கான (பெரிய பிரிவு) விருதை வென்றிருந்தார்.

களனி பிராந்திய விநியோகத்தரான பூர்ண வீரசிங்க சிறந்த விநியோகத்தருக்கான (மத்திய பிரிவு) விருதை வென்றதுடன், சிறந்த விநியோகத்தருக்கான (சிறியளவு பிரிவு) விருதை மட்டக்களப்பு பிராந்திய விநியோகத்தர் எஸ்.கே. எம். கொன்ஸ்ட்ரக்ஷன்ஸ் வென்றது.

# அரச ஊழியர்களுக்கு ரெலிகொம்மின் அபிமான இணையத்தள பக்கேஜ்

ஸ்ரீலங்கா ரெலிகொம் இப்போது நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அரச ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கென்று பிரத்தியேக மாக வடிவமைக்கப்பட்ட 'அபிமான' பக்கேஜினை அறிமுகப்படுத்தியுள்ளது.

மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின், துரித அபிவிருத்தி மற்றும் தூரநோக்குடன் பயணிக்கும் எமது




நாட்டின் அடித் தளமாக விளங்குவோர் அரச பணியாளர்களே. அவர்களின் நிகரற்ற சேவைக்கான வெகு மதியாகவே அபிமான விஷேட பக்கேஜ் வழங்கப்படுகின்றது.

'அபிமான' என்பது, நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணைய வசதியை விஷேட விலையில் அரச ஊழியர்களுக்குத் தரும் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் புதிய புரோட்பாண்ட் பக்கே ஜாகும்.

2015 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதிக்குள் இலங்கையர்கள் அனைவருக்கும் இணைய வசதியை வழங்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சிந்தனையில் உருவான 'மகிந்த சிந்தனை' நோக்கத்தினைச் சார்ந்ததாகவே 'அபிமான' பக்கேஜினை அறிமுகப் படுத்தியு[illegible]ளோம்.

இதன் மூலம், ஜனாதிபதி அவர்களின் அனைவருக்கும் தகவல் தொழிநுட்ப அறிவாற்றல் என்ற அபிலாஷையை விரைவில் பூர்த்தி செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம் என ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் குழுமத் தலைவர் நிமல் வெல்கம தெரிவித்தார்.

# BCHS வழங்கும் கற்கை நெறிகள்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES நிறுவனம் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இன்று கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மற்றும் கல்முனை பிரதேசங்களில் கிளைகளை நிறுவி கல்விச் சேவையில் ஒரு மகத்தான பணியினை மேற்கொண்டு வருகிறது.

இநநிறுவனம் ஆங்கிலத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுத்து பல வகையான கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இவற்றில் சர்வதேச கற்கை நெறிகளையும் மற்றும் இக்கல்வி நிறுவனத்தினால் விசேடமாக உருவாக்கப்பட்ட கற்கை நெறிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

British College Of higher studies நிறுவனத்தின் இத்தகைய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பல காரணங்களைக் கூறலாம்.

*பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆங்கிலம் கற்பித்தலில் புலமை பெற்ற நிபுணர்களை உள்ளடக்கிய குழாம் மூலம் உருவாக்கப்பட்ட விசேட பாடத்திட்டம்.

*ஒவ்வொரு கற்கை நெறியும் reading, writing, speaking, listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ் வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் மூலம் கற்பித்தல்

*12 இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்களைக் கொண்ட சிறந்த கற்பித்தல் குழாம்

*நவீன தொழில் நுட்பங்கள், Visuals மூலம் சிறந்த நடைமுறைப் பயிற்சிகள். ஆங்கில அறிவு குறைந்தவர்களுக்கு தனிப்பட்ட கவனம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடுகள்

*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

BCHS நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள்

City & Guilds-A1 English Exam

U.K ல் உள்ள ஒருவர் திருமணத்தின் பின்னர் தனது கணவன்/ மனைவிக்கு U.K நிரந்தர விசாக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் இலங்கையில் உள்ள கணவன்/ மனைவி A1 English Exam பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

BCHS இப்பரீட்சையின் முகவராக செயற்படுவதுடன் தனது கிளைகளிலேயே மாணவர்கள் பரீட்சை நிலையமாக தெரிவு செய்வதற்கு வசதியினை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர்.

இதுவரை 650 மாணவர்கள் இப்பரீட்சையினை பூர்த்தி செய்திருப்பதுடன் தற்போது 64 மாணவர்கள் October மாத பரீட்சை எழுத தங்களை பதிவு செய்துள்ளனர். இங்கு மிகச் சிறந்த கற்பித்தல் முறை காரணமாக A1 பரீட்சை பெறுபேறுகள் வெற்றிகரமாக அமைகின்றன.

**City & Guilds- B1 English Exam**

Student Visa மூலம் U.K செல்வதற்கு தீர்மானித்துள்ள மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி அடைந்தால் மட்டுமே U.K செல்வது சாத்தியமாகும்.

**IELTS - International English Language System**

U.S.A, Canda, Australia, New Zealand, U.K போன்ற நாடுகளுக்கு மாணவர்கள் செல்வதற்கு இப்பரீட்சை மிக முக்கியமானது. இப்பரீட்சையில் எடுக்க வேண்டிய புள்ளிகளின் அளவு ஒவ்வொரு நாட்டுக்கும் வேறுபடும்.

**Spoken English With Grammer**

இக்கற்கை நெறி 6-8 கிழமைகளை உள்ளடக்கியதான துரித பயிற்சி நெறியாக காணப்படுகின்றது. ஆங்கிலப் புலமையில் சிறந்து விளங்கும் ஆசிரியர் குழாமினால் சர்வதேச தராதரத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்தினை அடிப்படையாக கொண்டு இப் பாடநெறி கற்பிக்கப்படுகின்றது.

**Diploma/ Advance Diploma In English**

இப்பாடநெறிகள் ஆங்கிலத்தில் ஓரளவு புலமை உள்ளவர்களுக்காக உருவாக்கப்பட்ட பாடத்திட்டம். இது இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

**Young Learners For English**

இது ஒரு சர்வதேச பரீட்சையாகும் 7 - 12 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு என BCHS னால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கற்கை நெறி. பெற்றோர்கள் ஆங்கிலத்தின் தற்போதைய முக்கியத்தை உணர்ந்து சிறுபராயத்திலேயே பிள்ளைகளுக்கு இப்பாடநெறிகளை கற்பிப்பதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு பெற்றுத்தர முடியும்.

இப்பாட நெறியானது தொடர்ந்து பல நிலைகளை (Levels) கொண்டு இருப்பதால் இந்நிலைகளைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்தில் ஒரு பட்டதாரியாக வெளிவர முடியும். ஒவ்வொரு பரீட்சை முடிவிலும் University of Cambridge நேர டியாக வழங்கும் சான்றிதழ்கள், மாணவர்களுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்களில் பொலிஸார் அத்துமீறினால் ஆணைக்குழுவினால் முறைப்பாடு செய்யுங்கள்

## உடன் நடவடிக்கை என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப். 25

யாழில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸார் பாரபட்சமாகச் செயற்பட்டால் அது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் 2006ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை உயர்மட்டக் கலந்துரையாடலின் பின்னர் விரைவில் வெளியிடப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான ரி.இ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்த ஆணையாளர், யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூக உபகுழுக்களுடனும் பொலிஸாருடனும் கலந்துரையாடலை நடத்தினர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில், இணைப்பாளர் த.கனகராஜ் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் சிவில் சமூகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இணைந்து மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டங்கள், பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுகள் சரிவர இயங்காமை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இதன்போது தற்போது 300 பெண் பொலிஸார் பயிற்றுவிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் நியமனம் பெற்றால் இந்தப் பிரச்சினை இல்லாமல் போகுமெனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

இதன்போது ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடைபெறுகின்ற போது பொலிஸார் பக்கச் சார்பாகச் செயற்படுவது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் மேற்கொண்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் 2006ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உயர் மட்டக் கலந்துரையாடலின் பின்னர் வெளியிடப்படும் -என்றார். (ங-5)

# புலிக்குற்றச்சாட்டில் கைதான இளைஞர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், செப்.25

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2009 ஆம்ஆண்டுகைது செய்யப்பட்டிருந்த ஆனைக்கோட்டை இளைஞர், யாழ். மேல் நீதிமன்றினால் நிரபராதி என இனங்காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து 2005ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப்பகுதியில் இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய், ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த புவனேந்திரன் கஜேந்திரன் என்பவர் 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் வைத்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான விசாரணை மன்றில் நடைபெற்றது.

இதன்போது சந்தேக நபரான கஜேந்திரன் சுயமாக வழங்கியதாகக் கூறி மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் விசாரணையின் போது நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது. (ங-4)

# சூசையின் மனைவியுடன் படகில் சென்ற மகனை மீட்டுத் தருமாறு தாயார் முறைப்பாடு

இறுதிப் போரின்போது கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவியுடன் படகில் ஏற்றிச் செல்லப்பட்ட தனது மகனை உயிரோடு இருக்கிறார் என்றுதனக்குத் தகவல் கிடைத்துள்ளதால் தன் மகனை மீட்டுத் தருமாறு அவரது தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்தத் தகவலை இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

''2009ஆம் ஆண்டு இறுதிப் போர்நடைபெற்றுக்கொண்டிருந்த போது, மே மாதம் முதலாம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசையின் மனைவி மற்றும் அவரது பிள்ளைகளுடன் எனது மகனான கந்தசாமி வி.பாலன் (வயது-40) என்பவரும் அவர்களுடன் முல்லைத்தீவு கடல் வழியாக படகில் ஏற்றிச் சென்றனர். இதன் பின்னர் அவருடன் தொடர்பு இல்லை.

இந்த நிலையில் எனது மகன் தற்போது உயிருடன் இருக்கிறார் என்று அறிந்துள்ளேன். எனவே அவரை மீட்டுத்தாருங்கள்''- என்று குறித்த தாயார் மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டாரை மீளவும் விசாரித்த பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார். (5)

# ஆஸி. செல்ல முயன்று பிடிபட்ட 46 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,செப்.25

ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டு வடமராட்சி பொலிகண்டி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 46 பேரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 1.30 மணியளவில் வடமராட்சி பொலிகண்டி கடற்பரப்பில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 'சுதுதுவ' என்ற படகில் 46 பேர் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

புறப்பட்ட சிறிது நேரத்திலேயே பருத்தித்துறைக் கடற்படையினரிடம் இவர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர். இதன்போது பிரதான படகு உட்பட அதற்கு வழிகாட்டியாக சென்ற சிறிய படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. படகில் 41 தமிழர்கள்,4 முஸ்லிம்கள் மற்றும் படகோட்டியான சிங்களவர் ஒருவர் உட்பட 46 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.


கைது செய்யப்பட்ட 46 பேரும் பருத்தித்துறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படிருந்தனர்.


இந்த நிலையில் நேற்று மாலை 4 மணியளவில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் கைது செய்யப்பட்ட அனைவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கைப்பற்றப்பட்ட படகில் இருந்த உணவுப் பொருள்களை வதிரி பரமானந்தா சிறுவர் ஆச்சிரமத்தில் ஒப்படைக்குமாறும் , குறித்த படகினை பருத்தித்துறை கடற்படையினரின் பாதுகாப்பில் பராமரிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ங-5-8)

திருநெல்வேலி அபான்ஸ் வழங்கும்

LED தொலைக்காட்சி சலுகை விலை





LG 32''LED வர்ண தொலைக்காட்சி விலை
89,990 - 64,990/= (12 மாதங்கள் வட்டி இல்லாத கொடுப்பனவு
32'' SHARP LCD வர்ண தொலைக்காட்சி
52,990 - 41990/=
42'' LG LCD வர்ண தொலைக்காட்சி
109,990/= - 87990/= FAN இலவசம்
LG HIFI ஓடியோ சிஸ்ரம்
32000/= - 27990/=
20 மாதங்கள் வட்டி இல்லாத தவனை கொடுப்பனவு



உடன் நாடுங்கள் திருநெல்வேலி அபான்ஸ் காட்சியறைக்கு 021 222 0247
269, பலாலி வீதி, கந்தர்மடம்.

# தந்தை மகளைப் பார்க்க விதிக்கப்பட்ட தடை தள்ளுபடி

தந்தை தனது மகளை பாரப்பதற்கும், பழகுவதற்கும் யாழ்.மாவட்ட நீதிமன்றம் விதித்திருந்த தடையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீக்கி உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றத்தின் முன்விசாரணையிலுள்ள விவாகரத்து வழக்கு ஒன்றின் தொடர்ச்சியாக மனுதாரரான இளம் பெண் சட்டத்தரணி , தனது கணவரும் மகளின் தந்தையுமான நபர், மகளைப் பார்ப்பதற்கும், பழகுவதற்கும் தடைவிதிக்குமாறு கடந்த ஜனவரி மாதம் கேட்டிருந்தார்.

இதனையடுத்து விவகாரத்து வழக்கு தீர்க்கப்பட்டு குழந்தை யாருடன் வாழ்வது என்று முடிவுசெய்யப்படும் வரையும் மகளை தந்தை பார்வையிடுவதற்கும் பழகுவதற்கும் யாழ்.மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

இதனை எதிர்த்து தந்தை மேன்முறையீடு நீதிமன்றில் மனுதாக்கல் செய்திருந்தார். அதன் மீதான தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது.

தனது மகளைப் பார்ப்பதற்கு மாவட்ட நீதிமன்றம் தந்தைக்கு விதித்த தடை உத்தரவை தள்ளுபடி செய்யத் தீர்ப்பளித்த உயர் நீதிமன்ற ஆணையாளர் எஸ். பரமராஜா, மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கில் எதிரியானவரும் குழந்தையின் தாயானவரும் ஓர் இளம் பெண் சட்டத்தரணி. யாழ்ப்பாணத்தின் குற்றவழக்கில் சந்தேக நபர்களுக்காக முன்னிலையாகும் பிரபல சட்டத்தரணி ஒருவரின் உதவியாளர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி லிங்கா துரைராஜாவின் அனுசரணையுடன் என்.ஆர். சிவேந்திரன் முன்னிலையாகியிருந்தார். எதிரிதரப்பில் சட்டத்தரணி மு. றெமீடியல் அனுசரணையுடன் வி. விவேகானந்தன் முன்னிலையாகியிருந்தார். (5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிஸ் ஞாபகார்த்த உதைபந்து

# மயிலங்காடு ஞானமுருகன் கைப்பற்றியது கிண்ணத்தை

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்.உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பிரான்சிஸ் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.



கடந்த வெள்ளிக் கிழமை இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி, மூன்றாவது நிமிடத்திலேயே மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி வீரர் தசரதன் தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்று, எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்கான கோலினை பெற முயற்சித்த போதும் அவை யாவும் ஞானமுருகன் அணியால் தடுக்கப்பட்டன.

ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி வீரன் சேகர் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடிக்க ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

தமக்கு எதிராக 2 கோல்கள் அடிக்கப்பட்ட போதும். பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியினர் துவண்டு போகாமல் தொடர்ந்தும் உத்வேக ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். முதற்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது 2:1 என்ற கோல்கணக்கில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 15 ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரஸ் தனது அணிக்கு 2 ஆவது கோலினை அடிக்க அந்த அணிவீரர்களுக்கு நம்பிக்கை பிறந்தது. ஆட்டம் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையடைந்ததால், பார்வையாளர்களிடையே பரபரப்பு தொற்றிக் கொண்டது.

இந்தநிலையில் ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் , மயிலங்காடு ஞானமுருகன் அணி வீரன் தசரதன் அற்புதமான கோல் ஒன்றை அடிக்க, ஞானமுருகன் அணியின் கோல்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்தது. இந்தக்கோல் மூலம் தனது அணியின் வெற்றியை தசரதன் உறுதிப்படுத்திக்கொண்டார். ஆட்ட நேர முடிவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீரராக மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி வீரன் சேகரும் ,சிறந்த கோல் காப்பாளராக பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜதீபனும் தெரிவுசெய்யப் பட்டனர். (ங-23)

# விக்ரோறியா இரண்டாமிடம்

## தேசிய மட்ட மகளிர் கிரிக்கெட்டில்

பாடசாலை அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட மகளிர் கிரிக்கெட் போட்டியில் விஜயபாகு மகாவித்தியாலயத்திடம் வெற்றியைப் பறிகொடுத்தது சுழிபுரம் விக்ரோறியா அணி.

வாதுவ நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற மகளிர் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இரத்தினபுர விஜயபாகு மகாவித்தியாலய அணியும், சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற விஜயபாகு மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் களமிறங்கிய விக்ரோறியா வீராங்கனைகள் ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டு, 'ரன்-அவுட்' முறையில் இலக்குகளை அடுத்தடுத்து இழந்தனர். இதனால் அவர்களின் ஓட்ட எண்ணிக்கை மந்த கதியிலேயே உயர்ந்தது. நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்ரோறியா வீராங்கனைகள் 5 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இதில் கோபிகா 11 ஓட்டங்களையும், சுகன்யா, பானுப்பிரியா ஆகியோர் தலா 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். விஜயபாகு அணியின் சாலிகா 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

தேசிய மட்ட இறுதிக்கு முன்னேறிய முதல் அணி என்ற சாதனையை படைத்தது

பதிலளித்து ஆடிய விஜயபாகு வீராங்கனைகள் இலக்குகளை இழக்காது நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். விக்ரோறியா வீராங்கனைகள் விஜயபாகு அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனைகளின் இலக்குகளை வீழ்த்த எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போயின. எனினும் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவதில் விக்ரோறியாப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்ட போதும், எதுவித இலக்குகளையும் இழக்காமல், 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 32 ஓட்டங்களை தொட்டது விஜபாகு அணி. இதனால் இறுதிப் போட்டியில் 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிக் கிண்ணத்தை விஜயபாகு அணியிடம் தாரைவார்த்தது விக்ரோறியா.

இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் விக்ரோறியா அணி, வடமாகாணத்தின் சார்பில் மகளிர் கிரிக்கெட் போட்டியில் தேசிய மட்ட இறுதிக்கு முன்னேறிய முதல் அணி என்ற சாதனையை படைத்தது. (ங-23-422)

# ஓல்ட்கோல்ட்ஸுக்குத் தடை



வலி வடக்கு செப் 25

வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டக் கழகத்துக்கு அடுத்துவரும் ஒரு சுற்றுப் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தலைவர் குலரத்தினம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஹொக்கி இறுதிப் போட்டியில் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்க மறுத்து வெளிநடப்புச் செய்தமைக்காக ஓல்ட் கோல்ட்ஸ் அணிக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக, குறித்த இறுதிப் போட்டியின் பரிசளிப்பு விழாவின் போது ஹொக்கிச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்கள் முன்னிலையில் இத்தகைய செயலில் ஈடுபட்டு விளையாட்டுத்துறைக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் வகையில் நடந்துகொண்டமைக்காகவே ஓல்ட்கோல்ட் அணிக்கு இத் தடை உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து ஒழுக்காற்றுக் குழுவினரும் நிர்வாகக் குழுவினரும் வெகுவிரைவில் கூடி இறுதி முடிவை மேற்கொள்வார்கள் எனவும் தெரியவருகிறது.(ங-86)

# தேசிய மட்ட மெய்வன்மை போட்டிக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

சாவகச்சேரி,செப் .25

ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம், 20ஆம், 21ஆம், 22 ஆம் திகதிகளில் மக்கெய்ஷர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சிக் க்ல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ங-9)

# மனோகரா வெற்றிக்கிண்ணம் மணற்காடு அன்ரனிஸ் வசம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், அல்வாய் சனசமூக நிலையத்தின் 85 ஆவது நிறைவை முன்னிட்டு, அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதற்பாதி ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் வதிரி டைமன்ஸ் அணி வீரன் பிறேம் குமார் (பீமா) தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்து அசத்தினார்.

தொடர்ந்துவதிரிடைமன்ஸ் விளையாட்டுக் கழக வீரன் துசிகரன் 8 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான 2 ஆவது கோலை அடிக்க ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

ஆனாலும் சற்றும் சளைக்காத மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி பதிலடியாக 12 ஆவது நிமிடத்தில் அடித்தது ஒரு கோல். இந்தக் கோலை அடித்தவர் ஜேசுரூபன். பின்னர் 16 ஆவது நிமிடத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைக்கப்பெற்றது. சுதர்சன் அதனைக் கோலாக மாற்றினார். இதனால் இரு அணியினரும் தலா 2 கோல்களையும் பெற்ற நிலையில் முதற்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் அணியினர் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக கோல் காப்பாளர் விஜயகுமாரினால் தடுத்து நிறுத்தப்பட்டன. பதிலுக்குத் தமது அணிக்கான கோலினை பெறும் நோக்கோடு மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியினரின் முன்னேற்ற முயற்சிகளும் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியினரின் பின்கள வீரர்களினால் தடுக்கப்பட்டன. இதனால் ஆட்ட முடிவில் இரு அணிகளும் 2:2 கோல்கள் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

எனவே வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியினர் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரன் கமலதாஸ், சிறந்த கோல் காப்பாளராக அதே விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஜயகுமார்(டம்பா) ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டு விருதுகள் வழங்கப் பட்டன.

இதேவேளை வளர்ந்து வரும் வீரருக்கான விருதை டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த துஷிகரனும், ஆட்டத் தொடர் நாயகன் விருதினை திக்கம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சதீஸ்குமாரும் (இவர் இந்தச் சுற்றுப் போட்டியில் 11 கோல்களை அடித்திருந்தார்) பெற்றுக்கொண்டனர்.

(ங-23-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பக்கத்துக்கான அனுசரணை
HONDA WORLD
வடமராட்சியில் Stafford motor co. இன் அங்கிகாரம் பெற்ற Hero Honda, Honda ஏக விநியோகஸ்தர்
HONDA
HONDA WORLD
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்
HONDA WORLD
பருத்தித்துறை வீதி, நெல்லியடி
Email- hondaworld@gmail.com
web- www.honda.lk
T.P- 0212264416, Hotline-0770387444



# அழுத்தத்திலும் சிறப்பாக ஆடிய ஹர்பஜன்

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் அழுத்தத்திற்கு மத்தியில் மிகச்சிறப்பாக ஆடினார் என்று இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நீண்ட காலத்தின் பின்னர் இந்திய அணியின் ஹர்பஜன் சிங் இடம்பெற்றிருந்தார். இவரின் திறமைகள் வெளிப்பாடுகள் குறித்து டோனி மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.


உபாதைகள், மோசமான திறன் ஆகியன காரணமாக இந்திய அணியில் கிட்டத்தட்ட ஒரு வருடமாக போட்டியில் பங்குபற்றியிருக்காத ஹர்பஜன் சிங், இங்கிலாந்து அணியைத் துவம்சம் செய்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இந்த நிலையில் அது குறித்துக் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, ஹர்பஜன் சிங் இதைவிடச் சிறப்பாகப் பந்துவீசியமையைத் தான் கண்டுள்ளதாக எண்ணுவதாகவும், எனினும் சூழ்நிலைகளின் கீழ் ஹர்பஜன் சிங்கின் திறமை வெளிப்பாடு அற்புதமானது எனத் தெரிவித்தார்.

நீண்ட காலங்களின் பின்னர் ஹர்பஜன் சிங் போட்டியில் பங்குபற்றியதாகவும், எனவே தன்னை நிரூபிக்கும் வாய்ப்பு, தேவை அவருக்குக் காணப்பட்டதாகவும் தெரிவித்த டோனி, ஹர்பஜன் சிங் மிகச்சிறப்பாக அதைச் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த ஆட்டத்தில் ஹர்பஜன் சிங் மோசமான பந்துகள் எதனையும் வீசியிருக்கவில்லை எனத் தெரிவித்த டோனி, பந்துவீச்சு மாற்றங்களையும் அவர் சிறப்பாகக் கையாண்டதாகத் தெரிவித்தார். அத்தோடு ஆக்ரோஷமான மனநிலையுடன் அவர் பந்துவீசியிருந்ததாகவும், தனது பணியின் மேல் முழுக்கவனத்தையும் கொண்டிருந்ததாகவும் டோனி பாராட்டுத் தெரிவித்தார். வழக்கத்துக்கு மாறாக இந்திய அணி சார்பாக 5 பந்துவீச்சாளர்கள் களமிறங்கியிருந்த நிலையில் அடுத்த ஆட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமா என்பது குறித்துக் கருத்துத் தெரிவிக்க மறுத்த டோனி, ஹர்பஜன் சிங் அடுத்த ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதாகத் தெரிவித்தார். (5)

உதயன்
தினமும் வெல்லுங்கள்
ரூபா. 2000
கேள்வி 8

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012




# மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது

மேற்கிந்தியத்தீவுகளுக்கும், அயர்லாந்து அணிகுமிடையிலான ஆட்டம் மழை காரணமாக முடிவு எதுவும் எட்டப்படாமல் கைவிடப்பட்டது. இதனால் மேற்கிந்தியத்தீவுகள் அணி சுப்பர் - 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நான்காவது 'ரி-20' உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகின்றது. இதில் லீக் ஆட்டங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று இரவு நடைபெற்ற பதினொராவது ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும், அயர்லாந்து அணியும் மோதிக் கொண்டன. இரு அணிகளுமே ஆஸ்திரேலிய அணியிடம் தோல்வியைச் சந்தித்திருந்த நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும் நிலை காணப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன் படி களமிறங்கிய அயர்லாந்து அணிக்கு முதலாவது பந்திலேயே அதிர்ச்சி கொடுத்தது தீவுகள். பீட்டர் போல்ட் ஓட்டமெதனையும் பெறாது போல்டானார். அதன் பின்னர் ஸ்ரிலிங், ஜொய்ஸ் இணைந்து மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சை பந்தாடினர். இவர்களின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் திணறியது.

ஐந்து பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் ஒரு மணிநேரம் தாமதமாக ஆட்டம் தொடங்கியது. 19 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டு ஆட்டம் ஆரம்பமானது. அதன் பின்னர் சுனில் நரைனின் சுழலில் இணைப்பு பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வில்ஸன், ஓ பிரைன் மேற்கிந்தியத்தீவுகளுக்கு அலுப்புக் கொடுத்தது. இவர்களது அதிரடியும் அயர்லாந்தை வலுவாக்கியது.

இருந்தும் கெய்ல் தனது அதிரடியைப் பந்து வீச்சிலும் காட்டி இலக்குகளை கொய்து எடுத்தார். இதனால் அயர்லாந்து இலக்குகளை இழந்தது. இருந்தும் முடிந்தவரையில் முயற்சித்து ஆடிய அயர்லாந்து அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்த 129 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அதன் பின்னர் தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வீதம் வழங்கப்பட்டது. இருப்பினும் ஓட்டவிகித சராசரியின் அடிப்படையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

(5)



## 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

அயர்லாந்து எதிர் மேற்கிந்தியத்தீவுகள் நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத்தீவுகள்

முடிவு: மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| போட்டர்பீல்ட் | b எட்வேட்ஸ் | 00 | 01 | 0 | 0 |
| ஸ்ரிலிங் | c கெயில் b சமி | 19 | 16 | 3 | 0 |
| ஜொய்ஸ் | b நரைன் | 17 | 19 | 3 | 0 |
| ஓ பிரைன் | b கெய்ல் | 25 | 21 | 0 | 1 |
| வில்ஸன் | c ராம்டின் b கெய்ல் | 21 | 22 | 3 | 0 |
| கெவின் ஓ பிரைன் | b ராம்போல் | 13 | 15 | 0 | 1 |
| ஜோன்ஸ்ரன் | ஆட்டமிழக்காமல் | 15 | 10 | 0 | 1 |
| ஜோன்ஸ் | ஆட்டமிழக்காமல் | 14 | 11 | 0 | 1 |
| குஷாக் | | | | | |
| டொக்ரெல் | | | | | |
| ஷொரசென் | | | | | |
| உதிரிகள் | | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிடல் எட்வேட்ஸ் | 3 | 23 | 1 | 0 |
| ராம்போல் | 4 | 20 | 1 | 0 |
| சமி | 3 | 23 | 1 | 0 |
| நரைன் | 4 | 21 | 1 | 0 |
| ருஷல் | 2 | 19 | 0 | 0 |
| கெய்ல் | 3 | 21 | 2 | 0 |

TOTAL - 129/6 (19)
1-0 (போட்டர்பீல்ட்), 2-33 (ஜொய்ஸ்), 3-37 (ஸ்ரிலிங்), 4-70 (வில்ஸன்), 5-96 (ஓ பிரைன), 6-107 (கெவின் ஓபிரைன்)

இந்த ஆண்டு லண்டனில் நடைபெற்ற 'பரா ஒலிம்பிக்' போட்டியில் அதிக தங்கப்பதக்கங்களை வென்ற நாடு எது?

..............................................

பெயர்– ..............................................

முகவரி– ..............................................

..............................................

உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 26.09.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக்குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை-தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக் [illegible] கூப்பனை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் துடுப்பாட்டத்தை இன்னமும் நம்புகின்றேன்



மஹேல

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மீது நம்பிக்கையுள்ளதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். சுப்பர் 8 சுற்றுக்களில் இலங்கை வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தைப் பார்வையிடக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக அம்பாந்தோட்டையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 7 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்ட ஆட்டத்தில் இலங்கை வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை. குறிப்பாக நான்கு, ஆறு ஓட்டங்களை இலங்கை வீரர்கள் அதிகம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்தன, அதிக ஆறு ஓட்டங்களைப் பெறக்கூடிய வீரர்கள் இலங்கை அணியில் காணப்படுவதாகவும், சில நாட்களில் ஆறு ஓட்டங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் இலங்கை வீரர்களால் ஆறு ஓட்டங்களை அடிக்க முடியாது என்பது அர்த்தமல்ல என்று அவர் தெரிவித்தார்.

அதிரடியாக ஆடக்கூடிய வீரர்கள் இலங்கை அணியில் காணப்படுகிறார்கள் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அவர்களின் மீது நம்பிக்கை வைத்தால் போதுமானது எனத் தெரிவித்தார். இலங்கை வீரர்கள் தங்களின் திறமைகள் குறித்து நம்பிக்கை கொண்டு ஆட்டத்தை வெளிப்படுத்தினால் போதுமானது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை அணியின் உப தலைவர் அன்ஜலோ மத்தியூஸ், சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ் ஆகியோர் உபாதைக்குள்ளாகியிருப்பதாகவும், 'ஸ்கான்' பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'ஸ்கான்' பரிசோதனைகளின் முடிவுகள் குறித்து இதுவரை தெரியவரவில்லை. (5)

**கணினி மலிவு விற்பனை**

HP 3.0 GHZ Full set Computer 17" LCD Monitor அதனுடன் கூடிய அனைத்து பொருள்களும் Free - web cam/ 4GB Pendrive/ Head phone

24,750/= மட்டுமே

ஒரு வருட உத்தரவாதம்

187, K.K.S .Road, Jaffna.
0212224865, 0750698608
(Annai Naga Food City அருகில் )
(4/3639)(3.14)

**A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு**
9 கணினி Diploma கற்கைகளுக்கு 100% Course fee free
Ms office, Hardware, Networking, Accounting Multimedia, Web Design, DTP, English, Singalam
Duration 1-2 Month only
**கணினி மையம் கல்வியங்காட்டில்**
**MCAI CAMPUS** 243, Adiyapatham Road
Qualified Lectures panel, 12 Years Experience Near Kalviyankadu Junction
பதிவுகளுக்கு உங்கள் Name & index no ஐ 775520940க்கு SMS அனுப்புங்கள்

**Personal Classes**

தரம் 6,7,8 & 9 மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளுக்கு மட்டும் நேரில் வந்து கற்பிக்கப்படும். (இம்முறை PROVINCIAL LEVEL EXAM ற்கு தோற்றும் மாணவர்களுக்கு 10 வருட Past Papers உடனடியாக மீட்டல் செய்து விடப்படும்.)
தொடர்புகளுக்கு: 0771022564 (23232)(3.14)

**nothern PC PARK**

**விசேட சலுகை**



- 3.0 Pentium Processer
- G41 Mother board
- 2GB Ram DDR III
- 160GB Hard Disk,
- Samsung DVD Writer
- ATX Cashing
- 19" LED Samsung Moniter,
- 650w UPS,
- Key Board,
- Optical Mouse,
- Speacker

39,000/=

Free Wifi Adapter

இன்றே நாடுங்கள்

Complete one Year Warrenty

# 269E, Palaly Road, Kantharmadam, Jaffna.
info@pcpark.co, www.pcpark.co
T.P: 077 7570124, 021 2220388

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த படித்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3.6.7)

**CIMA**
**கல்வி**
@
CAPSTONE
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

**TV கள் விற்பனை**

புதிய Sony (Ex.4/32) - 32", 26" TV கள் முழுகாட்சி திறன் கொண்டது (Full HD 1080) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0215100275
திருநெல்வேலி (23149)(3.6.7)

## மரண அறிவித்தல்

### இரத்தினகோபால் பமேலாதேவி



வேலணை கிழக்கு மணியகாரன் வீட்டடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினகோபால் பமேலாதேவி (பாமா) நேற்று (24.09.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - முத்தம்மா தம்பதி யரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இரத்தின கோபாலின் அன்பு மனைவியும், பவானந்தனின் அன்புச் சகோதரியும், செந்தூரன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயும், சஜிடாவின் பாசமிகு மாமியும், சயந், பானுயா, மகிஷா ஆகியோரின் பேர்த்தியும், சாந்தநாயகி, வசந்தநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை. (23287)(3.6.7)

தகவல்:
தம்பி, பிள்ளைகள்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள் Batch I - 24.9.2012 Batch II - 26.9.2012 Batch III - 29.9.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(c/3633)

ஆங்கிலத்தின் அறிவுக் களஞ்சியம் என போற்றப்படும்
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

**Young Learners for English (YLE)**
(வயதெல்லை : 7 - 12)
- British Council உடன் இணைந்து நடாத்தும் கற்கை நெறி
- இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
- Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

மாணவர்களின் ஆங்கில அறிவிற்கான சர்வதேச அடித்தளமாக இது கருதப்படுவதால் இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

Batch I 27.08.2012

Head Office: 30-1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
(c/3632)
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org